# பொருளியல் நோக்கு

செப். 1982






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பசளை நுகர்வும் யூரியா தொழிற்சாலையும்

ஏக்கருக்கான இலங்கையின் பசளைப் பாவனை ஆசியப் பிராந்தியத்தில் மிகக் கூடுதலானவற்றுள் ஒன்றாகும். நெற்சாகுபடிப் பிரதேசங்களில் விளைச்சல் தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ள போதிலும், பசளைப் பாவனைக்கும், ஏக்கருக்கான விளைச்சலுக்கும், மொத்த உற்பத்திக்குமிடையே ஒரே சீரான தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. மொத்தச் சாகுபடி நிலப்பரப்பும் இதில் ஒரு பிரதான காரணியாகும்.

இரசாயன உரங்களுக்கான ஒரு நம்பகமான மூலமாக இலங்கை தனக்கேயுரித்தான ஒரு உரக் கைத்தொழிலைக் கொண்டிருந்தால் மட்டுமே நாடு உணவில் சுய நிறைவடைய முடியும் என்ற ஒரு கருத்து நிலவி வருகிறது. இது தொடர்பான முயற்சிகள் 1950-ம் ஆண்டளவிலிருந்து நடைபெற்றுவந்த போதிலும் இறுதியில் 1976-ல் இலங்கை உர உற்பத்திக் கூட்டுத்தாபனம் 'கெலக் ஓவர்சீஸ் கோர்ப்பரேசன்' என்ற நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. வருடாந்தஉற்பத்தி இயலளவு 310,000 தொன்களைக் கொண்ட அமோனியா/யூரியா தொழிற்சாலையை நிர்மாணிப்பதே இவ்வொப்பந்தமாகும். இப்பக்கத்திலும் பின்புற உள் அட்டையிலும் சபுகஸ் கந்த யூரியா தொழிற்சாலையின் சில காட்சிகளைக் காண்கிறீர்கள்.





நாளொன்றுக்கு 545 தொன் உற்பத்தி ஆற்றல் கொண்ட அமோனியா தொழிற்சாலையின் விமானப்படத்தை மேலே இடது புறத்தில் இருக்கும் படம் காட்டுகிறது. பைகளில் இயந்திர மூலமாக யூரியா நிரப்பப்படுவதை மேல் வலது மூலையில் இருக்கும் படம் காட்டுகிறது. (கீழே) பையிலடைக்கப்பட்ட பசளை போக்குவாத்துக்காக வெளியே கொண்டு வரப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 8　　இதழ் 6　　செப்டம்பர் 1982

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## நிரல்கள்


| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக் குறிப்பேடு | 2 | ஜூன் 1982 |
| வியாபாரப் பொருள்கள் | 15 | கறுவா — ஏற்றுமதி மந்தம் |
| சுற்றுலாத் துறை | 16 | ஹோட்டல் துறை விஸ்தரிப்பு |
| கைத்தொழில் | 18 | இறக்குமதிகளின் போட்டியும் கைத்தறித் துறையும் |
| குடிபெயர்வு | 20 | கிராமப்புற சட்டவிரோத குடி பெயர்வு |


## விஷேச அறிக்கை


| | | |
|---|---|---|
| | 3 | உரப் பாவனையும் விவசாயமும் |


## சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| எஸ். பீ. பெர்ணண்டோ | 22 | மகாவலித் திட்டம் ஒரு பரம்பரைக் கிராமத்தின்மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் |
| எல். ஜி. ஜயவர்தன ரீ. அத்தபத்து | 29 | மருந்துப் பொருள் இறக்குமதி — விலைகள் பற்றிய ஓர் ஆய்வு |


'பொருளியல் நோக்கின்' ஜனாதிபதி தேர்தல் குறித்த கடந்த இதழ் 1982 ஆகஸ்ட் மாதத்துக்குரியதாகும். எனினும், புற அட்டையில் தவறுதலாக 'செப். 1982' என அச்சிடப்பட்டிருந்தது. இத்தவறுக்கு வருந்துவதுடன், அதனை 'ஆகஸ்ட் 1982' எனத் திருத்திக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

## அடுத்த இதழில்

- புள்ளி விவரங்கள் தெரிவிப்பதென்ன? ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் பற்றிய பரிசிலனை
- திறந்த பொருளாதாரமும், பணவீக்கமும் — இலங்கை அனுபவம்
- உலக வர்த்தகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல்
- தென் ஆபிரிக்க இனவாதம்

## அட்டைப் படம்

இந்த இதழுக்கான அட்டைப் படத்தை வரைந்தவர்: ஜீ. பீ. அத்துலத் முதலி

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## ஜூன்

1. இலங்கை மின்சார சபை அதன் நேரடி வலுப் பாவனையாளர்களுக்கான புதிய மாதாந்த தீர்வை, கட்டண விகிதங்களை அமுல் படுத்தத் தொடங்கியது. தீர்வைகளில் செய்யப்பட்ட அதிகரிப்பு 8 இலிருந்து 73 சதவீதம் வரையில் இருந்தது.

3. இலங்கைக்கும் ரூமேனியாவுக்கும் இடையிலான ஒரு முதலீட்டுப்பாதுகாப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை இத்தகைய ஒப்பந்தமொன்றை ஒரு சோஷலிச நாட்டுடன் செய்து கொள்ளும் முதல் தடவை இதுவாகும். இதுவரையில் ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், தென் கொரியா, சிங்கப்பூர், மலேஷியா, பெல்ஜியம் சுவீடன், சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

4. ஸ்பெயின் புள்ளி விவர நிறுவனம் மாட்ரிட்டில் வெளியிட்ட தரவுகளின் பிரகாரம் இவ்வருட மார்ச் இறுதியில் ஸ்பெயினில் வேலையற்றிருந்தோரின் எண்ணிக்கை 2.062600 ஆகும். இது ஸ்பெயின் இதுவரை அனுபவித்த உச்சமட்ட வேலையின்மை நிலை எனவும், ஊழியர் படையில் 15.9 சதவீதம் என்றும் 'பினான்சியல் டைம்ஸ்' சுட்டிக்காட்டியுள்ளது.

7. இலங்கை — கனேடிய அரசாங்கங்கள் பரிமாறிக் கொண்ட ஆவணங்களை அடுத்து இலங்கையில் கனேடிய முதலீடுகள் தொடர்பான பாதுகாப்பு ஒப்பந்தம் அமுலாக்கம் செய்யப்பட்டது.

8. காலிமுகத்திடலில் ரூ. 70 கோடி செலவில் அமைக்கப் படவிருக்கும் சொரடன் ஹோட்டல் தொடர்பான நிர்மாண ஒப்பந்தம் சுவிட்ஸர்லாந்தில் இருக்கும் ஓர் இத்தாலிய கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ளது. நிர்மாண வேலைகள் இவ்வருட இறுதியில் தொடங்கப்படும்.

அவுஸ்திரேலியா இலங்கைக்கு அவசரகால உணவு உதவியாக 26 லட்சம் அ. டொலர் பெறுமதியான 14,200 தொன் கோதுமை மாவை வழங்குமென வெளிநாட்டு அமைச்சு அறிவித்தது.

14 சீனி கிலோ ஒன்றுக்கான உணவு ஆணையாளரின் மொத்த விலை ரூ. 13/70 இலிருந்து ரூ. 11.00 ஆக குறைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது

சுங்கத் தரவுகளின் பிரகாரம் 1978ம் வருடத்திலிருந்து நாட்டுக்குள் சுமார் 148,000 டி. வி. பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும், அவற்றுள் சுமார் 120,000 பெட்டிகள் தற்பொழுது பாவனையில் இருப்பதாகவும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

15. மக்கள் வங்கி நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களை குறைத்தது. ஒரு வருட கால நிலையான வைப்புமீது செலுத்தப்பட்ட வட்டி 20 சதவிதத்திலிருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டது.

17. ஏசியன் அமைப்பில் அங்கத்துவம் கோரிய இலங்கையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பதாக சிங்கப்பூரில் அறிவிக்கப்பட்டது. தென் கிழக்காசிய நாடுகளுக்கான இந்த அமைப்பில் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய ஐந்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

1981ம் வருட 73ம் இலக்க பாதை அபிவிருத்தி அதிகார சபை சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பாதை அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட பாதை அபிவிருத்திச் செயல் திட்டங்களை தொகுத்து அமுலாக்கம் செய்வது இவ்வதிகார சபையின் பிரதான பணிகளுள் ஒன்றாகும்.

21. ஆசிய, பசுபிக் பிராந்திய சமூக, பொருளாதார கமிஷன் (எஸ்கபே) நாடுகளுக்கான மனித உரிமைகள் மீதான முதல் ஐ. நா. கருத்தரங்கை இலங்கை மன்றக் கல்லூரியில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்கள். எஸ்கபே அமைப்புக்கு வெளியே இருக்கும் பிரிட்டன், ஐ. அ., சோவியத் ரஷ்யா, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 35 நாடுகள் இக் கருத்தரங்கில் பங்குபற்றின.

28. வரட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியாக இலங்கை ரூ. 2 கோடி பெறுமதியான 15,60,000 மீன் புட்டிகளைப் பெற்றுக்கொண்டது.

இந்தியாவின் தென் கீழ் கரையில் அமைந்திருக்கும் கிருஷ்ணா — கோதவரி வடிநிலத்தில் எண்ணெய் கிடைக்கக் கூடிய திடமான அறிகுறிகள் தென்பட்டிருப்பதாக இந்திய பெட்ரோலிய அமைச்சர் தெரிவித்தார். இதே வேளையில் இந்திய உத்தியோகபூர்வமான குழுவொன்று வாஷிங்டனில் இத்திட்டம் குறித்த உலக வங்கிக்கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

29. ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா அநுராதபுரத்தில் அதன் கிளையொன்றை திறந்து வைத்தது. இலங்கையில் இயங்கும் ஒரு வெளிநாட்டு வங்கி கொழும்புக்கு வெளியே ஒரு கிளையை நிறுவிய முதற்றடவை இதுவாகும்.

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, தனியார் துறை, அரசாங்கம் ஆகியன மேற்கொள்ளவிருக்கும் இரண்டாவது தேயிலைப் புனருத்தாரணச் செய்திட்டத்துக்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கம் வழங்கவிருக்கும் 41.8 கோடி ரூபா கடனுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

30. ஆஸ்திரேலியாவில் போதிய களஞ்சிய வசதிகள் இல்லாததன் காரணமாக அவர்கள் சர்வதேச சந்தைகளில் கோதுமையைக் கொண்டு போய்க் குவித்துள்ளனர் என்ற அமெரிக்க கருத்தினை ஆஸ்திரேலிய கோதுமைச் சபை மறுத்துள்ளது.

மக்கள் வங்கி ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு நிலையான வைப்புகளை ஏற்றுக்கொள்வதை நிறுத்தி விட்டது. ஆனால் இந்த ஆறுமாதகால வைப்புகளுக்கு 13 சதவிகித வட்டி வழங்கப்படுமென அது அறிவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரப்பாவனையும் விவசாயமும்

உரங்களிலும் உயர்விளைச்சல் தரும் நெல்லினங்களிலும் இன்று, குறிப்பாக இலங்கையின் கொள்கை வகுப்போரும் பயிர்ச்செய்கையாளரும் விவசாய சமூகத்தினரும் மிகுந்த அக்கறை செலுத்தி வருகின்றனர். இம்மாத ஆரம்பத்தில் பிரபல காலைத் தினசரியொன்று இவ்விஷயங்கள் தொடர்பான மூன்று முக்கிய செய்திகளை ஒரே நாளில் வெளியிட்டமை தற்போதைய அக்கறையை எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

விவசாயிகள் இப்பொழுதுள்ளதைவிட நல்ல வாழ்க்கைத் தரத்தை எய்துவதற்கு பயிர்களிலிருந்து உயர் விளைச்சலைப் பெற வேண்டியுள்ளதென்றும், பொருளாதார சாதனையை உயர்த்தி, பெரும்பாலான மக்களின் சேமநலத்தையும் சரியான போஷாக்கையும் உறுதிப்படுத்த நாட்டுக்கு விவசாயத் துறையிலிருந்து பாரிய பங்களிப்பு தேவைப்படுகிறதென்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. விவசாய உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இதையெல்லாம் சாதிக்க முடியும். இந்த உற்பத்தி அதிகரிப்பு உர உள்ளீடுகளின் அதிகரித்த பாவனையிலேயே தங்கியிருக்கிறது.

இந்த வாதம் தர்க்கரீதியாக மிக நியாயமாகத் தோன்றுகிறது. எனவே, பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ள நாடுகள் சிலவற்றில் இது பல்வேறு அளவில் வெற்றி பெற்றுள்ளது. எனினும், ஒரு நாட்டுக்குப் பொருந்தும் ஒரு விஷயம் இன்னொரு நாட்டுக்குப் பொருந்தவேண்டியதவசியமில்லை. எனவே, இலங்கையின் விஷயத்திலோ அல்லது இந்தியாவின் விஷயத்திலோ இந்தத் தர்க்க நியாயம் அவ்வளவு சுலபமானதாயிருக்கவில்லை. இது புதிய தொழில் நுட்பவியல்களை அறிமுகப்படுத்தும் ஒரு விஷயம் மட்டுமல்ல. ஆனால், அதைவிட முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளன 'நோக்கின்' இந்த இதழுக்கான விசேஷ அறிக்கை இது தொடர்பான அம்சங்களை பரிசீலனை செய்கிறது.

கடந்த இரு தசாப்தங்களின் போது இலங்கையில் உர உபயோகம் துரிதமாக வளர்ந்து வந்துள்ளது. அதே வேளையில் நெல் போன்ற பயிர்களின் விளைச்சலும், சாகுபடி செய்யப்படும் காணிகளின் ஏக்கர் பரப்பும் இடையறாது அதிகரித்து வந்துள்ளன. இந்த நிகழ்வுப் போக்கில் **உரம்** எவ்வாறு உதவியுள்ளது? யாருக்கு உதவியுள்ளது? போன்ற விஷயங்களை ஆராய்வது பொருத்தமுடையதாகும்.

### எருவும் வளமும்

விவசாயம் தோன்றிய தொன்மைக் காலத்திலிருந்தே எருவும் கலவை உரங்களும் (செயற்கைப் பசளைகள்) மண்ணின் செழுமையை அதிகரிக்கின்றன அல்லது நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட இரசாயன மூலகங்களை மாற்றீடு செய்கின்றனவென்பது அறியப்பட்ட தொன்றாகும். பண்டைக் காலத்திலே பூர்வ மனிதன் நிலத்தில் செழுமை இல்லாவிட்டால் குறிப்பாக நைதரசன் (உப்பு வாயு) இல்லாதிருந்தால் புதிய காணிக்குப் பெயர்வதன் மூலம் நிலைமையைச் சமாளித்தான். இது அவனுக்குத் தேவையான விளைச்சலைப் பராமரிப்பதற்கும், தனது கிரமமான உணவுப் பொருள்களைப் பெறுவதற்கும் ஒரு சுலபமான, பயனுறுதி வாய்ந்த முறையொன்றை வழங்கியது. எனினும், நீண்டகாலத்தில் இம்முறை தோல்வியடைந்தது. ஏனென்றால், ஜனத்தொகை அதிகரித்ததுடன் காணிகளுக்கும் பெறுமதி ஏற்படத் தொடங்கிவிட்டது. விவசாயிகள் பயிர்க்காணிகளுக்கு வளத்தை மீளளிப்பதற்குரிய வழிவகைகளைத் தேடத் தொடங்கினர். அதே சமயத்தில் சில தாவரங்கள் நிலத்தில் அனுகூலமான பயன் உண்டாக்குவதையும் கண்டுபிடித்தனர். ஆதிகாலத்திலே சுழல் முறைப் பயிர்ச்செய்கை **மேற்கொள்ளப்பட்டதாக** வேடர்கள் குறித்துவைத்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். மேலும், மண்ணின் செழுமை உயர் மட்டங்களில் வைக்கப்படுவதற்காகக் குப்பை கூளங்களும், தேவையில்லாத கழிவுப் பொருள்களும் மீண்டும் நிலத்தில் கொட்டப்பட்டன. இவற்றை நிலம் உறிஞ்சி உட்கிரகித்துக் கொண்டது.

மண்களினதும் பயிர்களினதும் இரசாயனவியல் அறியப்படுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே சேதனப் பசளைகள், பிரதானமாகத் தாவரக் கழிவுகளும் பொடியாக்கப்பட்ட எலும்புகள், மரச் சாம்பல், வெடியுப்பு, மீன்கழிவுகள் போன்ற மற்றும் பல்வேறு பொருள்களும் உபயோகிக்கப்பட்டன. இரசாயன அறிஞர்கள் பதினெட்டாம் நூற்றுண்டின் நடுப் பகுதியிலிருந்துதான் தாவரங்களின் போசணையைப் பற்றி விஞ்ஞானபூர்வமாக ஆராயத் தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் முடிவில் பசளைகளின் அத்தியாவசிய மூலகங்களைப் பற்றிய ஆராய்ச்சி ஊக்கம் பெறத் தொடங்கியது. ஆனுல், உரங்களைப் பிரயோகிக்கச் சிறந்த சமயம் என்ன, அவற்றை என்ன விகிதத்தில் பிரயோகிக்க வேண்டும், அவற்றை எந்த முறைப்படி பிரயோகிக்க வேண்டும் என்பது பற்றியும் தற்கால இரசாயன உரங்களின் அபிவிருத்திக்கு அடிகோலிய சூத்திரங்கள் பற்றியும் இந்நூற்றுண்டு ஆரம்பத்திலிருந்துதான் ஆராய்ச்சிகள் துரிதமடைந்தன.

கடந்த நூற்றுண்டுகளில் தாவர வளர்ச்சியையும் போசணையையும் அறிந்து கொள்வதில் முக்கிய அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக, 1880களின் மத்தியில் தாவரங்கள் காற்றிலிருந்து நைதரசனைக் கிரகிப்பதற்குப் பதிலாக, மண்ணிலிருந்தே நைதரசனைக் கிரகிக்கின்றனவென்பது அறியப்பட்டது. இந்தக் கண்டுபிடிப்பு எருக்களால் வழங்கப்படும் நைதரசனின் உபயோகத்துக்கு வழிகோலியது. விருத்தி செய்யப்பட்ட உரங்களில் (நைதரசனுக்காக) பசுந்தாட்பசளைகள், (பொசுபரசுக்காக) எலும்புகள், (பொட்டாசியத்துக்காக) சாம்பல் ஆகியன சிலவாகும். சேதனப் பசளைகளில் பசுந்தாட்பசளைகள், விலங்கு உரங்கள், பயிர்ப்பசளைகள், கலவை உரங்கள் ஆகியனவும் அடங்கும்.

போதிய உர உள்ளீடுகளை உபயோகிக்காமல் உயர்விளைச்சல் தரும் நெல்லினங்களை விரிவான அளவில் பயிரிட்டால், வெகுவிரைவில் வயல்கள் பாழ் நிலங்களாகிவிடக்கூடிய அளவுக்கு மண்ணிலுள்ள நுண்போசனைப் பொருள்கள் உறிஞ்சப்பட்டுவிடக் கூடும் என விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கிறுர்கள்

திணைக்களத்தின் கன்னொறுவ ஆராய்ச்சி நிலையத்திலுள்ள ஒரு மண்வள நிபுணர் நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இது ஏற்கெனவே நடைபெறறு வருவதாக ஒரு சில தினங்களுக்கு முன்பு விவசாய அமைச்சைச் சேர்ந்த ஒரு குழுவிடம் தெரிவித்தார்.

இப் பிரதேசத்திலுள்ள நெல் வயல்களிலிருந்து எடுக்கப்பட்ட மண் மாதிரிகள் இப்பொழுது பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. இப் பரிசோதனைகள் முடிவடைந்ததும் நிலத்தில் நுண் போசனைப் பொருள்களை மீண்டும் இடுவதற்கு என்ன செய்யப்படவேண்டுமென்று அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறப்படும்.

(டெயிலி நியூஸ் பக்கம் 1—ஆகஸ்ட் 5, 1982)

சர்வதேச நெல் ஆராய்ச்சிக் கழகம் தென்கிழக்கு ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள உயர் விளைச்சல்தரும் நெல்லினங்களில் சிறந்தவையென பிஜி 367—4, பிஜி 367—7 ஆகிய இரு நெல்லினங்களை இலங்கையிலிருந்து தெரிவு செய்துள்ளது. மேற்குறித்த நெல்லினங்கள் பத்தலகொடையிலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் விருத்தி செய்யப்பட்டன

இரு நெல்லினங்களும் ஏக்கருக்கு 200 புசல் வரை ஆகக்கூடிய விளைச்சலைத் தரவல்லவை; கபில பயிர்த்தத்தி, பொன்வண்டு ஆகிய பீடைகளால் உண்டாக்கப்படும் நோய்களை எதிர்த்து நிற்கும் பேராற்றல் வாய்ந்தவை. ஆசியாவின் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு; மேற்குப் பகுதிகளிலும், அத்துடன் வட ஆபிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் விரிவான அளவில் பரீட்சைகள் நடத்தப்பட்டதற்குப் பின் பிஜி 367—4, பிஜி 367—7 ஆகிய நெல்லினங்கள் தெரிவு செய்யப்பட்டன. இப்பரீட்சைகள் பதினைந்து நாடுகளில் இருபத்திரண்டு இடங்களில் நடத்தப்பட்டன. இந்தியாவிலும் கொரியாவிலும் தாய்லாந்திலும் விருத்தி செய்யப்பட்ட அநேக நெல்லினங்கள் அவற்றின் விளைச்சல் திறனுக்கும், பீடைகளால் உண்டாக்கப்படும் நோய்களையும் பற்றீரியாக்களால் (கிடாணுக்கள்) உண்டாக்கப்படும் வெளிறல் நோயையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலுக்கும் பரிசோதிக்கப்பட்டன...

(டெயிலி நியூஸ் பக்கம் 9—ஆகஸ்ட் 5, 1982)

வெளி நாட்டு நாணயத்தில் 18.4 கோடி ரூபா பெறுமதியுள்ள 50,000 தொன் யூறியா (சிறு நீருப்பு)வை ஏற்றுமதி செய்வதற்கு அரசினர் உர உற்பத்திக் கூட்டுத்தாபனம் பர்மா விவசாயக் கூட்டுத்தாபனத்துடன் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை முடித்துள்ளது என்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் நேற்றுக் கூறினுர்.

“முதல் முறையாக நாடு யூறியாவை ஏற்றுமதி செய்கின்றது. ஏற்கெனவே 19,000 மெட்ரிக் தொன் கப்பலேற்றப்பட்டுள்ளது. பெரும் போகம் ஆரம்பமாவதுடன் உள்நாட்டுக் கோரிக்கை அதிகரிக்கும் சமயமான அக்டோபருக்கு முன்பு கட்டளையை நிறைவேற்றி விடலாமென்று நாம் எதிர்பார்க்கிறேம்’ என்று அவர் கூறினுர்.

சபுகாஸ்கந்தையிலுள்ள ஊத் தொழிற்சாலை முழு உற்பத்தித் திறனுடன் வேலை செய்யும் போது ஆண்டொன்றுக்கு 31,000 மெட்ரிக் தொன்களை உற்பத்தி செய்யவல்லது. அப்படியிருக்க, ஆண்டொன்றுக்கு உள்நாட்டுத் தேவைகள் ஏறக்குறைய 150000 மெட்ரிக்தொன்களாகும்...
(டெயிலி நியூஸ் பக்கம் 1—ஆகஸ்ட் 5, 1982)

## சேதனப் பசளைகளும் அசேதனப் பசளைகளும்

பசளைகள் எனப்படுபவை பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்காக மண்ணில் இடப்படும் பொருள்களாகும்; இவை தாவரங்களின் அத்தியாவசிய போசணைப் பொருள்களாயுள்ள மூலகங்களில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ வழங்குகின்றன. வளர்ச்சி—அழுகல் வட்டத்தில் தாவரபோசணைப் பொருள்களை அதிகரிப்பதன் மூலம் அவை மண் வளத்தை உயர்த்துகின்றன. பயிர்களுக்குத் தேவையான போசணைப் பொருள்கள் மண்ணிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களால் எடுக்கப்படுகின்றன; வேர்கள் உறிஞ்சிச் சேர்த்துவைக்கும் கரைகின்ற போசணைப் பொருள்களின் இருப்பை நிறைவாக்குவதில் மூன்று மூலங்கள் முக்கியமாகும்—(1) நீர் (11) மண் சேமிப்புகள் (111) பசளைகள். பயிர்கள் போசணைப் பொருள்களுக்கு இயற்கை மூலங்களைப் பெருமளவுக்கு நம்பியிருக்கும் இடங்களில், மழை அல்லது நீர்ப்பாசனம் மதிக்கத்தக்க விகிதத்தை வழங்கக்கூடும். ஆனால் 1960களுக்குப் பின் நவீன தாவரத் தொழில்நுட்பவியல் தோன்றியதுடன் பசளைகள் ஒரு முக்கியமான பங்காற்றத் தொடங்கின. இன்று நீரும் விதைகளும் பசளைகளுமே உயர் விளைச்சல் தரும் புதிய தொழில்நுட்பவியலின் இதயமாக அமைந்துள்ளன.

தாவரங்களிலிருந்தும் விலங்குகளிலிருந்தும் கிடைக்கும் கழிவுப் பொருள்கள், சக்கைகள், எச்சசொச்சங்கள் போன்ற சேதனப் பசளைகள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பயிர்க் காணிகளை வளப்படுத்துவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. எருவைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட கழிவுப் பொருள்களை அல்லது மலம் மூத்திரம் போன்ற கழிவுகளை உண்டாக்கிய பயிர்களை வளர்க்க ஏற்கெனவே பயன்பட்ட போசணைப் பொருள்களை அவை வழங்குகின்றன. எனினும், இரசாயன உரங்கள் அல்லது அசேதனப் பசளைகள் மேலதிக போசணைப் பொருள்களை வழங்குவதுடன் மண்களிலிருந்து கிடைக்கும் போசணைப் பொருள்களைச் சார்ந்திருக்க வேண்டாத நிலையைக் குடியானவர்களுக்கு ஏற்படுத்துவதும் கண்டறியப்பட்டது. பசளைகளை வாங்க முடியுமாயின், மண்களின் இயற்கைச் செழுமையால் விளைச்சல்கள் வரையறுக்கப்படத் தேவையில்லையென்பதை விவசாயிகள் கண்டனர். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்நூற்றுண்டிலே துரிதமாக விரிவடைந்து வந்த இரசாயனக் கைத்தொழில் செயற்கைப்பசளைகளிலுள்ள இலாப வாய்ப்பைக் கண்டது விரைவிலே, செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த உரங்கள் சேதனப் பசளைகளைவிட எவ்வளவோ அதிகமான தாவரப் போசணைப் பொருள்களை வழங்கி வந்தன.

சேதனப் பசளைகள் உயிரினவியல் நடவடிக்கைகளை வளர்த்து, மண்ணில் அடங்கியுள்ள போசணைச் சத்துக்களை விருத்தி செய்கின்றனவென்பது உண்மை. ஆனால், அவற்றின் உபயோகத்துக்குச் சில வரையறைகள் உள்ளன. இரசாயன உரங்களுடன் ஒப்பிடுமிடத்து, போசணைப் பொருள்களைப் போதிய அளவில் வழங்க இந்த எருக்கள் பெருமளவில் தேவைப்படும். அத்துடன், சேதனப் பசளைகளில் சில குறிப்பிட்ட போசணைச் சத்துக்கள் இல்லாதிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, சமச்சீரற்ற பசளைகளை நிறைவாக்க, தகுந்த வர்த்தக உரங்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மேலும், சேதனப் பசளைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பகுதிப் பொருள்களைப் பெருமளவில் சேகரித்து, எரித்து, உக்கவைப்பது ஓர் இயலாத காரியமாகிவிட்டது. அத்துடன், சேதனப் பசளைகளைப் பெருமளவில் பிரயோகிப்பதும் நடைமுறையில் சாத்தியமற்றதாகிவிட்டது. ஜனத்தொகை வளர்ந்து வருவதாலும், ஒன்றுவிட்டு ஒரு நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட்டுவரும் காணிகளின் பரப்பு வரையறுக்கப்பட்டதாயிருப்பதாலும், காணிகளைச் செறிவாக உபயோகிப்பதும் உயர்விளைச்சல்தரும் பயிரினங்களைச் சாகுபடி செய்வதுமான வழி முறையை மேற்கொள்வதே தர்க்க ரீதியான பரிகாரமாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தாவரப் போசணைப் பொருள்களை அதிகரித்த அளவில் பிரயோகிப்பது அவசியமாகும். எனவே, தாவரப் போசணைப் பொருள்கள் அபரிமிதமான அளவிலும் மிகச் செறிந்த உருவங்களிலும் கிடைக்க வேண்டும். இதனாற்றான் செறிந்த இரசாயன உரங்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் எழுகிறது.

அசேதனப் பசளைகளை (வர்த்தக அல்லது இரசாயன உரங்கள்) உபயோகிப்பதற்குப் பதிலாகச் சேதனப் பசளைகளை உபயோகிப்பது தொடர்பாக சர்ச்சைக்கிடமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களுக்குப் பதிலாகச் சேதனப் பசளை உபயோகிப்பதில் அனுகூலங்கள் உண்டு என்பதே இதற்குப் பிரதான காரணம். மேற்குறிப்பிட்ட காரணங்களின் விளைவாகச் சேதனப் பொருள்களை உபயோகிக்க முடியாதிருப்பதாலும், துரிதமாக வளர்ந்து வரும் ஜனத்தொகையின் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டிய அவசியத்தினாலும், இரசாயனத் திரவைகளின் விற்பனையைப் பெருக்கும் முயற்சிகள் செயலூக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், தவிர்க்க முடியாதவாறு இரசாயன உரங்களின் உபயோகம் துரிதமாகப் பரவி, சேதனப் பசளைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டன.

## சேதனப் பசளைகளும் மண் வளமும்

இலங்கையில் நடைபெறும் நெற்பயிர்ச் செய்கை பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சிப் பரிசீலனைகளிலிருந்து, உயர் விளைச்சல் தரும் இனங்கள் அறிமுகஞ் செய்யப்படுவதற்கு முன்பு பெரும்பாலான இடங்களிலுள்ள விவசாயிகள் சேதனப் பசளைகளையே உபயோகித்தனர். உயர் விளைச்சல் தரும் இனங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டதன் விளைவாக விவசாயிகள் இரசாயன உரங்களுக்கு மாறி, பயிர்களின் உச்சியில் இரசாயன உரங்களை இடுவது போன்ற புதிய வழக்கங்களை மேற்கொண்டதுடன் மட்டுமன்றி, இரசாயன உரங்களின் உபயோகமும் அதிகரித்துவிட்டது. நெற் பயிர்த் துறையில் உரங்களின் உபயோகம் 1960ம் ஆண்டில் ஏறக்குறைய 5,000 தொன்கள் (இது இவ்வுரங்களில் அடங்கியுள்ள தாவரப் போசணைப் பொருள்களின் அடிப்படையில்). ஆனால், 1980ம் ஆண்டில் இது ஏறக்குறைய 85.000 தொன்களுக்கு அதிகரித்துவிட்டது.

இலங்கை இரசாயன உரத் தேவைகளில் பெரும் பகுதியை இறக்குமதி செய்கின்றது. 1980ம் ஆண்டில் இந்நாட்டில் சாகுபடி செய்யப்பட்ட பல்வேறு பயிர்களைப் போசிப்பதற்காக 133.3கோடி ரூபா பெறுமதியான 285,000 தொன்கள் வரை இறக்குமதி செய்யப்பட்டன. விவசாயத்தை இரசாயனமாக்கும் இச்செயலைக் கைவிட்டு, சேதனப் பசளைகளை உபயோகிக்கும் பயிர் வளர்ப்பு முறைகள் கைக்கொள்ளப்பட வேண்டுமென விஞ்ஞானிகள் பல்லாண்டுகளாக வற்புறுத்தி வந்துள்ளனர்.

மிகச் சமீபத்தில் திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த டாக்டர் மெர்வின் டீ சில்வாவும் எஸ். எச். பெர்டினன்ட்சும் இவ்விஷயம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்றில் இதை வலியுறுத்தினர்.

நைதரசன் பசளைகள் சேதனப் பசளைகளாக இருந்தாலும் சரி அல்லது அசேதனப் பசளைகளாக இருந்தாலும் சரி தேயிலை (தரச் சிறப்பைப் பொறுத்தவரை) யின் மீது ஏற்படும் விளைவுகளில் அவை இரண்டுக்குமிடையே எத்தகைய வித்தியாசங்களுமில்லையென்று தலவாக்கொல்லையிலுள்ள தேயிலை ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றிய ஈடன் என்பார் 1937ம் ஆண்டில் செய்முறையில் எடுத்துக் காட்டினார். பின்னர், 1946ம் ஆண்டில் லுணுவிலையிலுள்ள தெங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றிய சல்காடோ என்பவர், கடலைப் பிண்ணாக்கு, மற்றிரு இரசாயன உரங்களுடன் ஒப்பிடுகையில் நைதரசனைப் பெறுவதற்குச் சமப் பயனுள்ள மூலமாக விளங்குகிறதென்று எடுத்துக் காட்டினார்.

“இந்தக் கண்டுபிடிப்புக்கள் ஒரு புறமிருக்க, அசேதனப் பசளைகளை உபயோகிப்பதன் மூலம் பெறப்பட்ட விளைச்சல்கள் அசாதாரண அளவுக்கு அதிகரித்ததனாலும் வர்த்தகக் கம்பெனிகள் அசேதனப் பசளைகளின் விற்பனையைப் பெருக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகளாலும் அசேதனப் பசளைகளை உபயோகிப்பதற்கான கூப்பாடு அதிகரித்து, சேதனப் பசளைகளும் அச்சமயத்தில் நடைமுறையிலிருந்த பாரம்பரிய வழக்கங்களும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன” என்ற மூலவுண்மை இவ்விரு நூலாசிரியர்களும் அண்மையில் வெளியிட்ட ஆராய்ச்சியறிக்கைகளால் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டது.

1975ம் ஆண்டில் பாலகிருஷ்ண மூர்த்தி என்பார் நடத்திய நீண்டகால பரிசோதனையொன்று, சேதன மூலங்கள் மீனுரம் எலும்புரம் கால்நடை எரு ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், அம்மோனியா சல்பேட், சாபோஸ் பொஸ்பேட் ஆகிய உருவிலுள்ள நைதரசனினதும் பொஸ்பரஸினதும் அசேதன மூலங்களுக்கு இடையே எந்தக் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தையும் காட்டவில்லை. இது, முன்னர் அவதானிக்கப்பட்டவற்றை ஊர்ஜிதம் செய்தது. இப்பரிசோதனை இடைநிலை மழைவீழ்ச்சியுள்ள பிரதேசத்திலிருக்கும் மணற்பாங்கான ஈரக்களிமண் நிலத்தில் நடத்தப்பட்டது.

பசுந்தாட் பசளை பிரயோகிப்பதன் மூலம் நெற்பயிருக்கு இடப்படும் அசேதனப் பசளைகளை கணிசமான அளவுக்குக் குறைக்க முடியும் என்று நாகராஜாவும் அமரசிரியும் (1977) மிக அண்மையில் எடுத்துக் காட்டினர்.

## இலங்கையில் இரசாயன உரங்கள் உபயோகிக்கப்படும் முறை

இலங்கை பிரதானமாக ஒரு விவசாய நாடாக விளங்குகிறது. விவசாய நடவடிக்கைகளை விரிவாக இரு துறைகளாக வகைப்படுத்தலாம்: முதலாவதாக, ஏற்றுமதி செய்யப்படும் பணப் பயிர்களின் துறை. இதில் மூன்று முக்கிய பணப் பயிர்களான தேயிலை ரப்பர் தேங்காய் ஆகியனவும் கோப்பி, கொக்கோ, வாசனைத் திரவியங்கள், புகையிலை முதலிய பரந்த வகையான சிறு ஏற்றுமதிப் பயிர்களும் அடங்கும்; இரண்டாவதாக உள்நாட்டு விவசாயத் துறை. இதில் பிரதானமாக உள்நாட்டு நுகர்வுக்காகச் சாகுபடி செய்யப்படும் உணவுப் பயிர்களே அடங்கியுள்ளன.

ஏற்றுமதி செய்யப்படும் பணப் பயிர்கள் துறையைப் பொறுத்தவரை, கடந்த 15 ஆண்டுகளாக முக்கிய பயிர்கள் எதனின் மொத்த உற்பத்தியிலும் எந்தக் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளும் பதிவு செய்யப்படவில்லை; சாகுபடி செய்யப்படும் நிலப் பரப்பில் கவனிக்கத்தக்க அதிகரிப்போ அல்லது இந்தப் பயிர்களின் விளைதிறனில் எவ்வித அபிவிருத்தியோ காணப்படவில்லை. மற்றத் துறையைப் பொறுத்த வரை, குறிப்பாக நெல் உற்பத்தியில் 1960களின் பிற்பகுதியிலிருந்து கணிசமான அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன. எனினும், இந்த அபிவிருத்தி பிரதானமாகச் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பை அதிகரித்ததன் மூலமே சாதிக்கப்பட்டது. 1968ம் ஆண்டுக்கும் 1978ம் ஆண்டுக்குமிடையே ஏக்கர் ஒன்றின் நெல் விளைச்சல் உண்மையில் எந்த அதிகரிப்பும் காணாது தேக்க நிலையிலேயே இருந்து வந்துள்ளது. 1970ம் ஆண்டில் ஏக்கர் ஒன்றுக்கு 51.3 புசல் நெல் பெறப்பட்டது: 1978ம் ஆண்டில் இது 50.7 புசலாக இருந்துள்ளது.

விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்றில் சாகுபடியிலுள்ள நிலப்பரப்பை விரிவாக்குவதன் மூலமோ அல்லது தற்போது சாகுபடி செய்யப்படும் காணியில் உற்பத்தியைத் தீவிரமாக்குவதன் மூலமோ இதைச் செய்ய முடியும். இலங்கையில் ஏற்றுமதிப் பயிர்த் துறையைப் பொறுத்த வரை, கிடைக்கும் காணிகள் வரையறுக்கப்பட்டனவாகவே உள்ளனவென்று கண்டுபிடிக்கப்பட்டது; இதே வேளையில் உள்நாட்டு விவசாயத்துக்குக் காணிகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியும்.

அட்டவணை—1

நெல் உற்பத்தியும் ஏக்கர் பரப்பும் விளைச்சலும் 1969—1978

| வகை | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி (கோடி புசல்கள்) | 6.5 | 7 7 | 6 7 | 6.3 | 6.3 | 7.6 | 5.5 | 6 0 | 8 4 | 9.6 |
| அறுவடையான ஏக்கர் பரப்பு ('000) | 1,539 | 1.776 | 1,714 | 1,579 | 1.660 | 1,969 | 1,476 | 1.570 | 1,933 | 2,074 |
| ஏக்கர் ஒன்றின் விளைச்சல் (புசல்கள்) | 50.33 | 51.30 | 45.91 | 46.87 | 44.58 | 45.65 | 44.04 | 44 91 | 48.92 | 50.70 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, 1978 — பக்கம் 21.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை—2

பயிர்வாரியாக உரங்கள் உபயோகம் (1000 தொன் கணக்கில்)

| பயிர்கள் | 1945 | 1946 | 1947 | 1948 | 1949 | 1950 | 1951 | 1952 | 1953 | 1954 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை | 52.0 | 50.0 | 52.8 | 75.2 | 86.8 | 92.3 | 106.0 | 97.1 | 106.1 | 121.1 |
| ரப்பர் | 16 5 | 14.9 | 11.0 | 11.8 | 12.3 | 13.6 | 18.2 | 17.3 | 17.1 | 17.1 |
| தெங்கு | 5.8 | 7.3 | 7 5 | 12.4 | 12.2 | 13.6 | 15 6 | 13.7 | 15.4 | 16.4 |
| நெல் | 3.9 | 3.4 | 1.8 | 3.7 | 1.8 | 2 6 | 4 5 | 6.0 | 6.4 | 9.4 |
| மற்றவை | 2.8 | 1.9 | 2 4 | 3.4 | 3.4 | 4.2 | 5.1 | 6.0 | 6.2 | 7.5 |
| மொத்தம் | 81.0 | 77.5 | 75.5 | 106.5 | 116 5 | 126.2 | 149.4 | 139.1 | 151.2 | 171.5 |

ஆதாரம்: விவசாயக் கணக்கீடு — 1952 குடிஜன மதிப்பு — புள்ளி விவரத் திணைக்களம்.

ஆனால், குறுகிய காலத்தில் இப்படி ஏற்பாடு செய்ய முடியாத நிலை. எனவே, தற்போது சாகுபடி செய்யப்படும் காணிகளில் விவசாய உற்பத்தியைத் தீவிரப்படுத்தலே மாற்று வழியாக இருந்து வந்துள்ளது.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் நெற்சாகுபடி பாரம்பரிய முறையில் நடைபெற்ற போதிலும், நாட்டிலுள்ள விவசாயத்துறை எரு விடுதலையோ அல்லது பசளையிடுதலையோ முற்றாக அறிந்திராதிருக்கவில்லை. உள்நாட்டில் கிடைக்கக் கூடியனவாக உள்ள சகல விதமான சேதனப் பொருள்களையும் இடையறாது உபயோகிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. எனினும், சேதனப் பொருள்கள் எந்த அளவில் உபயோகிக்கப்பட்டனவென்பது கிரமமாகப் பதிவு செய்யப்படவில்லை. மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிமுகஞ் செய்யப்பட்ட தோட்டத் துறை துரிதமாக விரிவடைந்து வந்தது; அத்துடன், கைத்தொழில் மயமான மேற்குலகுக்கு உணவும் மூலப் பொருள்களும் வழங்கும் ஒரு மூலமாக அபிவிருத்திச் செய்யப்பட்டது. இந்நிகழ்வுப் போக்கில், விவசாயிகளின் மிகச் செழிப்பான காணிகளில் சில பறிக்கப்பட்டன. நெற்பயிர்த் துறையிலிருந்த நிலைக்கு மாறாக, தோட்டத்துறையிலே பெருங்காணிப் பரப்புகள் பெரிய முதலாளித்துவ நிறுவனங்களுக்கும் வர்த்தகக் கம்பெனிகளுக்கும் சொந்தமாயிருந்தன. இந்நிறுவனங்கள் பெருத்த இலாபங்களை ஈட்டின. எனவே உரங்கள் போன்ற உள்ளீடுகளில் முதலீடு செய்வது சாத்தியமாயிருந்தது; அப்படி முதலீடு செய்வதும் நியாயப்படுத்தப்பட்டது.

இரசாயன உரங்கள் 1930களின் முற்பகுதியிலேயே முதல் முறையாக இலங்கையில் இறக்குமதிசெய்யப்பட்டன. முப்பதுகளில் இரசாயன உரங்கள் பிரதானமாகத் தேயிலை, ரப்பர்த் தோட்டத் துறையில் மட்டுமே உபயோகிக்கப்பட்டன; பின்னர், படிப்படியாக தெங்குத் துறைக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

இரண்டாவது உலக மகா யுத்தம் உலகெங்கும் உணவுத் தட்டுப்பாட்டை உண்டாக்கியது. அதனால் நாட்டில் உணவு வழங்கல் நிலைமையில் எதிர்பாராத மாற்றம் ஏற்பட்டது. அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஏதாவதொரு விதத்தில் மகாயுத்தத்தில் சம்பந்தப்பட்டன. அதன் விளைவாக நாட்டில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாட்டின் காரணமாக, உள்நாட்டு உற்பத்தி ஊக்கம்பெற்றது. உள்நாட்டு நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் குடியேற்ற நாட்டு அரசாங்கத்துக்கு முதல் முறையாக ஏற்பட்டது. இக்கட்டத்தில் நெல் உற்பத்தி சம்பந்தமாக உரங்கள் அனுகூலமான பயன்களை உண்டாக்குகின்றனவென்பதை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர். உரங்களை உபயோகிப்பது நெற் சாகுபடியாளருக்கு இலாபந் தரத்தக்கதாகவும் அதே சமயத்தில் சிக்கனமாகவும் இருப்பதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டன. மகாயுத்தத்தின்போது எலும்பு உரம் விவசாயிகளுக்குக் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்பட்டது.

1948ம் ஆண்டில் அரசாங்கம் உள்நாட்டில் விளைவிக்கப்பட்ட நெல்லுக்கு புசல் ஒன்றுக்கு 8 ரூபாவாக உத்தரவாத விலை வழங்கியது. இவ்விலை 1951ம் ஆண்டில் 9 ரூபாவாகவும் 1952ம் ஆண்டில் 12 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டது. நெற்சாகுபடியில் உரங்களை உபயோகிப்பதில் ஒரு சமச்சீரான நிலையை வைத்திருப்பதற்காக, விவசாயத் திணைக்களம் 1950ம் ஆண்டில் மூன்று உரக்கலவைகளை அறிமுகஞ் செய்தது. 1952ம் ஆண்டில் நெல்லுக்கு உரமானியம் வழங்கும் திட்டமொன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. மேற்சொன்ன உரக்கலவைகள் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இத்துடன், எலும்பு உரத்தை இலவசமாக வழங்கும் முறை நிறுத்தப்பட்டது.

இரசாயன உரங்களை உபயோகிப்பது, 1930களிலேயே ஆரம்பித்துவிட்டபோதிலும், இதைப் பற்றிய பதிவேடுகள் 1940 களிலிருந்து மட்டுமே கிடைக்கக் கூடியனவாயுள்ளன. ஆரம்ப கட்டங்களில் உரங்கள் பல்வேறு பயிர்கள் சம்பந்தமாக எவ்வாறு உபயோகிக்கப்பட்டனவென்பது அட்டவணை—2 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆய்விலுள்ள காலத்தில், 1952ம் ஆண்டைத் தவிர, தேயிலைத்துறையில் உரங்களின் உபயோகம் இடையறாது அதிகரித்து வந்துள்ளது. இலாபங்கள் சம்பந்தமாக இப்பயிர் அனுபவித்த நிலைமையே இத்துறையில் உரங்கள் உயர் அளவில் உபயோகிக்கப்பட்டதற்குக் காரணமாகும். தேயிலைக் கைத்தொழில் தொடர்ந்து அதிகரித்த விளைச்சல்களைப் பெற்று வந்ததற்கு உரங்கள் பேரளவில் இடைவிடாது உபயோகிக்கப்பட்டதே பெரிதும் காரணமாகும் என்பது நிலைநாட்டப்பட்டது. 1952ம் வருட விவசாயக் கணக்கீடு பற்றிய அறிக்கை தேயிலைத் துறையில் உபயோகிக்கப்பட்ட உரங்களைத் தேயிலை ஆராய்ச்சிக் கழகத்தினால் சிபார்சு செய்யப்பட்ட உரத்தேவைகளுடன் ஒப்பிட்டுள்ளது. இந்த மதிப்பீட்டிலிருந்து 1945ம் ஆண்டுக்கும் 1954 ஆம் ஆண்டுக்குமிடையேயுள்ள 10 வருடங்களில் உர உபயோகம் கிட்டத்தட்ட 100 சத விகிதத்தை அடைந்துள்ளதென்பது தெரிகிறது.

( 9-ம் பக்கம் பார்க்கவும்.)

# புதிய நெல் இனங்களும் பசளையும்

தண்ணீர், விதை, பசளை ஆகிய இவை மூன்றும் விளைச்சலை அதிகரிக்கின்ற தொழினுட்பத்தின் மையக் கருவாக விளங்குகின்றன. ஆசிய நாடுகளில் அதிகரித்த விளைச்சல் வகைகளின் ஊடாக புதிய தொழினுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், இவை செழிப்படைவதற்கு ஆதார வசதிகள் அத்தியாவசியமாகும். ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதற்கு செறிவான நீர்ப்பாசனமும் அதிகரித்த இரசாயனப் பசளையும் அவசியம் எனக் கண்டறியப்பட்டது. இலங்கையிலும் நிலைமை இதுவாகும். புதிய ரகங்கள் ஏனைய சாதகங்களைக் கொண்டிருந்த போதிலும் அவை அதிகளவு சத்தினை வேண்டுகின்றன எனப் போதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானியான டபிள்யு. தேனபந்து 'உலர் வலயத்தில் உயர் விளைச்சல் ரகங்களுடனான பசளை ஆயவுகள்' என்ற கட்டுரையில் சுட்டிக்காட்டினார். இவ்வாறாக இப் புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட, உயர் விளைச்சலைக் கொண்ட நெல் ரகங்கள் இலங்கையில் செறிவான பசளைப் பாவனையை ஊக்குவித்துள்ளன.

பசளைப் பாவனை தாக்கம் மிக்கதாகவும் சிக்கனமானதாகவும் விளங்குவதற்கு மண் ஆய்வு, வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான தாவரச் சத்தினைச் சிறப்பாக மதிப்பிடல் என்பன முக்கியமாகும் என விவசாயவியலாளர்கள் கண்டனர்.

மேலும், 1980 செப்டம்பரில் கொழும்பில் நடைபெற்ற அரிசி ஆய்வரங்கில் கன்னொருவை மத்திய விவசாய ஆராய்ச்சி நிறுவகத்தின் இரசாயனவியலாளரான எஸ். நாகராஜா பின்வருமாறு கூறினார்— 'பழைய அபிவிருத்தி செய்யப்பட்டதும் மரபு ரீதியானதுமான ரகங்களை விடவும் இந்த ரகங்கள் அதிக சத்தினை வேண்டி நிற்கின்றன. அவை பூச்சிகள், நோய்கள் என்பவற்றிற்கு இலகுவில் இரையாவதுடன் உவர்த்தன்மை, பொஸ்பரஸ் குறைபாடு போன்ற மண் தன்மைகளைத் தாங்கவியலாததாகவும் உள்ளன.

குறிப்பாகப் பெருமளவுக்கு சமமற்ற அளவிலான நில உடைமையைக் கொண்டுள்ள பிரதேசங்களில் அரசியல் காரணங்களும் தாக்கத்தை ஏற்படுத்தின. சிறிய விவசாயிகள் பெரிய விவசாயிகளில் தங்கியிருந்தனர். ஆகையால் கடன், நீர், பசளை போன்ற தேவையான உள்ளீடுகளைப் பாந்தளவில் வினியோகிப்பதற்குரிய அமுக்கத்தைத் தாக்கமான முறையில் செயற்படுத்தவியலாதுள்ளனர். இந்த நன்மைகள் பெருமளவுக்கு அரசியல் ரீதியில் பலம்வாய்ந்த விவசாயிகளைச் சென்றடைகின்ற போக்கினைக் கொண்டிருந்தது.

உள்ளூர் நிறுவகங்களின் குறைபாடுகளும் தொழினுட்பக் கண்டுபிடிப்புக்களைத் தாக்கமற்றதாக்கின. எடுத்துக் காட்டாக, கொள்கை வகுப்பவர்களும் நிருவாகிகளும் விவசாயிகளின் அதிகரித்த இலாபத்தை விடவும் அதிகரித்த உற்பத்தியிலேயே ஆர்வம் செலுத்தினர். விவசாயிகளை இலாபம் நோக்கிய விவசாயிகளாகக் கருதவில்லை. இதன் சில விளைவுகளாக ,விவசாயிகளின் இலாபத்தன்மையை விடவும் கூடுதலான இரசாயன பசளையைப் பாவிப்பதற்கு விஸ்தரிப்புச் சேவைகள் ஊக்கம் அளித்தமை கண்டுபிடிககப்பட்டது. தம்மிடம் சேர்ந்து வந்த இருப்பினைக் குறைக்கும் வகையில் கலப்புப் பசளையைப் பாவிக்குமாறு விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் விவசாயிகளை வற்புறுத்தினர்.

அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகின்ற உதாரணம் இந்தியாவாகும்; இங்கு புதிய தொழினுட்பம் விவசாய உற்பத்தியில் புரட்சியை உண்டுபண்ணி இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தியாவில் 'பசுமைப் புரட்சி' ஆரம்பித்திருப்பதாக 1960 க்களில் கூறப்பட்டது. சந்தை மிகையை உச்சப்படுத்தும் நோக்கத்துடன் மிகவும் வாய்ப்பான கிராமியப் பிராந்தியத்தில் முதலீட்டினைச் செறிவாக்குவதற்கு இந்திய அதிகாரிகள் தீர்மானித்தனர். 'இந்தியாவில் கிராமிய அபிவிருத்திக் கொள்கை' (வட இல்லினொய்ஸ் பல்கலைக்கழகம், 1974) என்ற நூலில் என். கே. நிகல்சன் குறிப்பிட்டுள்ளது போன்று இந்நடவடிக்கைகள், போர்ட் பவுன்டேஷன் ஆலோசனையின் பேரில் கைக்கொள்ளப்பட்டவையாகும்.

இந்தியாவில் இம்மாநிலங்களுக்கு (குறிப்பாக பஞ்சாப், ஹரியானா) உள்ள இந்த மண், நீர் வழங்கல் ஆகிய வாய்ப்புக்களுக்கு மேலாக தொழினுட்ப உதவி, பாதை அபிவிருத்தி, மின்சாரம், நீர்ப்பாசன அபிவிருத்தி என்பன பெருமளவுக்குச் செய்யப்பட்டன. புதிய ரகங்களின் அறிமுகம், அவற்றின் பாதிப்பு, பசளையின் முக்கியத்துவம் என்பனபற்றி என். கே. நிகல்சனும் ஜே. டி. எஸ். செக்ஸ் என்பவரும் விஸ்கொன்சின் பல்கலைக்கழகத்தினால் பிரசுரிக்கப்படுகின்ற 'த குளோபல் பொலிடிகல் இகனொமி ஒப் புட்' என்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட 'த பொலிடிக்ஸ் ஒப் புட்ஸ்கெயாரிடீஸ் இன் டிவலெபிங் கன்ட்ரீஸ் — 1978' என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றனர்— 'புதிய பயிர்வகைகள் தோன்றிய போது விவசாயிகள் அவற்றைப் பாவிப்பதற்குத் தேவையான முதலீடு — குறிப்பாகக் கடன், நீர்ப்பாசனம் என்பன — முக்கியமானது என நிரூபிக்கப்பட்டது 1960 க்களின் மத்தியில் புதிய ரகத்தைச் சேர்ந்த உயர் இன நெல்லும் கோதுமையும் அபிவிருத்தி செய்யப்பட்டன. குறிப்பாகப் பசளைப் பிரயோகத்திற்கு மிகவும் சாதகமான க ட் டை இனப் பயிர் அபிவிருத்தி செய்யப்பட்டது. பழைய, மரபு ரீதியான தானிய வகைகளிலிருந்து புதிய ரகங்களுக்கு மாறுவதன் மூலம் விளைச்சலை இரு மடங்காகவும் மும்மடங்காகவும் அதிகரிக்க முடிந்தது. விளைச்சலில் தீவிர அதிகரிப்பினதும் அதன் விளைவாக ஏற்பட்ட பண்ணை வருமானத்தினதும் விளைவாகப் 'பசுமைப் புரட்சி ஏற்பட்டது.'

எனினும் அதிகளவு பசளை, நீர் என்பன ஒன்றிணைந்தபோது மாத்திரமே இப்புதிய விதைகள் சிறப்பாகச் செயற்பட்டன. இதன் விளைவாக விவசாயிகளின் முதலீடும் உற்பத்திச் செலவும் அதிகரித்ததுடன், இவற்றுடன் இணைந்த வகையில் இடர்பாடுகளும் ஏற்பட்டன. இது அதிகரித்த கடன், உறுதியான சந்தை விலைகள், கிராமியப் பொதுவசதிகள் மீதான முதலீடு போன்ற வழிகளில் உதவுமாறு அரசாங்கங்கள் மீது அமுக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் மரபு ரீதியான ரகங்களுடன் ஒப்பிடுகையில் இப் புதிய இனங்கள் இலகுவில் நோயின் தாக்கத்திற்கும் உற்பட்டன. குறிப்பாக அரிசி, காலநிலை, விளைச்சல் நிலைமை என்பவற்றின் மாற்றங்களால் இலகுவில் பாதிக்கப்படக்கூடியதாகும். ஆகையால் இப் 'புரட்சியைத்' தோல்வியிலிருந்தும் பாதுகாப்பதற்கு விவசாய ஆராய்ச்சி, விஸ்தரிப்பு என்பவற்றில் பொது முதலீடு அவசியமாயிருந்தது.

'அந்நேரத்தில்கூட சிலர் புரட்சியின் பலம் தொடர்பாக எச்சரிக்கையாக இருந்தனர். இத் தொழினுட்பத்தின் வெற்றி, பெரும்பாலும் பசளை இறக்குமதியில் தங்கியிருந்தது. பெருமளவுக்குப் பலவீனமான இத்தொழினுட்பத்தை வைத்திருப்பதற்குரிய நிருவாக, ஆராய்ச்சி வசதிகளைப் பேணுவதற்கான ஆற்றலைப் பல வளர்முக நாடுகளின் அரசாங்க அமைப்புக்கள் கொண்டிருக்கவில்லை. இது மாத்திரமன்றி உலகின் உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகப் பல அவதானிகள் கருதினர்; இன்று நாம் குறைந்த அளவு நம்பிக்கையையே கொண்டுள்ளோம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்விலுள்ள இக்காலத்தில் ரப்பர், தெங்குத் துறைகளில் உரங்களின் உபயோகம் ஒப்பியல்ரீதியாகக் குறைந்த விகிதத்திலிருக்கின்றது. இதற்கு இப்பயிர்கள் பெரும்பாலும் சிறிய காணிக்காரர்களின் கைகளில் இருந்ததே நேரடியான காரணமாகும். வேறெந்த வட்டாரத்திலிருந்தும் வெளிநாட்டு உதவி கிடைக்காததால், இப்பயிர்களில் உபயோகிக்கப்பட்ட உரங்களின் அளவு அதிகரிக்கவில்லை.

1950ம் ஆண்டளவில் நெற் சாகுபடிக்கு வழங்கப்பட்ட ஊக்கச் சலுகைகள் இப்பயிரில் உரங்கள் பயன்படுத்தப்படுவதைச் சிறப்பாக அதிகரித்துள்ளதாகத் தோன்றுகிறது. கீழ்க்கண்ட காலத்தில் நெற் சாகுபடித் துறையில் உரங்கள் உபயோகிக்கப்பட்ட விகிதத்திலிருந்து இது தெளிவாகிறது:

மொத்தப் பொருள் அடிபபடையிலும் போசணைப் பொருள் அடிப்படையிலும் 1961ம் ஆண்டிலிருந்து சகல பயிர்களுக்கும் உபயோகிக்கப்பட்ட உரங்களைப் பற்றிய விவரம் அட்டவணை—5இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை—5இல் உள்ள புள்ளி விவரங்கள் இக்காலத்தில் நாட்டில் உரங்களை உபயோகிப்பதில் காணப்பட்ட கீழ்க்கண்ட முக்கியபோக்குகளை எடுத்துக் காட்டுகின்றன.

1. இரசாயன உரங்களின் மொத்த உபயோகம் சில குறிப்பிட்ட வருடங்களில் குறைந்துள்ள போதிலும் பொதுவாக அதிகரித்தே வந்துள்ளது. 1961ம் ஆண்டில் 277,970 தொன்கள் உபயோகிக்கப்பட்டன. 1981ம் ஆண்டில் இது 366,260 தொன்களுக்கு உயர்ந்தது. 1980ம் ஆண்டில்தான் நாட்டிலேயே ஆகக் கூடிய அளவு உரங்கள் உபயோகிக்கப்பட்டன. அஃதாவது 439,580 தொன்கள் உபயோகிக்கப்பட்டன.

2. தேயிலைத் துறையில் உரங்களை உபயோகிப்பதில் காணப்படும் உயர் மட்டம் படிப்படியாக நெல் துறையிலும் பிரதிபலிக்கின்றது. 1961ம் ஆண்டில் உபயோகிக்கப்பட்ட மொத்த உரங்களில் நெல் துறை ஏறக்குறைய 11 சதவிகிதத்தையும் தேயிலைத் துறை ஏறக்குறைய 52 சதவிகிதத்தையும் உபயோகித்தன. 1981ம் ஆண்டில் இவ்விருதுறைகளும் முறையே 43 சதவிகிதத்தையும் 28 சத விகிதத்தையும் உபயோகித்தன.

அட்டவணை—3

உரத் தேவைகளின் சதவிகிதமாக உரங்களின் உபயோகம்

| பயிர் | 1945 | 1946 | 1947 | 1948 | 1949 | 1950 | 1951 | 1952 | 1953 | 1954 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை | 66.9 | 84.1 | 83.0 | 85.4 | 85.5 | 85.0 | 86.1 | 87.9 | 93.6 | 99.7 |

மொத்த உரவுபயோகம் அதிகரித்ததற்கு பல காரணங்களைக் கூறலாம். உலகச் சந்தையில் அதிகரித்த உரவிலைகள் உதவி மான்யங்களுக்குள் கிரகிக்கப்பட்டமை, சிறிய காணிக்காரர்களுக்கு நிறுவனக்கடன் வசதிகள் வழங்கப்பட்டமை, முடிவுப் பொருளுக்குத் தரைமட்ட விலையை உத்தரவாதப்படுத்தியமை (அஃதாவது, நெல்லுக்கு உத்தரவாத விலையும், தேயிலைக்கும் ரப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வைக் கழிவுத் திட்டங்களும்), மேலும் விற்பனைப் பெருக்க வசதிகளை அளித்து, விஸ்தரிப்பு—ஆராய்ச்சி வேலைகளை வழங்கியமை, அத்துடன், உயர் விளைச்சல் தரும் நெல்லினங்களையும் தேயிலை இனங்களையும் அறிமுகஞ் செய்தமை முதலியன முக்கிய உதவிக் காரணிகளாகும். சில குறிப்பிட்ட ஆண்டுகளில் உரங்களின் உபயோகம் குறைந்ததற்கு மோசமான காலநிலை, உதவி மான்யங்கள் நீக்கப்பட்டமை, பெரும்பாலான விவசாயிகள் நிறுவனக் கடன்களை உரிய காலத்தில் திருப்பித்தராததால் அக்கடன் வசதிகளைப் பெறும் அருகதையை இழந்துவிட்டமை, மிகச் சமீப வருடங்களில் முகாமை செய்தல் சம்பந்தமாகத் தோட்டத்துறையில் தோன்றிய பிரச்சினைகள், அத்துடன், அரசாங்கத்துக்குச் சொந்தமான தோட்டங்களில் ரொக்கப் பணமில்லாப் பிரச்சினைகள் ஆகியனவே காரணங்களாகும். மிகச் சமீபத்தில் உரங்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளும் ஒரு முக்கியமான காரணியாயிருந்துள்ளன. இந்தக் காரணிகளுக்குப் புறம்பாக, உரங்கள் உடனடியாகக் கிடைப்பதிலும் விநியோகிக்கப்படுவதிலும் இருந்து வந்த கட்டாயக் கட்டுப்பாடுகளின் விளைவாக, சில குறிப்பிட்ட வருடங்களில் உரங்கள் உபயோகிக்கப்படும் விகிதம் குறைந்து விட்டது.

உர உபயோகப் போக்குகளில் காணப்படும் மிகக் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், மொத்த உர உபயோகம் இப்பொழுது பிரதானமாக ஒரே ஒரு துறைக்கு அஃதாவது நெல்லுக்குத் திரும்பியிருப்பதாகும். அட்டவணை 5ஐ நோக்கினால், நெல் துறையில் உர உபயோகம் அதிகரிக்கும் போக்கு காணப்படும் போது, மொத்த உர உபயோகத்திலும் அதே போன்ற ஓர் இயக்கம் நிகழ்வதைக் காணலாம். நெல்துறையும் முழுநாடும் உர உபயோகத்தில் உச்ச நிலையை 1980ம் ஆண்டில் அடைந்தன. இதற்கு மாறாக, தோட்டத் துறை அதன் உச்சநிலையை 1960களில் அடைந்தது—அஃதாவது ரப்பர் 1961ம் ஆண்டிலும், தேயிலை 1964 ஆம் ஆண்டிலும், தெங்கு 1970ம் ஆண்டிலும் உச்சநிலையை அடைந்தன.

அட்டவணை—4

நெற் சாகுபடியில் உபயோகிக்கப்பட்ட இரசாயன உரங்கள்

| வருடம் | அளவு (தொன் கணக்கில்) |
|---|---|
| 1954 | 9,400 |
| 1957—58 | 16,942 |
| 1958—59 | 26,341 |
| 1959—60 | 20,173 |
| 1960—61 | 29,041 |
| 1961—62 | 38,782 |

## அட்டவணை—5

### உரங்களின் உபயோகம் ('000 மெட்ரிக் தொன்கள்)

| வருடம் | நெல் | | தேயிலை | | ரப்பர் | | தெங்கு | | மற்றும் பயிர்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உ | போ | உ | போ | உ | போ | உ | போ | உ | போ | உ | போ |
| 1961 | 29.04 | 7.7 | 143.49 | 36.8 | 28.64 | 7.4 | 42.99 | 14.3 | 33.81 | 8.9 | 277.97 | 75.1 |
| 1962 | 38.07 | 10.0 | 147.88 | 37.9 | 28.09 | 7.2 | 42.58 | 14.2 | 34.76 | 9.2 | 391.33 | 78.5 |
| 1963 | 47.06 | 12.2 | 160.87 | 41.4 | 27.50 | 7.1 | 45.27 | 15.1 | 29.57 | 7.7 | 310.57 | 83.5 |
| 1964 | 60.10 | 15.8 | 172.45 | 44.8 | 26.68 | 6.8 | 48.36 | 16.2 | 31.83 | 8.1 | 339.47 | 91.7 |
| 1965 | 42.06 | 11.4 | 156.75 | 41.2 | 23.34 | 6.0 | 48.42 | 15.9 | 45.34 | 12.0 | 315.91 | 86.5 |
| 1966 | 44.10 | 13.9 | 156.76 | 40.1 | 22.36 | 6.0 | 52.18 | 17.2 | 54.01 | 13.6 | 329.33 | 90.8 |
| 1967 | 73.19 | 24.5 | 142.19 | 34.7 | 21.93 | 5.7 | 49.38 | 16.2 | 49.35 | 12.7 | 336.02 | 93.3 |
| 1968 | 85.25 | 29.7 | 133.23 | 35.2 | 17.73 | 4.7 | 62.67 | 20.3 | 64.07 | 17.0 | 362.95 | 106.9 |
| 1969 | 83.51 | 29.2 | 110.86 | 31.3 | 20.19 | 5.6 | 59.26 | 19.2 | 63.61 | 16.3 | 337.43 | 101.6 |
| 1970 | 87.07 | 31.9 | 106.71 | 30.8 | 20.42 | 5.8 | 63.77 | 20.7 | 56.46 | 15.9 | 334.43 | 105.1 |
| 1971 | 95.44 | 38.8 | 110.96 | 32.7 | 17.08 | 4.9 | 58.20 | 18.8 | 60.10 | 17.1 | 341.78 | 112.3 |
| 1972 | 88.37 | 38.8 | 97.44 | 28.5 | 11.44 | 3.2 | 39.53 | 16.5 | 48.87 | 12.9 | 294.32 | 99.9 |
| 1973 | 125.53 | 53.1 | 91.94 | 27.1 | 14.58 | 3.9 | 48.20 | 12.6 | 54.14 | 14.4 | 324.79 | 111.1 |
| 1974 | 96.45 | 42.9 | 100.54 | 29.6 | 12.24 | 3.0 | 38.60 | 13.4 | 45.79 | 13.0 | 294.55 | 101.9 |
| 1975 | 48.74 | 22.7 | 99.84 | 31.0 | 9.34 | 2.6 | 26.63 | 9.1 | 25.90 | 7.0 | 210.45 | 72.4 |
| 1976 | 72.44 | 33.3 | 95.22 | 31.4 | 12.99 | 3.8 | 30.69 | 10.3 | 52.95 | 16.5 | 264.18 | 93.3 |
| 1977 | 122.02 | 54.6 | 80.39 | 25.6 | 12.43 | 3.8 | 29.10 | 8.5 | 53.49 | 18.0 | 297.51 | 111.6 |
| 1978 | 136.13 | 61.5 | 115.51 | 38.3 | 20.94 | 6.6 | 42.55 | 14.1 | 64.83 | 20.0 | 380.02 | 140.4 |
| 1979 | 130.41 | 58.3 | 105.16 | 34.4 | 23.25 | 6.7 | 49.59 | 16.8 | 63.97 | 21.4 | 372.37 | 137.6 |
| 1980 | 189.98 | 84.9 | 109.85 | 34.4 | 22.02 | 6.7 | 55.77 | 22.5 | 61.95 | 21.4 | 439.58 | 169.0 |
| 1981 | 155.59 | 70.5 | 103.33 | 24.0 | 16.78 | 5.2 | 37.65 | | 52.95 | | 366.30 | |

உ — உர உபயோகம்
போ—போசணை உறுப்பு

இந்தப் போக்குக்கு உலகச் சந்தையில் பொதுவாக விவசாய ஏற்றுமதிகள் மோசமாகச் செயற்பட்டதே காரணமாகும். விவசாய ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் குறைந்து வந்ததால், பொதுவாக இந்தப் பயிர்களை விளைவிப்பது இலாபந்தராத ஒரு முயற்சியாகி, உற்பத்தியை விரிவாக்குவதற்கான ஊக்கம் தளர்ந்துவிட்டது. இதன் விளைவாகச் சில குறிப்பிட்ட உள்ளீடுகள் நீக்கப்பட்டன. அவற்றில் உரங்கள் முதலிடம் பெற்றன. இந்தக் காரணிகள் தோட்டத் துறையிலே உற்பத்தி மட்டங்களும் உரங்களின் உபயோகமும் குறைந்ததை ஓரளவுக்கு விளக்குகின்றன. எனினும், அதே சமயத்தில் நெல் துறையில் உர உபயோகம் அதிகரித்ததற்கு இத்துறையின் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அளித்த முக்கியத்துவமே காரணமாகும். இதன் விளைவாக, தினையாப் பிரகாரமாகத் தோட்டத்துறை ஓரளவுக்குப் புறக்கணிக்கப்பட்டது.

அரிசியில் சுயதேவைப் பூர்த்தி நிலையை அடைவதற்குக் கூறப்படும் பொருளாதாரக் காரணங்கள் ஒரு புறமிருக்க, சிறிய விவசாயி எங்கள் சமூகக் கட்டுக்கோப்பில் ஓர் அத்தியாவசியமான பாகமாகி விட்டான். அத்துடன், இன்றைய அரசியல் இயக்கங்களிலும் ஒரு முக்கியமான உறுப்பாகியுள்ளான். அடுத்தடுத்து அதிகாரத்துக்கு வந்த ஒவ்வோர் அரசாங்கமும் தங்களுடைய பதவிக்காலம் முடிவடைவதற்கு ஓராண்டுக்கு முன்பு அரிசி சம்பந்தமாக நாடு சுயநிறைவு நிலையை அடையும் கட்டம் நெருங்கிவிட்டதென்று கூறியுள்ளன. உண்மையில் இந்த நிலை இதுவரை எய்தப்படவேயில்லை. "கோவியா" (சிறிய விவசாயி) வின் பங்குக்கு முக்கியத்துவம் அளிக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், அவனது நம்பிக்கையைப் பெறுவதற்காகப் பல்வேறு திட்டங்களும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. சில நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ளன. ஆனால், மற்ற நடவடிக்கைகள் அரசியல் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளேயாதலின், அவை பெருமளவுக்கு வெற்றிபெறவில்லை. இந்நடவடிக்கைகள் பயனளித்தனவோ இல்லையோ, அரிசி உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாலும் விவசாயிகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாலும், விவசாயி தனது உர உபயோகத்தைப் பெருமளவுக்கு அதிகரிக்க ஊக்கமடைந்துள்ளான்.

### உர உபயோகத்தின் பொருளியல்

ஒரு பயிரில் உரத்தை என்ன அளவில் உபயோகிப்பது? உபயோகிக்க வேண்டுமா, வேண்டாமா? என்ற பிரச்சினை பொதுவாக ஒரு பொருளியல் பிரச்சினையாகும். இதற்கு எதிர்பார்க்க வேண்டிய பௌதிக மறுமொழிக்குப் புறம்பாக, சில பொருளாதார, தாபன ரீதியான காரணிகளும் முக்கியமானவையாகும். இவற்றில் கீழ்க் கண்ட சிலவும் அடங்கும்:

(1) உரங்களுக்கும் அவை பிரயோகிக்கப்படும் பயிர்களுக்குமிடையேயுள்ள விலையைப் பொறுத்த சம்பந்தமே இலாப வாய்ப்பை நிர்ணயிக்கின்றது.

(11) விவசாயிகளின் வருமான மட்டமும் கடன் கிடைக்கும் வசதியும்தான், உரங்களின் பேரில் ஆரம்பத்தில் செய்ய வேண்டிய முதலீட்டை விவசாயிகளால் செய்ய முடியுமா என்பதையும் கடனை அவர்கள் இறுதியில் கொடுக்க முடியுமா என்பதையும் நிர்ணயிக்கின்றன.

(111) நிலக் குத்தகை முறையின் நிபந்தனைகள் பிரதி கூலமானவையாக இருந்தால் உரங்களை உபயோகிப்பதற்கான ஊக்கம் குன்றிவிடும்.

(1v) தகுந்த இடத்தில், தகுந்த சமயத்தில், போதிய அளவில் விவசாயிகளுக்கு உரங்கள் வழங்கப்படுவதை உறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிப்படுத்த, போதிய விநியோக வசதிகள்.

(V) உள்ளூர் ஸ்தாபனங்களிலுள்ள பலவீனங்களும் கூட தொழில் நுட்பப் புதுமைகளைப் பயனற்றவையாக்கியுள்ளன.

(V1) உணவுப் பயிர்களை (உதாரணமாக நெல்லும் கோதுமையும்) விளைவிப்போருக்கு நீர்ப்பாசன வசதிகளும் விருத்தி செய்யப்பட்ட விதையினங்களும் கூட முக்கியமாகியுள்ளன.

இந்தக் காரணிகள் வகிக்கும் ஒப்பியல் ரீதியான முக்கியத்துவம் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து மாறுபடலாம். அத்துடன், ஒவ்வொரு காரணியும் அரசாங்க நடவடிக்கையால் பாதிக்கப்படலாம். எனினும், இலங்கையில் இந்த முடிவுசெய்யும் முறையில், மூலதனம் செறிந்த உள்ளமைப்பையும் அதிக மேந்தலைச் செலவுகளையும் கொண்ட, சிறந்த முறையில் அமையப்பெற்ற வர்த்தகத் தோட்டத்துறை ஆகக்கூடிய நிகர இலாபங்களைப் பெறுவதற்காகப் பயிர் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கங் கொள்வது முக்கியமாகும். ஆதலால், இத்துறைக்கு முதலாவது நிபந்தனையே மிக முக்கியமான பொருளாதாரக் காரணியாகும்.

மறுபக்கத்தில், விவசாயிகளையும் சிறிய காணிக்காரர்களையும் கொண்ட துறை சிறு அளவிலான பண முதலீட்டையோ அல்லது எத்தகைய பண முதலீட்டையுமோ கொண்டிராமலும், அதை விடக் குறைவான மேந்தலைச் செலவுகளுடனும் இருந்து வருகிறது. இத்துறையைப் பொறுத்த வரை, இறுதி முடிவு செய்வதில் மற்றக் காரணிகளின் சம்பந்தம் சமமுக்கியமுடையதாகும்.

தோட்டத் துறையைப் பொறுத்த வரை உரங்களின் உபயோகம் பிரதானமாக இலாப வாய்ப்பினாலேயே நிர்ணயிக்கப்படும். இது முறையே பின்வருவனவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது:

(அ) பிரயோகிக்கப்பட்ட உரங்களிலிருந்து உற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு;

(ஆ) பயிரின் சந்தை விலை;

(இ) உரங்களுக்கும் அவற்றைப் பிரயோகிப்பதற்கும் ஆகும் செலவு;

(ஈ) அதிகரித்த பயிர் உற்பத்தியை அறுவடை செய்வதற்கும் சந்தைப்படுத்துவதற்கும் ஆகும் மேலதிக செலவு.

உரங்களின் பிரயோகத்தால் விளைச்சல் அதிகரிப்பது, மண், மண்ணிலுள்ள ஈரப்பதன், விதைகளின் தரச்சிறப்பு, நடுகைக் காலம், பூச்சிகளும் மற்றும் பீடைகளும் குறைவதும் கட்டுப்படுத்தப்படுவதும், சாகுபடி முறைகள், தேவையான உர வகைகளும் அவற்றின் அளவுகளும், பிரயோகிக்கப்படும் உரங்கள், காலநிலைகள் முதலியவற்றைப் பொறுத்திருக்கின்றது. விருத்தி செய்யப்பட்ட இவ் வேளாண்மை முறைகள் விளைச்சலை அதிகரிப்பதற்கு உதவுவது மட்டுமன்றி அலகுச் செலவைக் குறைத்து, அதன் மூலம் இலாபங்களையும் உயர்த்துகின்றன.

சிறிய அளவில் விவசாயம் செய்வோர் பொதுவாகச் சிறு அளவிலேயே உரங்களை உபயோகிக்கின்றார்கள் அல்லது உரங்களையே உபயோகிப்பதில்லை. அப்படி உரங்களை உபயோகித்தால், அவர்கள் பெரும்பாலான சமயங்களில் பொருளியல் ரீதியாகச் சிறந்த அளவுகளை விடக் குறைவாகவே உபயோகிக்கிறார்கள். ஏனென்றால், இத்தகைய ஒரு விவசாயி உபயோகிக்கும் உரங்களின் அளவு, குத்தகை முறை, வருவாயின் மட்டம், நிதி நிலைமைகள், கடன் கிடைக்கும் வாய்ப்பு, உரங்களுக்கு ஆகும் செலவும் உரங்கள் கிடைக்கும் நிலைமையும், அவர் எதிர்நோக்கவேண்டிய அபாய ஏதுக்களும் நிச்சயமற்ற நிலைமைகளும், அவற்றைச் சமாளிப்பதற்கு அவனுக்குள்ள ஆற்றல் ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். உதாரணமாக, உரங்களுக்கு ஆகும் செலவைப் பகிர்ந்து கொள்ளாத நிலச் சொந்தக்காரருக்கு அவன் விளைச்சலில் ஒரு பங்கைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டியிருக்கையில், பயிர் விளைச்சலை அதிகரிப்பதற்காக உரங்களை உபயோகிக்க அவனுக்கு ஊக்கம் பிறப்பதில்லை.

சிறிய காணிக்காரர்கள் பொதுவாக அபாய ஏதுக்களைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கிறார்கள். அவர்கள் பயிர் செய்யும் காணிகளின் பரிமாணம் நவீன விவசாய முறைகளை உபயோகிப்பதற்குத் தடையாயிருப்பது ஒருபுறமிருக்க, அவர்கள் பல்வேறு பாரம்பரிய நம்பிக்கைகளால் கட்டுண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சந்தைப்படுத்தக் கூடிய உபரியை உற்பத்தி செய்வதில்லை; அவர்களுடைய பொருளாதார நிலைமை படுமோசமானது. பரம ஏழைகளாயிருப்பதால், அவர்கள் செலவைச் சுருக்கும் முறைகளைக் கைக்கொள்ள முயலும் ஒருவகை உற்பத்தியாளர்களாகிவிட்டனர். அவர்கள் ஒரு நச்சு வட்டத்துக்குள் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய சம்பாத்தியம் குறைவாயிருப்பதால், மறு முதலீடு செய்வதற்கு அவர்களுக்குள்ள ஆற்றல் மிகக் குறைவானது. இதன் விளைவாக, அடுத்த சுற்றிலும் அவர்களுடைய உற்பத்தியும் சம்பாத்தியமும் குறைந்த அளவிலேயே இருக்கின்றன.

நெல் வேளாண்மை செய்யும் ஒரு சராசரிக்குடும்பத்துக்கு நாளொன்றுக்குச் சுமார் ஒரு கொத்து அரிசி தேவைப்படும். இதற்கு அவர்கள் வருடமொன்றுக்கு 520 கிலோ அல்லது 25 புசல் நெல் உற்பத்தி செய்ய வேண்டும். (ஆலையில் அரைக்கப்பட்ட ஒரு கிலோ அரிசி 1.43 கிலோ நெல்லுக்குச் சமம்; எனவே 365 நாட்களுக்கு, தினம் 1.43 கிலோ வீதம் 520 கிலோ தேவையாகும்). நாட்டின் தற்போதைய சராசரி உற்பத்தியின் அடிப்படையில் இது அரை ஏக்கர் காணியிலிருந்து பெறப்படுவதாயிருக்கலாம். உற்பத்திச் செலவு ஏறக்குறைய 40 சத விகிதத்தைப் பிரதிபலிப்பதால், விவசாயி 42 புசல் நெல் உற்பத்தி செய்யவேண்டும். இந்த உற்பத்தியைப் பெறுவதற்கு அவனுக்குச் சுமார் ஓர் ஏக்கர் நிலம் தேவை. ஏற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டபடி நெற்சாகுபடி செய்யும் சிறிய காணிக்காரர்களில் 65 சத விகிதத்தினர் 1 ஏக்கருக்குக் குறைவான காணியையே வைத்திருக்கின்றனர். தற்போதைய விளைச்சல் அவனுடைய உற்பத்திச் செலவையும் குடும்பத்தின் நுகர்வுத் தேவைகளையும் சமாளிக்கப் போதும். இவ்விதமாகத் தற்போதுள்ள பயிர்ச் செய்கை

முறைகளின் கீழ் உரங்கள்போன்ற உள்ளீடுகளில் மறு முதலீடு செய்ய அவர்களுக்குப் போதிய வருமானமில்லை.

### உரம் சம்பந்தமான நிபுணத்துவத் திட்டம்

இந்தப் பிரச்சினைகளுக்குத் தக்க பரிகாரங்களைக் காண்பதற்கும் உர உபயோகத்தை ஊக்குவிக்கவும் அதன் விநியோகத்தை விருத்தி செய்யவும் சிறந்த பயனளிக்கத் தக்க—பகுத்தறிவுக்கொத்த முறையொன்றை உருவாக்குவதற்கும் இலங்கையரான நிபுணர்களையும் மேற்கு ஜெர்மன் நிபுணர்களையும் கொண்ட ஒரு குழுவினால் 1978ம் ஆண்டில் உரம் சம்பந்தமான நிபுணத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இந்த நிபுணர்கள் செய்த ஒரு முடிவு யாதெனில், உரம் சம்பந்தமான வழங்கல் நிலைமையும் விநியோக வசதிகளும் சற்றும் திருப்தியளிப்பதாயில்லை என்பதாகும். உரங்கள் குறைவான அளவில் உபயோகிக்கப்படுவதற்கு இந்தக் காரணிகளே பெருமளவுக்குக் காரணம் என அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். எனினும், நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியது போல், சிறிய சாகுபடியாளர்களின் வறிய நிலை போன்ற காரணிகள் இவ்விஷயத்தில் ஒரு மிகமுக்கியமானஅம்சமாக இருந்து வந்துள்ளன. உரங்களை விநியோகிக்கத் தற்போதுள்ள முறையிலிருக்கும் கட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டுமென்றும், உர உபயோகத்தை ஊக்குவிப்பதற்காக ஆராய்ச்சி—விஸ்தரிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டுமென்றும் நிபுணத்துவ திட்டம் வலியுறுத்துகிறது.

எனினும், அதன் பரிகாரங்களை எடுத்துரைப்பதில், நிபுணத்துவ திட்டம் அதன் சொந்த ஆராய்ச்சிப் பரிசீலனைகளின் பெறுபேறுகளைப் போதிய அளவுக்குக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. உதாரணமாக, "உர உபயோகம் சம்பந்தமாக விவசாயியின் மனப்போக்குகள்" பற்றிய அதன் சொந்த ஆராய்ச்சிப் பரிசீலனையறிக்கையில், இப்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட விவசாயிகளில் 38 சதவிகிதத்தினர் பொருளாதாரக் காரணங்களினால் உரங்களை உபயோகிக்கவில்லை" என்று

## பசளை விலைகளும் உணவு இறக்குமதிகளும்

இறக்குமதிகளுக்கு சுதந்திரமான அனுமதி வழங்கப்பட்டு அதன் விளைவாக 'ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி' ஊக்குவிக்கப்படும் என்பது 'திறந்த தாராளப்' பொருளாதாரத்தின் ஒரு பிரதான எடுகோளாகும். கைத்தொழில்கள் செழித்தோங்குவதற்கு எல்லா வகையான வசதிகளும் அளிக்கப்பட்டு, உலகச் சந்தையில் போட்டியிடச் செய்தல் புதிய பொருளாதாரக் கொள்கையின் பின்னணியிலுள்ள திட்டமாகும். இலங்கையின் பொருளாதாரம் அடிப்படையில் விவசாயப் பொருளாதாரமாக இருப்பதுடன் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் ஏதோ ஒரு வழியில் விவசாயத்துடன் தொடர்புடைய பொருளாதாரத்தில் ஈடுபாடு கொண்டுள்ளனர். வரவு செலவுத் திட்ட மானியங்களைக் குறைத்தலும் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் சமவலுவினைப் பேணலும் இக் கொள்கையின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். இக் கொள்கைகளை அடையும் வகையில் தாராண்மைப் பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, விவசாயத் துறையில் உள்ள சிற்றுடைமையாளர்கள் நீண்ட காலத்திலோ அல்லது குறுங் காலத்திலோ பாதிக்கப்படுவர் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

உத்தேசிக்கப்பட்டுள்ள கிழங்கு இறக்குமதி, தமது சந்தையைப் பாதித்து அதன் விளைவாகத் தமது உற்பத்தி, வாழ்க்கைத்தரம் என்பவற்றைப் பாதிக்கும் என மலைநாட்டு உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள் இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனர். இவர்களது உற்பத்தி உள்ளூர்ச் சந்தைக்குப் போதியதாக இருப்பின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என வர்த்தக அமைச்சர் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு உறுதி கூற வேண்டியிருந்தது.

1981-ல் பசளை மீதான மானியம் குறைக்கப்பட்டமை உள்ளூர் உற்பத்தியைப் பாதித்த இன்னொரு அம்சமாகும். 1981 இல் விநியோகிக்கப்பட்ட பசளை, அதற்கு முன்னைய வருடத்தை விடவும் 17 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்தது. இவ்வீழ்ச்சி இவ்வாண்டிலும் தொடர்ந்து 1982 இன் முதல் 5 மாதங்களிலும் 1981 இல் இதே காலப் பகுதியை விடவும் மேலும் 15 சதவீதத்தினாலும் 1980 மேக்கும் 1982 மார்ச்சிற்கும் இடையில் 20 சதவீதத்தினாலும் பசளை விநியோகம் வீழ்ச்சி அடைந்தது. விநியோக வீழ்ச்சியைப் பொதுவாக எல்லாப் பிரதான பயிர்களிலும் (குறிப்பாக நெல்லிலும்) அவதானிக்கலாம்.

விலைகள் பசளை விநியோகத்தைப் பாதித்துள்ளன என்பதில் சந்தேகமில்லை. 1980 மார்ச்சிலிருந்து 1982 மார்ச் வரையிலான இரு வருட காலத்திற்குள் பசளை விலைகள் 125 சதவீதத்திலிருந்து 200 சதவீதம் வரையில் அதிகரித்திருப்பதாக மத்திய வங்கியின் கிராமியக் கடன் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற 'விவசாய உள்ளீடுகளின் சில்லறை விலை' மீதான புள்ளிவிபரங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

ஆகக் குறைந்த விதந்துரைக்கப்பட்ட அளவில் பசளை பாவிக்கப்பட்டால் நில ஒதுக்கீடு சாத்தியப்படாது என மகாவலி போன்ற பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வுகள் காட்டியுள்ள போதிலும் பசளைப் பிரயோகம், விவசாய உற்பத்தி என்பன மீது இவ்விலை அதிகரிப்புக்கள் ஏற்படுத்தியுள்ள பாதிப்பினைப்பற்றி இன்னும் ஆராய வேண்டி உள்ளது.

மேலும், இவ்விளைவுகள் பெருந்தோட்டத் துறை, உள்ளூர் விவசாயத்துறை என்பவற்றின் மீது முரணான தாக்கங்களை ஏற்படுத்தினால், தாராண்மை நடவடிக்கை நோக்கங்கள் இந்நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்குக் கருதிய நோக்கங்கள் இந்நடவடிக்கைகளினாலேயே பாதிக்கப்படலாம்.

அட்டவணை—1

பயிர் அடிப்படையில் பசளை விநியோகம்

மெட்ரிக் தொன்கள்

| பயிர் | ஜனவரி — மே | | | |
| --- | --- | --- | --- | --- |
| | 1.979 | 1980 | 1981 | 1982 |
| தேயிலை | 49.9 | 40.5 | 49.9 | 39.2 |
| இறப்பர் | 11.7 | 9.6 | 8.8 | 7 0 |
| தென்னை | 13.0 | 11.7 | 10.3 | 7.2 |
| நெல் | 41.5 | 60.0 | 47.5 | 44.3 |
| உப உணவுப் பயிர்கள் | | 8.3 | 5.1 | 3.5 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 22. 5 | 1.5 | 1.1 | 0.9 |
| ஏனையவை | | 12.6 | 13.1 | 15.2 |
| மொத்தம் | 138.6 | 144.2 | 135.8 | 117.3 |

இலங்கைப் பசளைக் கூட்டுத்தாபனம்

மூலம்— மத்திய வங்கி மாதாந்த அறிக்கை

தெரிந்துள்ளது. எனினும், கஷ்டமான பொருளாதார நிலைமையிலுள்ள இந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிபுணத்துவ திட்டம் எந்த யோசனைகளையும் தெரிவிக்கவில்லை.

மேலும், நிபுணத்துவ திட்டம், விவசாயக் கடன் வசதிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளும் அதே சமயத்தில் (பக்கம் 16 அனுபந்தம் 4—"பொதுவாக விவசாயக் கடன் உர உபயோகத்தைத் தூண்டுவதில் முடிவான பயனை ஏற்படுத்தும்...") அக்கடனை மீட்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாயுள்ளது. வங்கிக் கடன்கள் உற்ற சமயத்தில் மீட்கப்பட வேண்டுமென்பது இப்பொழுது ஒப்புக்கொள்ளப்படுகிறது. வங்கிகளும் சகல தொடர்புள்ள அரசாங்க அதிகார சபைகளும் கடன் கொடுப்பதில் இந்த அம்சத்தைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளன. குறிப்பாகச் சிறிய விவசாயிகளிடையே உர உபயோகத்தை ஊக்குவிக்க முயன்று வரும் திட்டமொன்றைப்பொறுத்தவரை, இக்கடன்களைத் திருப்பிக் கொடுக்க விவசாயிகளுக்குள்ள ஆற்றல் சம்பந்தமாகச் சிபார்சுகளைச் செய்வதைவிட விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளைப் பலப்படுத்துவது சம்பந்தமாகச் சிபார்சுகளைச் செய்வதே மிகப் பொருத்தமாயிருந்திருக்கும்.

### தேசிய உரச் செயலகம்

நிபுணத்துவ திட்டம் தெரிவித்த யோசனைகளுக்கிணங்க, நாட்டில் உர உபயோகத்தை ஊக்குவிக்க அரசாங்கம் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. கொள்கையைப் பொறுத்த சிபார்சுகளைச் செய்வதற்காகவும் உர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மற்றெல்லா முகவர் நிலையங்களின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதற்காகவும் தேசிய உரச் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 10,000 மெட்ரிக் தொன்களுக்கு மேல் கொள்ளக்கூடியதாக அநேக பிரதேச உரக் கிடங்குகளைச் சங்கிலித் தொடர்போல அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாஹோவில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது பண்டகசாலை ஏற்கெனவே செயற்பட்டு வருகின்றது. மற்றும் களஞ்சியங்கள் வெலிகாமம், பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுவருகின்றன. நாட்டில்நிலவும் சமூக,பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்ட பின்பே பிரதேச களஞ்சியங்களைக் கட்டும் யோசனை மேற்கொள்ளப்பட்டதாவென்று சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தச் சந்தேகங்களால் பொருளாதாரத்துக்குள் "இறக்குமதி செய்யப்பட்ட கருதுகோள்" ஒன்றைப் பெயர்த்து வைக்க முயற்சி செய்யப்பட்டுள்ளதென்ற எண்ணம் சில வட்டாரங்களில் தோன்றியுள்ளது. இக்கருதது பிரதானமாகப் பின்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்:

1. நாட்டில் தற்போதுள்ள பண்டகசாலைகளின் கொள் அளவுகள் போதுமானவையெனக் கருதப்படுகின்றன. தற்போது துறைமுகத்திலும் நான்கு முக்கிய மொத்த விற்பனையாளர்களான இலங்கை உரக் கூட்டுத்தாபனம், கொழும்பு கொமர்சியல் கம்பெனி, ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, ஏ. பவர் அன்ட் கம்பெனி ஆகியவற்றிலும் உள்ள உரக்கலவை நிலையங்களின் மொத்தக் களஞ்சியக் கொள்ளளவு ஏறக்குறைய 150,000 மெட்ரிக் தொன்களாகும். மாஹோவிலுள்ள களஞ்சியக்கொள்ளளவு இதில் சேர்க்கப்படவில்லை. மேலும் 30,000 மெட்ரிக் தொன்களைக் கொள்ளக்கூடிய களஞ்சிய வசதிகள் யூறியா தொழிற்சாலையில் கிடைக்கும். எனவே மொத்த களஞ்சிய வசதியைக் கூட்ட உண்மையில் அவசியமுண்டா எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இடைப்பட்ட மாவட்ட மட்டத்தில் இலங்கை உரக் கூட்டுத்தாபனம் 45 மாவட்டக் களஞ்சியங்களை வைத்திருக்கின்றது. இதனால் இப்போதுள்ள கொள்ளளவுடன் மேலும் சுமார் 35,000 மெட்ரிக் தொன்களை வைக்க இடம் கிடைக்கின்றது. சில்லறை விற்பனை மட்டத்தில், ஏறக்குறைய 50,000 மெட்ரிக் தொன்களைப் பத்திரப்படுத்தக் களஞ்சிய வசதியுண்டென மதிப்பிடப்படுகிறது. எனவே முழு நாட்டிலும் தற்போது மொத்தம் 5,20,000 மெட்ரிக் தொன்களை வைத்திருக்கக் களஞ்சிய வசதி உள்ளது. இது, எந்த வருடத்திலும் உபயோகிக்கப்படும் உர அளவுக்கு 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டதாகும். இந்நிலையில் மேலும் களஞ்சிய வசதியைக் கூட்ட உண்மையில் அவசியம் உண்டாவெனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

2. போக்குவரத்து முறை மட்டும் நன்கு அமைந்திருந்தால், நாட்டிலுள்ள எந்த இடத்துக்கும் கொழும்பிலிருந்து 24 மணி நேரத்துக்குள் போய்ச் சேர்ந்து விடலாம். எந்த மாவட்டத்திலாவது உரத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், அதிக காலதாமதமின்றி அதைத் தீர்த்துவிட முடியும்.

3. இ. உ. கூட்டுத்தாபனத்துக்கு மாவட்டங்களில் தற்போதிருந்து வரும் களஞ்சியங்கள் கேந்திர இடங்களில் அமைந்திருக்கவில்லை; அவற்றில் ஒரு சில மட்டுமே சுமையேற்றியிறக்கும் புகைவண்டிப் பாதைகளுக்கு அருகில் இருக்கின்றன. பிரதேச களஞ்சியங்கள் அமைக்கப்படுவதற்கு இவை தாம் காரணங்கள் என்று கூறபபடுவதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. எனினும, இந்த மாவட்டக் களஞ்சியங்களிலுள்ள அடிப்படைக் குறை அவை அமைந்துள்ள இடங்களிலோ அல்லது அந்தக் கருதுகோளிலோ இல்லை; ஆனால், முகாமை செய்யும் ஏற்பாடு செய்யப்படாததில்தான் உள்ளதென்பதைச் சில ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டியுள்ளன. சிறுதொகையான வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே மாவட்டக் கிடங்குகள் அமைக்கப்பட்டன. நெடுங்காலமாக அவற்றில் போதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டோ அல்லது நவீன முகாமை முறைகள் புகுத்தப்பட்டோ அவை அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஒரு சில ஆயிரம் ரூபாப்பணத்தை மேலதிகமாக முதலீடு செய்தால், விரும்பிய மாற்றங்களைச் செய்திருக்க முடியுமென வாதிக்கப்பட்டுள்ளது. எனினும், முழு அமைப்பையும் நீக்கிவிட்டு, பல மில்லியன் ரூபாப்பணத்தை முதலீடு செய்வதுடன் ஒரு புதிய கருதுகோளுக்கிணங்க மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென நிபுணத்துவ திட்டம் யோசனை கூறுகிறது.

4. "கேந்திர இடங்களில் பிரதேச களஞ்சியங்களை அமைக்கும்" கருதுகோளுக்கும் ஆட்சேபனை கிளப்பப்பட்டுள்ளது. முழு நாட்டுக்குமான நான்கு களஞ்சியங்களில் மூன்று, வட மத்திய மாகாணத்தில் ஒன்றுக்கொன்று வெகு அருகில் அமைந்துள்ள காரணத்தினால் இந்த ஆட்சேபனை எழுந்துள்ளது. அனுராதபுரத்தில் இன்னொரு பிரதேச களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளதால் மாஹோவில் கட்டப்பட்ட பிரதேச களஞ்சியத்தின் சந்தைப் பகுதி குறையக்கூடிய பயமுறுத்தல் தோன்றியுள்ளது.

5. ஒரு களஞ்சியத்தை அமைப்பதில், தற்போதைய தொன்—மைல் தூரம இப்போதுள்ள மட்டங்களில் வைக்கப்பட வேண்டும். புதிய களஞ்சியங்களை அமைப்பதுடன் இதை மேலும் குறைக்க முடியும். புதிய பிரதேச களஞ்சிய முறையின் கீழ் உரம் கொழும்பிலிருந்தே தொடர்ந்து கொண்டு போகப்படுமாதலின், தொன்—மைல் தூரம் அதிகரிக்கக் கூடுமென அச்சங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இறுதியில் விவசாயியே மேலதிக செலவை ஏற்கவேண்டியிருக்கும்.

## உரத்தின் கிரயத்தைக் குறைத்தல்

குறிப்பாக உயர்விளைச்சல் பெறுவதாயின், உரம் ஓர் அத்தியாவசிய உள்ளீடாகும். ஆனால் சாகுபடியாளர் அதன் உபயோகத்துக்குப் பணம் கொடுக்கும் நிலையிலிருக்க வேண்டும். அப்படிப் பணங்கொடுக்கும் நிலையில் அவர்கள் இல்லையானால், மாற்று வழிகள் தேடிக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அரசாங்கம் விரும்பி எடுக்கக்கூடிய முதல் நடவடிக்கை விவசாயிக்கு உரத்தின் விலையைக் குறைப்பதாகும். உலகச் சந்தையில் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், உர வழங்கல்—விலை பற்றி நிலவும் குறுகிய கால—நடுத்தர கால கண்ணோட்டம், கப்பற் கேள்வு முதலியன பற்றிய தகவல்களைத் தொடர்ந்து பெறுவதன் மூலம் இறக்குமதிக்குத் திட்டமிடும் முறையைச் சீர்திருத்தியமைத்து, உரத்தின் இறக்குமதி விலையை அரசாங்கம் குறைக்க முடியுமென யோசனை கூறப்பட்டுள்ளது. இறக்கு அளவுகள் உள்ளனவாவென்று விசாரித்தறியலாம்; பெருமளவில் இறக்குமதி செய்யக் கட்டளை கொடுத்தால், பொருள் விலையை மட்டுமன்றிப் பொருளின் அலகொன்றிற்குக் கப்பற் கேள்வு விகிதங்களையும் குறைக்கலாம். உரங்களை இறக்குமதி செய்வதில் பல்வேறு இறக்குமதியாளர்களும் கூட்டாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு இடமுண்டாவென்று ஆராய்ந்தறிவதில் இலாபமுண்டு

பயிர்களுக்குப் போசணைப் பொருள்கள் கிடைக்கும் வாய்ப்பைக் குறைக்காமல் தற்போது உபயோகிக்கப்படும் உரங்களின் அளவைக் குறைக்கலாம். ஆனால், இதற்கு உர உபயோகம் திறமையாக நடைபெறவேண்டும். நைதரசன் உரத்திலுள்ள வினைத் திறன் வெகு குறைவாகவே இருக்கிறது என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. எனவே, உரத்தில் அஃதாவது யூறியாவில் அடங்கியுள்ள நைதரசனில் சிறிதளவு மாத்திரமே பயிரினால் உறிஞ்சப்படுகிறது. உரங்களை மிகத் திறமையாக உபயோகிப்பதற்கு மண்களை அபிவிருத்தி செய்வதும் பயிர் முகாமை முறைகளைச் சீர்திருத்தியமைப்பதும் தகுந்த நேரத்தில் விதைப்பதும் உரங்களை உபயோகிப்பதும் அவசியமாகும்.

விளைச்சலைப் பாதிக்காமலே, பல்வேறு வகை உரங்களையும் உபயோகிக்கும் போது அவற்றின் தற்போதைய ஒப்பியல் அளவுகளை மாற்றுவது சாத்தியம்.

இரசாயன உரங்களில் குறைந்த பட்சம் ஒரு பகுதியையேனும் பிரதியீடு செய்வதற்குச் சேதன எரு, சாக்கடைக்கழிவு, கலவன் பசளைகள் முதலியன போன்ற சேதனப் பொருள்கள் கிடைக்கக் கூடியதாயிருக்கும் இலங்கை போன்ற நாடுகளில் மிகுந்த உர வளம் உள்ளதென்பது கவனிக்கத்தக்கது. இத்தகைய பிரதியீடு செலவைக் குறைப்பது மட்டுமன்றி மண்ணின் பௌதிக நிலைமைகளையும் உற்பத்தித் திறனையும் நீரைப் பிடித்துவைத்திருக்கும் ஆற்றலையும் விருத்தி செய்யும்.

இறுதியாக, உர உபயோகம் தொடர்பான தொழில் நுட்பவியல் புதுமைகளை மேற்கொள்வதன் மூலம் செலவைக் குறைக்கலாம். கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வளமூட்டும் சத்துக்களை மெதுவாக விடுவிக்கும் உரங்களை உபயோகிப்பதன் மூலம் உரத்தின் பயனை அதிகரிக்க முடியும். மேலும், தற்போதுள்ள உயர்விளைச்சல் தரும்—உரங்களை ஏற்கும் விதை வகைகள் 1950களிலும் 1960களிலும் உரம்—நவதானியம் விலை விகிதம் குறைந்து வந்ததன் விளைவாகவே உண்டாக்கப்பட்டன. இரசாயன உரங்கள் குறைந்த அளவில் தேவைப்படும் உயர் விளைச்சல் தரும் புதிய விதையினமொன்றை உண்டாக்க விவசாய ஆராய்ச்சிக் கழகம் முயலவேண்டும். 1970களிலும் 1980களிலும் அதிகரித்துள்ள உரவிலைகளுக்கு இதுவே மிகத் திட்டமான பதிலாக விளங்கும்.

## உர மானியம்

உர விலைகளை குறைக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடிய இன்னொரு துறை உற்பத்தியாளர் மானியம் சம்பந்தப்பட்டதாகும். விவசாயி தற்போது உரத்துக்குக் கொடுக்கும் விலைகள் இறக்குமதி விலைகளாலும் நாணய மாற்று வீதங்களாலும் ஒவ்வோர் உரம் சம்பந்தமாகவும் உள்ள மானிய விகிதங்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. எண்ணெய் விலைகள் திடீரென அதிகரித்த 1970களின் முற்பகுதியிலிருந்து உரவிலைகள் அதிகரித்துக்கொண்டே வந்தன. மிதக்கும் நாணய மாற்று வீதங்கள் நாட்டுக்குள் புகுத்தப்பட்ட 1977ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நிலைமை மேலும் மோசமடைந்தது. நுகர்வோரும் உற்பத்தியாளரும் கூடுமானவரை இறக்குமதிப் பொருள்களுக்கு அச்சமயத்தில் சர்வதேச சந்தையில் நிலவும் நாணய விலைகளைக் கொடுக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையாகிவிட்டது. அதன் விளைவாக உரவிலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பை விவசாயிகள் எதிர்த்தார்கள். ஆனால், அவர்களுடைய எதிர்ப்பு பயன்தரவில்லை. எனவே, குறிப்பாக விவசாய உற்பத்தி உயர் மட்டங்களில் இருந்து வரவேண்டுமாயின், விவசாயிகளுக்கு உதவி தேவைப்படுமெனத் தோன்றுகிறது. இந்நோக்கத்துக்காக அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை ஒதுக்க வேண்டியிருந்த போதிலும், இறுதியாகப் பரிசீலிக்குமிடத்து, அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுள்ள ஒரு முதலீடாகவே இருக்குமென்பது நிச்சயம். ஏனென்றால், அதிகரிக்கப்பட்ட உதவி மானியம் நாட்டின் விவசாய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யப் பேருதவியாயிருப்பதுடன் பெருந்தொகையான சிறிய காணிக்காரர்களினதும் கிருஷிக விவசாயிகளினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவியாயிருக்கும்.

தற்போது உர மானியங்களின் பேரில் வருடாந்தம் 100 கோடி ரூபா வரை பெருந்தொகைப்பணம் செலவிடப்படுகிறது. ஆனால், இப்பணத்தினால் பெரும்பாலான சிறிய விவசாயிகளுக்கு அவ்வளவாக நன்மை ஏற்படுவதில்லை. உரங்களுக்கு அவர்கள் கொடுக்கும் உயர்ந்த விலைகள் தாம் அவர்கள் காணும் உண்மையாகும். தற்போதைய கஷ்டங்களுக்கு உலகச் சந்தை விலைகள் அதிகரித்துள்ளமையும் உயர் மானிய விகிதங்கள் வழங்கப்படுவதும் ஒப்பியல் ரீதியாக இலங்கையில் சில்லறை விலைகள் குறைவாயிருந்து வருவதும்தான் காரணம் என விளக்குவதனால் உரம் போன்ற உள்ளீடுகளை வாங்கச் சக்தியற்றிருக்கும் விவசாயியின் பிரச்சினை தீரப்போவதில்லை. அவனைப் பாதிக்கும் மிக முக்கிய விஷயம் என்னவென்றால், 1980 மார்ச் மாதத்தில் மெட்ரிக் தொன் ஒன்று 980 ரூபா விலையில் விற்கப்பட்ட உரக் கூட்டுத்தாபனத்தின் யூறியா 1982 மார்ச் மாதத்தில் 2,785 ரூபாவுக்கு உயர்ந்துவிட்டது; இதே காலத்தில் பவர் கம்பெனியின் விசேஷ நெல் உரம் 970 ரூபாவிலிருந்து 2,632 ரூபாவுக்கு அதிகரித்துவிட்டது.

நுணுக்கமாகக் கவனிக்க வேண்டிய ;இன்னொரு துறை விவசாயக் கடனைப் பொறுத்ததாகும். பல கடன் வசதித் திட்டங்கள் அமுலிலிருந்த போதிலும், ஒப்பியல் ரீதியாக ஒரு சில விவசாயிகளுக்கே இத்தகைய வசதிகள் கிடைக்கின்றன. விவசாயிகளில் ஏராளமானோர் கடனைத் திருப்பிக்கொடுக்கத் தவறியமை, அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையே தகவல் தொடர்பில்லாமை, உரங்களைப் பெறுவதில் நீண்ட கால தாமதங்கள், அலுப்பூட்டும் விண்ணப்ப நடைமுறைகள் ஆகிய இவை யாவும் உரம் போன்ற உள்ளீடுகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இதற்கு முன்னர் அமுல் செய்யப்பட்ட கடன் வசதித் திட்டங்களின் பயனைக் குறைத்துவிட்டன.

---

## வியாபாரப் பொருள்கள்

# கறுவா-ஏற்றுமதி மந்தம்

இலங்கையிடமிருந்து மிகப் பேரளவில் கறுவாப்பட்டையைக் கொள்வனவு செய்யும் நாடான மெக்ஸிகோ பாரதூரமான செலன்மதிநிலுவைப் பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதால் இவ்வருட நடுப்பகுதியிலிருந்து கறுவா ஏற்றுமதிச் சந்தை மந்த நிலையை அனுபவித்து வருகிறது. செப்டம்பர் மாத மத்தியில், சி 5 தரத்தைச் சேர்ந்த ஒரு கிலோ கிராம் கறுவாவின் விலை 35 ரூபாவுக்கு இறங்கிவிட்டது. முன்பு இது 56 ரூபாவுக்கு விலைப்பட்டது. ஆகஸ்ட் மாத முடிவில் கொழும்பில் நடைபெற்ற ஏலவிற்பனவு விலைகளின்படி எச் 2/3 தரமுள்ள சிறகுகள், கிலோ கிராம் ஒன்று ரூபா 23/75 இலிருந்து ரூபா 26/75 வரை விலைகூறப்பட்டன. இதற்கு எதிராக ஒரு வருடத்துக்கு முன்பு கிலோ கிராம் ஒன்று ரூபா 25/25 இலிருந்து ரூபா 27/75 வரை கூறப்பட்டன. கறுவாச் சிவல்கள் கிலோ கிராம் ஒன்று ரூபா 4 இலிருந்து ரூபா 5 வரை விற்கப்பட்டதுடன்; ; அவ்விலைகள் கூறப்பட்டன. விலைகள் பொதுவாக வீழ்ச்சி அடைந்துள்ளன. செப்டம்பர் மாத முற்பகுதியில் சிறு அளவுகளிலேயே சந்தைக்கு வந்ததால், கோரிக்கை சற்று வலுத்தது.

குறிப்பாக பெந்தா — எல்பிட்டிய, காந்தெனிய, ஹினிதும தேர்தல் தொகுதிகள் போன்ற தென் மாகாணத்தில் உள்ள பிரதேசங்களிலிருக்கும் உற்பத்தியாளர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு இப்பயிரையே நம்பி இருக்கின்றனர். இவர்களிடம் விற்கப்படாத கறுவா பெருமளவில் கையிருப்பில் இருக்க நேரிட்டது. ஏனென்றால், கொள்வனவாளர்கள் அவற்றை ஏற்க மறுத்துவிட்டனர். கறுவா இறக்குமதிகளின் பெறுமதியில் 60 சதவிகிதத்துக்கு மேற்பட்ட தொகைக்கு கடந்த வருடம் மெக்ஸிகோ பொறுப்பாயிருந்தது. 1980 ஆம் ஆண்டில்கூட மெக்ஸிகோ நாடே மிகப் பெரிய கொள்வனவாளராக விளங்கியது. அஃதாவது, ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் சுமார் 25 சதவிகிதத்துக்கு அந்நாடு பொறுப்பாயிருந்தது. பாரம்பரியமாக மெக்ஸிகோவும் அமெரிக்காவும்தான் இலங்கையின் கறுவாவை இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாக இருந்து வந்துள்ளன. ஆனால், சமீப காலத்தில் இந்நாடுகளுக்குக் கறுவா ஏற்றுமதிகள் வீழ்ச்சி அடைந்துள்ளன.

சமீப வருடங்களில் ஏற்றுமதிகள் அளவில் மட்டுமன்றிப் பெறுமதியிலும் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன. கடந்த வருடம் ஏற்றுமதிகள் உச்ச நிலையை — 9,174 மெட்ரிக் தொன்கள் — அடைந்தன; இவற்றின் பெறுமதி 3 கோடி ரூபா. எனினும், 1982-ம் ஆண்டில், அஃதாவது இவ்வருடத்தின் முதல் நாலு மாதங்கள் வரை, கறுவா ஏற்றுமதிகள் கடந்த வருடத்தின் செயற்பாட்டுக்குப் பின்னலேயே இருந்து வந்தன. 1982 ஆம் ஆண்டில் ஏற்றுமதிகள் அளவில் மட்டுமன்றிப் பெறுமதியிலும் 1981 ஆம் ஆண்டைவிடக் குறைந்துவிட்டன. அடுத்த நான்கு மாதங்களில் ஏற்றுமதிகளின் அளவும் பெறுமதியும் மேலும் வீழ்ச்சியுறுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. உள்நாட்டுச் சந்தையில் விலைகள் வீழ்ச்சி அடைந்து வந்தன. உற்பத்தியாளர்கள் வர்த்தக அமைச்சிடமிருந்து கஷ்ட நிவாரணம் கேட்டுக்கொண்டிருந்தபோது, கறுவாவின் விலை — சி 5 தரமுள்ள கறுவாவின் விலை மெட்ரிக் தொன் ஒன்று 4152 அமெரிக்க டொலருக்கும், எச் 2 தரமுள்ள கறுவாவின் விலை மெட்ரிக் தொன் ஒன்று 2211 அமெரிக்க டொலருக்கும் இடையே வேறுபடுகின்றன— மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று வர்த்தகர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

## சுற்றுலாத்துறை

# ஹோட்டல்துறை விஸ்தரிப்பு

60 க்கள் 70 க்கள் ஆகிய இரு தசாப்தங்களிலும் உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இடம்பெற்றது. ஒரு காலத்தில் சலுகை படைத்தோருக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த இச்சுகபோகம் முதலாம் உலகத்தின் சாதாரண பிரஜைகளின் வாழ்க்கை முறையின் ஒரு பாகமாக மாறியது. விரைவானதும் மலிவானதுமான சர்வதேசப் போக்குவரத்து, குறைவிருத்தி நாடுகளின் அறைச் சுகபோக விடுதிகளைக் கொள்வனவு செய்யக்கூடிய வருமானத்தைப் போரிற்குப் பிற்பட்ட காலத்தில் முதலாம் உலக மக்கள் பெற்றமை போன்றன இதனைக் காரியசாத்தியமாக்கின. மலிவானதும் விரைவானதுமான போக்குவரத்தின் ஒரு விளைவாக தொலைவிலுள்ள குறைந்த மக்களைக் கொண்ட நாடுகளை விரும்புகின்ற நாடுகின்ற ஒரு போக்கு உலகளாவிய சுற்றுலாத் துறையில் வளர்ச்சி பெற்றது. வெகுஜனச் செய்தி ஊடகங்களின் வாயிலாக விமானக் கம்பனிகள், சுற்றுலாத்துறை முகவர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் போன்ற உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழில் வட்டாரங்களால் பிரசித்தப்படுத்தப்பட்ட கவர்ச்சிகரமான இடங்களின் தேட்டத்தின் ஒரு விளைவு என இதனை அழைக்கலாம்.

இப்போக்கு வளர்முக நாடுகளில், குறிப்பாக ஆசிய—பசுபிக் பிராந்தியத்தில் உலகளாவிய சுற்றுலாத் துறையின் தாக்கத்தினைக் கொண்டுவந்தது. அறுபதுக்களிலும் எழுபதுக்களின் ஆரம்பத்திலும் சுற்றுலாத் துறையில் வளர்முக நாடுகளின் பங்கு 10—20 சதவீதமாக இருந்தது. எழுபதுக்களின் பிற்பகுதியில் இப்பங்கு தீவிரமாக அதிகரித்தது. எழுபதுக்களின் ஆரம்பத்தில், ஆசிய—பசுபிக் பிராந்தியம் அதிவிரைவான சுற்றுப் பயணிகள் வருகையை அனுபவித்தது. 1970 — 1980 இடைப்பட்ட தசாப்தத்தில் இப் பிராந்தியத்திற்கு விஜயம் செய்வோரின் எண்ணிக்கை நான்கு மடங்காக அதிகரித்தது. இது 50 லட்சத்திலிருந்து 2 கோடிவரை அதிகரித்தது. இப்பிராந்தியத்திற்குள், தென் ஆசியாவும் தெ. கி. ஆசியாவும் மிகக் கவர்ச்சிகரமான வளர்ச்சி விகிதாசாரத்தைப் பிரதிபலித்தன. தென், தெ. கி. ஆசியப் பிராந்தியத்தில் சுற்றுப் பயணிகளின்வருகை, 1980வரை வருடாந்தம் 20 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் 1981-ல் இப் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. இம்மாற்றம் ஏனைய தென், தெ. கி. ஆசிய நாடுகளிலும் பதியப்பட்டதா என்பது இன்னும் தெரியவில்லை. இலங்கையின் இவ் வளர்ச்சி விகிதாசாரம் 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக வீழ்ச்சி அடைந்தது.

அறுபதுக்களிலும் எழுபதுக்களிலும் முதலாம் உலகத்திலிருந்து நிகழ்ந்த இச்சுற்றுப் பயணிகள் வருகையின் தென் ஆசிய உபசார நாடுகளுள் ஒன்றாக இலங்கை மாறியது. அமைவிடம், இயற்கைச் சூழல் என்பவற்றைப் பொறுத்த வரையிலும் வருகைகளைத் தடுத்தல் கடினமாகும். பிரதானமாகத் தேவைப்பட்டது யாதெனில் பொது வசதியும் ஹோட்டல் வசதிகளுமாகும். கடந்த இரு தசாப்தங்களாக இலங்கைக்கு சுற்றுப்பயணிகளின் வருகை தென், தெ. கி. ஆசிய சுற்றுப் பயணிகளின் பொதுவான உட்பாய்ச்சலுடன் இணைந்த வகையில் அதிகரித்தது.

ஹோட்டல் வசதியின் இயலளவு இதனுடன் இணைந்து சென்று இவ் வதிகரிப்பினைச் சாத்தியமாக்கியதுடன், முதலீட்டினைக் கவர்ந்ததனையும் காணமுடிகின்றது. அண்மைக் காலங்களில் சுற்றுலா முகவர்கள் உள்ளூர்ப் போக்குவரத்து வசதிகளை அளிப்பதில் சில முதலீட்டாளர்களைக் கவர்ந்துள்ளபோதிலும் சுற்றுலாக் கைத்தொழில் மீதான முதலீடுகள் பிரதானமாக ஹோட்டல் தொழிலிலேயே இடம்பெற்றன. துணை வசதிகளிலும் சில முதலீடுகள் இடம்பெற்றன. உதாரணமாக, விடுதிகள், சுற்றுலாக் கடைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அண்மைக் காலம் வரையிலும் விடுதிகள் மீதான முதலீடுகள் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

1967—1980 இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் ஹோட்டல் கைத்தொழில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி விகிதாசாரத்தைக் காட்டியது. பொருளாதாரத்தில் வேறு எத்துறையும் அண்மைக் காலத்தில் இத்தகைய வளர்ச்சியைக் காட்டாமையால் இது ஒரு வகையில் ஒரு தனித்துவம் மிக்க அம்சமாகும். வரி ஊக்குவிப்புக்கள் தெளிவாகவே முதலீட்டாளர்களை இத்துறைக்குக் கவர்ந்து இழுத்தபோதிலும், இதனை மாத்திரம் வளர்ச்சிக்குரிய காரணியாகக் கூற முடியாது. ஏனெனில், கைத்தொழிற்துறைக்கும் இத்தகைய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டபோதிலும், ஹோட்டல் தொழில் துறையுடன் ஒப்பிடக்கூடிய வகையில் இது வளர்ச்சி அடையவில்லை. உல்லாசப் பயண ஹோட்டல் கைத்தொழில் வளர்ச்சிக்கு வேறு சில காரணிகள் துணையாக இருந்தன. அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கனவாகும்.

— இத்துறைக்குரிய தொழில்நுட்ப அறிவு பிரச்சினை குறைந்ததாகவும் கைத்தொழில் துறையை விடவும் கேள்வி குறைந்ததாகவும் விளங்குகின்றது. இக் காரணி கைத்தொழில்துறையை விடவும் ஹோட்டல் தொழில் துறையை முதலீட்டாளர்கள் விரும்பத் தூண்டியிருக்கலாம்.

— இலங்கையின் தொழில் முயற்சி அறிவும் அனுபவமும் பெரும்பாலும் வர்த்தக நடவடிக்கைகளிலேயே உள்ளது. இத் கைத்தொழில் இலகுவானதாகும்.

— நிர்மாணக் கைத்தொழில்துறையில் ஈடுபட்டிருந்தோர் தமது அனுபவத்தின் வாயிலாகக் குறைந்த செலவிலும் நிருமாண முகாமைப் பிரச்சினைகள் இன்றியும் ஹோட்டல்களை நிர்மாணிக்க முடிந்தது. இது நிருமாணக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டிருந்தோரை ஹோட்டல் கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைக்கு கவர்ந்தது எனலாம். இவர்கள் ஆரம்பத்தில் கட்டடத்தை நிர்மாணிப்போராக இருந்து பின்னர் இம்முயற்சியின் பங்குதாரர்களாக மாறினர் எனலாம்.

— 1970-க்குளின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர் திருத்தக் கையேற்பின் விளைவாகப் பெருந்தோட்ட முகாமையில் அனுபவம் பெற்றிருந்த பலர் சுற்றுப்பிரயாண ஹோட்டல் கைத்தொழிலுக்கு மாறினர். இவர்கள் தமது முகாமைத்துவ அனுபவம், திறன் என்பவற்றுடன் தனியார், பொது கடன் மூலமான மூலதனத்தையும் ஒன்றிணைத்துப் பயன்படுத்தினர். முன்னர் பெருந் தோட்டங்களைப் பரிபாலித்த பல முகவர் நிலையங்கள் சுற்றுப்பிரயாணக் கைத்தொழில் துறைக்குள் புகுந்தமை இக்காரணியின் செயற்பாட்டுக்குச் சிறந்த உதாரணமாகும்.

— உல்லாசப் பிரயாண ஹோட்டல் கைத்தொழிலின் பணியாட்கள், ஊழியர்கள் என்போரின் இயல்பும் பண்பும் தொழிற் சங்க மயமாக்கத்திற்கு இட்டுச் செல்லவில்லை.

மேற்குறிக்கப்பட்ட பல்வேறு காரணிகளாலும் வளர்ச்சியடைந்த உல்லாசப் பிரயாண ஹோட்டல் கைத்தொழிலின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அவதானத்திற்குரிய ஒன்றுகவும் விளங்கியது. ஹோட்டல் கைத்தொழிலின் இதே வளர்ச்சி விகிதாசாரம் இதே வேகத்தில் தொடரின் அது மிகையான அறைவசதி இயலளவிற்கு வழிவகுக்கும் எனவும் இத்தகைய நிலைமை ஹோட்டலில் தங்குகின்ற விகிதாசாரத்தை உடைவுப் புள்ளிக்குக் கீழ் வீழ்ச்சி அடையச் செய்யின் இக்கைத்தொழில் பாதகமான விளைவுகளை எதிர்நோக்கும் எனவும், 1977-ன் ஆரம்பத்தில் கருத்து வெளியிடப்பட்டது. ஹோட்டல் நிர்மாணம் மிகை இயலளவினை அடைந்தமையால் எழுபதுக்களின் மத்தியில் பிலிப்பைன்ஸ் பெற்ற அனுபவம், குறைவான தங்கு விகிதாசாரம், நிகர நட்டங்கள், கடன்கள் மீதான வட்டியைச் செலுத்த இயலாமை, கடன்காலகட்டத்தை மீள்பட்டியற்படுத்துவதற்குரிய தேவை என்பவற்றின் பின்னணியில் இலங்கையின் ஹோட்டல் கைத்தொழில் பற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பொருத்தமானவையாக விளங்கின.

ஹோட்டல் அறை இயலளவு கேள்வியை விடவும் மிகையாக இருக்கும் என்ற முற்கூற்று 1980 வரையிலும் சரியானது என நிரூபிக்கப்படவில்லை. தெரிவிக்கப்பட்ட ஐயம் சிறிதளவு மிகையானது எனலாம். ஆனல், சென்ற காலங்களில் சுற்றுப் பயணிகளின் வருகை வளர்ச்சி விகிதாசாரம் தொடர்ந்து நிலவியமை தங்குகின்ற விகிதாசாரத்தைத் தடுக்க உதவிய ஒரு பிரதான காரணி எனலாம். 1977 லிருந்து ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி விகிதாசாரம், அதிகரித்து வந்த ஹோட்டல் இடவசதியைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு வழிவகுத்தமை தெளிவானதாகும். எனினும் இவை 1981-ன் புள்ளி விபரங்களின்படி எதிர்கால வாய்ப்புத் தொடர்பாக நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடாது. உல்லாசப் பிரயாணிகள் வருகின்ற 'சந்தை' நாடுகள், உபசார நாடுகள் ஆகிய இரு சாரார்களினதும் கருத்துப்படி உலகளாவிய சுற்றுலா அதன் கட்டங்கள், போக்குகள், தளம்பல்கள் என்பவற்றுடன் உறைவுப் புள்ளியையும் கொண்டுள்ளது.

சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையை அறை வசதிகளுடன் இணைத்து, இவ்விரு மாறிகளதும் அடிப்படையில் மாற்றங்களை விளக்க முயற்சித்தல் போதியதல்ல. இங்கு பொதுவாகப் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு மூன்றுவது முக்கிய காரணியாக தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் தங்குவதற்கு எத்தனை பயணிகள் விரும்புகின்றனர் என்ற காரணி விளங்குகின்றது. ஹோட்டல்களில் இடவசதி இயலளவினை மாத்திரம் கவனத்திற்கொண்டு இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபை தனது புள்ளிவிபரங்களில் பிரதிபலிக்கின்றது. 1977 லிருந்து தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் தங்க விரும்புகின்ற சுற்றுப் பிரயாணிகளின் சதவீதம் கீழ்நோக்கிய போக்கினைக் காட்டுவது போல் தென்படுகின்றது. தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் அதிகரித்து வருகின்ற தங்கிடக் கட்டணங்களே இதற்குக் காரணமாக உள்ளன. ஹோட்டல் கட்டணங்களின் இவ்வதிகரித்து வருகின்ற விகிதாசாரம் நாட்டில் நிலவுகின்ற பொதுவீக்கத்துடன் இணைந்தது என்பதிற் சந்தேகமில்லை. ஆனல் இது அதிகரித்து வரும் நிருமாணச் செலவினல் மோசமடைந்துள்ளது எனலாம். கடந்த தசாப்தத்தில் நிர்மாணச் செலவுகள் பத்து மடங்கு அதிகரித்திருப்பதாக மதிப்பீடு செய்யபப்ட்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்கள் மீதான மொ. வி. வ. இதில் ஓரளவு பாதிப்பினைக் கொண்டிருக்கலாம். அதிகரித்து வருகின்ற உல்லாசப் பிரயாணிகளுக்குள் தரப்படுத்தப்பட்ட ஹோட்டல் வசதிகளைவிரும்பாத உல்லாசப்பிரயாணிகள் இருப்பதற்குரிய சாத்தியம் உண்டு. தரப்படுத்தப் படாத ஹோட்டல்களின் மலிவான கட்டணங்கள் இந்த ரகத்தைச் சேர்ந்த பிரயாணிகளைக் கவர்ந்திருப்பதுடன், இத்தகைய வசதிகளின் பண்பு, எளிமை இலங்கையின் நகர்சார் அல்லது மத்திய வகுப்பாரின் வாழ்க்கை முறையுடன் இணைந்திருத்தல் போன்றனவும் அவர்களைக் கவர்ந்திருக்கலாம்.

இவை எல்லாம் ஹோட்டல் தயாரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்பார்வை செய்ய வேண்டிய தேவையை உணர்த்துகின்றன. தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் தங்குகின்ற போக்கு கீழ்நோக்கித் தொடர்ந்து, தனிப்பட்ட ஹோட்டல்களின் உடைவுப் புள்ளிக்குக் கீழாகத் தங்குகின்ற விகிதாசாரம் வீழ்ச்சி அடையின் அது பிரச்சினையானதாக அமையலாம். உயர் மூலதனச் செலவுடனும் இதன் விளைவாக உயர் மாறும் செலவு விகிதாசாரத்துடனும் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல்களைப் பொறுத்தவரையிலும் இது உண்மையாகும். இத்தகைய ஹோட்டல்கள் உயர் இடவசதி உடைவுப் புள்ளியைக் கொண்டுள்ளன. கீழ்நோக்கிய இடவசதி விகிதாசாரத்தின் பிரகாரம் முதலாவது சிவப்புக் கோட்டினை இத்தகைய ஹோட்டல்களே கடக்கின்றன. மேலும், வரலாற்று ரீதியான மூலதனச் செலவுக் கணிப்பீட்டின் அடிப்படையில் போட்டியான கட்டணத்திற்கு இடவசதியை அளிக்கின்ற ஹோட்டல்

(19-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தொழில்

# இறக்குமதிகளின் போட்டியும் கைத்தறித்துறையும்.

துணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவற்றால் தாராளமாக்கப்பட்ட இறக்குமதிகளிலிருந்து தோன்றிய போட்டியை எதிர்த்துநிற்க முடியவில்லை. மொத்தம் சுமார் 45,000 கைத்தறிகளைக் கொண்ட 46 துணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பான்மையானவை இவ்வருடம் பெப்ரவரி மாதம் அளவில் செயற்படாதிருக்கக் காணப்பட்டன. நாட்டின் தென்பகுதியில் (அம்பலாங்கொடை, மாத்தறை, நாகொடை, அம்பலன்பிட்டிய, ஹக்மன) உள்ள கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் உத்தியோக பூர்வமாகப் பரிசீலனை செய்யப்பட்டபோது, ஒவ்வொரு சங்கமும் நெய்த கைத்தறித் துணிகளையும், மூலப் பொருள்களையும், தறி உபகரணங்களையும் பெருமளவில் கையிருப்பில் வைத்திருப்பது தெரிய வந்தது. கையிருப்பிலிருந்த விற்கப்படாத துணிகளில் சில 1977-ம் ஆண்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டவையாகும். கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வித கையிருப்பு வளர்வதற்குச் சந்தை கிடைக்காததே பிரதான காரணமாகும். எனினும், கனத்த அளவில் கையிருப்பில் உள்ள இந்தக் கைத்தறித் துணிகளுக்குச் சந்தை வசதியைக் கண்டுபிடிக்க எந்தப் பயனுறுதி வாய்ந்த முயற்சிகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

1977-ம் ஆண்டுக்கு முன்பு இந்தச் சங்கங்கள் யாவும் தங்குதடையின்றித் தாராளமாகத் துணிகளை உற்பத்தி செய்தன. உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் கிரமமாக வெளியேறிக் கொண்டிருந்தன. துணி இறக்குமதி மீது பலத்த கட்டுப்பாடுகள் இருந்து வந்ததால், அப்போது உற்பத்தி செய்யப்பட்ட துணியின் தரம் படுமோசமாயிருந்துங்கூட, இத்துணிகளுக்கு உடனடியாகச் சந்தை வசதி கிட்டியது. அப்போது இந்த நெசவாளர் சங்கங்களுக்குத் தங்களுடைய உற்பத்திப் பொருளின் தரத்தை (இழையமைப்பை அல்லது புதுப்புது ரகங்களை) விருத்தி செய்ய வேண்டும் என்ற தூரதிருஷ்டியோ அல்லது அதற்கான தூண்டுகோலோ இன்றி தரச் சிறப்பில் கவனஞ் செலுத்தாமல், அதே பழைய 'தரக் குறைவான' துணிகளையே அவை தொடர்ந்து உற்பத்தி செய்துவந்தன என்றாலும், அவைகளின் உற்பத்திப் பொருள்கள் எந்நாளும் விலையாகிக் கொண்டிருந்தன. அதன் பயனாகப் பல கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறந்த நிதிவளத்தைக் கொண்டிருந்தன. சில கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வசம் சேர்ந்திருந்த மிதமிஞ்சிய ரொக்கப் பணத்தைச் செலவிடுவதற்கு வழிகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. என்றாலும், அவை அதிகமான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி, அதனால் அதிகரித்த சம்பளச் செலவுகளைச் சமாளிப்பதிலேயே அப்பணத்தைச் செலவிட்டன.

1977-ம் ஆண்டு முடிவில் இறக்குமதிகள் மீதிருந்துவந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன், பல்வேறு ரகத் துணிகள் நாட்டுக்குள் தாராளமாகப் பாயத் தொடங்கின. அதன் ஒரு முக்கிய விளைவாகப் பொதுமக்கள் துணிகளைக் கண்டபடி வாங்காமல் பார்த்துத் தேர்ந்தெடுக்கவும், தரச் சிறப்பைக் கவனிக்கவும் தொடங்கிவிட்டனர். இறக்குமதி செய்யப்பட்ட துணிவகைகளையே அவர்கள் விரும்பி வாங்கினர். அத்துணிகள் பொதுவாக நல்ல இழையமைப்பைக் கொண்டனவாக இருந்ததுடன், மிகக் குறைந்த விலைகளிலும் விற்கப்பட்டன. சந்தையில் விலைபோகக்கூடிய நல்ல தரமான துணிவகைகளை உற்பத்தி செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சுறுசுறுப்பான முயற்சிகளை மேற்கொண்டிருப்பின், நெருக்கடி நிலையைப் பெருமளவுக்கு அவை சமாளித்திருக்க முடியும். ஆனால் அவை அவ்வாறு செய்யவில்லை.

கைத்தறித் துணி வகைகளை அபிவிருத்தி செய்வது பற்றியும் சந்தைப்படுத்துவது பற்றியும் ஓர் இந்திய நிபுணர் இப்பொழுது ஆலோசனை கூறிவருகிறார். அவர் கூட்டுறவுச் சங்கங்களின் உதவி ஆணையாளர் ஒருவருடன் காலி மாவட்டத்திலும் மாத்தறை மாவட்டத்திலும் உள்ள துணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றில் பரிசீலனை நடத்திய போது, கிட்டத்தட்ட ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் அதே முறையீடே அவர் காதில் விழுந்தது— 'அந்நாட்களில் நாங்கள் எவ்வகையான துணியை உற்பத்தி செய்தபோதிலும், உடனடியாக அதைக் காவிச் செல்வதற்காக மக்களும் வர்த்தகர்களும் எங்கள் சங்கங்களுக்கு வந்து காத்திருப்பது வழக்கம். ஆனால் இப்பொழுது எவரும் தலைகாட்டுகிறாரில்லை.' 'விசேட தொழில்நுட்ப அறிவில்லாமையும், சந்தைவசதி இன்மையும்தான் அவைகளின் தற்போதைய துக்கப்பாடான நிலைமைக்குக் காரணங்களாகும்' என்பதை அந்த ஆராய்ச்சிப் பரிசீலனை எடுத்துக்காட்டி உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களாயுள்ள நெசவாளர்களில் பெரும்பாலோருக்கு எத்தகைய நெசவு வேலையும் இல்லாததால், வேறு வழிகளில் ஜீவனோபாயத்தைத் தேட அவர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். இதற்கிடையில் மாதச் சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர்கள் (சாயமிடுவோர், மேற்பார்வையாளர், இலிகிதர்கள் முதலியோர்) தொடர்ந்து இச்சங்கங்களின் நிதிகளிலிருந்து சம்பளம் வழங்கப்பட்டு வருகிறார்கள். இது இந்தச் சங்கங்களின் மூலதனத்தைப் பெருமளவுக்குக் கரைத்துவிடக்கூடியதென்பது தெளிவு.

உடுதுணிக் கைத்தொழில் அமைச்சு அறிவித்தவாறான ஆதாரபூர்வமான நிலைமை கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தறி நெசவு உற்பத்திப் பொருள்கள்

(பத்து லட்சம் மீட்டர் கணக்கில்)

| | |
|---|---|
| மதிப்பிட்ட வருடாந்த உற்பத்தித் திறன் | 81.65 |
| 1980-ம் வருட உற்பத்தி | 24.00 |
| 1981-ம் வருட இலக்கு | 34.00 |
| 1981-ம் வருட உற்பத்தி | 28.00 |
| இலக்கின் சதவிகிதமாகச் செயற்பாடு | 82.30 |
| உற்பத்தித் திறன் உபயோகம் சதவிகிதம் | 34.30 |

ஆதாரம்— உடுதுணிக் கைத்தொழில் அமைச்சு.

(மொத்தம் 45,000 கைத்தறிகளைக் கொண்ட) சுமார் 46 துணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை கைத்தறிகள் போடப்பட்டுள்ள கொட்டில்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளன. இதேவேளையில், குறைந்தபட்சம் 10 தறிகளுக்குக் குறையாமல் கொண்ட நிலையங்களையும் வெளியே நடத்துகின்றன. மேற்குறித்த காரணங்களினால் தற்சமயம் கூட்டுறவுக் கைத்தறிகளில் கிட்டத்தட்ட 98 சதவிகிதத்தில் உற்பத்தி நடைபெறவில்லை. இவை தவிர, தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்களிடமும் சிறுகைத்தொழில் திணைக்களத்திடமும் கிட்டத்தட்ட சம தொகையான கைத்தறிகள் இருக்கின்றன.

பல கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரிய கொட்டகைகளில் ஜப்பானில் செய்யப்பட்ட மின்தறிகளையும் கொண்டுள்ளன. ஆனால், இவற்றில் பெரும்பாலானவையும் சோம்பிக் கிடக்கின்றன. ஏனென்றால், எதை உற்பத்தி செய்வது, உற்பத்தி செய்ததை எவ்வாறு சந்தைப்படுத்துவது என்பதை அறியாமல் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்துவருகின்றன.

இப்பிரச்சினைகளை எடுத்துக் காட்டிய ஆராய்ச்சிக் குழுவினர், மிகத் திட்டமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டால் கைத்தறிக் கைத்தொழிலுக்குப் புத்துயிர் அளிக்க முடியும் என்று யோசனை கூறியுள்ளனர். உற்பத்தி சாதனங்களில் தொழில்நுட்ப ரீதியாகச் சில அடிப்படைத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன், சந்தைப்படுத்தும் முறைகளையும் உற்பத்தித் திறமையையும் அதிகரிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்கள் தூண்டப்பட வேண்டும். புதிய வடிவமைப்புகளை மேற்கொள்வதிலும் துணிகளின் இழையமைப்பை அபிவிருத்தி செய்வதிலும் அவை உடனடியாக ஆழ்ந்த கவனஞ் செலுத்த வேண்டும். அதே சமயத்தில் உற்பத்தி நிலையச் செலவுகளைக் குறைப்பதற்காக மேலதிகமாயுள்ள ஊழியர்களை நீக்குவதுடன், உற்பத்தி மட்டங்களையும் உயர்த்த வேண்டும். இச்சங்கங்களுக்கெல்லாம் புத்துயிரளிப்பதென்பது நெடுங்காலம் வரை நடக்கவேண்டிய ஒரு விஷயமாயிருக்கலாம். இதற்கு அதிகப் பணச் செலவு ஆவதுடன் மற்றும் சிக்கல்கள்கூட எழலாம். மேலும், சந்தை நிலவரத்தை நோக்குமிடத்து, இலங்கையின் கைத்தறிக் கைத்தொழில் அதிக காலவிரயம் செய்வதற்கில்லை. ஆதலால், கைத்தறித் துணிகளின் ஏற்றுமதிச் சந்தையில் போட்டியிட இக்கைத்தொழிலை உடனடியாக முடுக்கிவிடுவதுதான் சிறந்த உபாயமாகுமென ஆராய்ச்சிக் குழுவினர் யோசனை கூறியுள்ளனர்.

ஒரு நல்ல ஏற்றுமதிச் சந்தையைப் பெறக்கூடிய துணிவகைகளை உற்பத்தி செய்யும் நிலையான திறன் இலங்கையின் கைத்தறிக் கைத்தொழிலுக்கு உண்டென இந்திய நிபுணர் அறிவித்திருக்கிறார். அரசாங்கத்தால் நடாத்தப்படும் நிலையங்களில் சிலவும் தனியார் நிறுவனங்களில் பலவும் மிகவும் பிரதிகூலமான நிலைமைகளை எதிர்நோக்கவேண்டி இருந்த போதிலும், ஏற்றுமதி செய்யத்தக்க துணிவகைகளை உற்பத்தி செய்ய அவை முயன்று வந்துள்ளன. தொழிலாளர் மிகச் செறிவாயுள்ள இத்துறையில் ஒரு புனரமைப்பு அத்தியாவசியம் எனத் தோன்றுகிறது. இந்திய நிபுணர் தெரிவித்த யோசனைக்கு இணங்க, தொடக்கத்தில் இரு மிகத் திட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

(1) நவீனமாக்கப்பட்ட சாதனங்களுடன் பொருளியல் ரீதியாக நின்றுபிடிக்கக்கூடிய நிலையங்களை ஸ்தாபிக்க வேண்டும். இந்த நவீன சாதனங்கள் ஏற்றுமதிக் கோரிக்கையைப் பூர்த்தி செய்ய அந்நிலையங்களுக்கு ஆகக்கூடிய அளவு வளைந்து கொடுக்கும் தன்மையை வழங்கும்.

(2) இத்தகைய நிலையங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப ஆதரவை அளிக்க வேண்டும். குறிப்பாக, துணிகளின் தரத்தை உயர்த்தும்படியும் அத்துடன் உற்பத்தித் திறனை அதிகரிக்கும்படியும் நெசவாளர்களைத் தூண்டக்கூடிய தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆட்களை வழங்க வேண்டும். வெவ்வேறு தரங்களைக் கொண்ட துணிவகைகளை உற்பத்தி செய்வதற்குக் காரியசாதகமான ஐம்பது தறி நிலையங்களை நடத்த அளவு, தரம் முதலிய தொழில்நுட்ப விவாக் கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

---

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடனும் போட்டியிட வேண்டி உள்ளன.

இச்சூழ்நிலையில் 1981-ன் போக்குகள் அதிகரித்த முக்கியத்துவத்தைப் பெறுதல் வேண்டும். 1980-ல் 28.57 % லிருந்து 1981-ல் 15.07 % ஆக வளர்ச்சி விகிதாசாரம் அமைந்துள்ளதனை நாம் காண்கிறோம். மாதாந்த எண்ணிக்கையை நோக்குகையில் கடந்த சுற்றுலாப் பருவத்தின் கடைசிக் கால் பகுதியில் இலங்கையின் சுற்றுப் பிரயாணிகள் வருகை வேகம் குறைவடைந்துள்ளது. இது அண்மையில் பத்திரிகைகளில் சுட்டிக் காட்டப்பட்டது. மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரப் பின்வாங்கல் இதற்குரிய ஒரு காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையின் உல்லாசப் பிரயாணிகளின் வருகை உறுதியான புள்ளியை அடைந்திருப்பது சாத்தியமாக இருப்பதுடன், இது 400,000 உள்ளாகத் தளம்பலுறலாம்.

இலங்கையின் சுற்றுலாத் துறை முரணான உற்பத்திப் போக்கினைக் கொள்ளாதிருக்க வேண்டுமானால், சுற்றுப்பிரயாணிகள் வருகை ஹோட்டல் இடவசதி என்பன தொடர்பாக உன்னிப்பானதும் கவனமானதுமான ஓர் ஆய்வு தேவை என்பதனை மேலே விவாதிக்கப்பட்ட காரணிகள் உணர்த்துகின்றன.

**குடிபெயர்வு**

# கிராமப்புற சட்டவிரோதக் குடிபெயர்வு.

மூன்றும் உலக நாடுகளின் நகரங்களில் நீண்ட காலப் பிரச்சினையாக இருந்துவருவது அரசாங்கக் காணிகளில் நடக்கும் சட்டவிரோதக் குடிப்பெயர்வாகும். ஆனால் சிலி நாட்டில் சட்டவிரோதக் குடிப்பெயர்வு மலைப் பிரதேசங்களிலும் கிராமப் பகுதிகளில் உள்ள வீதி ஓரங்களிலுமே பெருமளவில் நடைபெற்று வருகிறது. சட்டவிரோதக் குடிப்பெயர்ச்சியினல் உருவாகும் புதிய கிராமங்களில் பல பின்னர் நிரந்தரமாகிவிடுவதும் உண்டு. ஆனல் சில பகுதிகளில் குடிபெயர்வோர் அறுவடைக் காலத்தோடு வேறு இடங்களுக்குச் சென்றுவிடுகின்றனர்.

அல்டியாஸ் எனப்படும் புதிய குடிபெயர்வுக் கிராமங்களில் வசிப்பவர்கள் எப்போதும் விவசாயிகளாகவே இருப்பதுண்டு. ஆனல் அவர்கள் ஒன்றில் காணி இல்லாதவர்களாகவோ அல்லது வேலையில்லாதவர்களாகவோ அல்லது இரண்டுமே இல்லாதவர்களாக இருப்பர்.

விவசாய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட சிலி நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளே இதற்கு அடிப்படைக் காரணமாகும். 1965 ஆம் ஆண்டுக்கும் 1973 ஆம் ஆண்குக்கும் இடையில் சிலி நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் அந்தத் துறையில் அதிக அரசாங்கத் தலையீட்டையும் கட்டுப்பாடுகளையும் விதிப்பதாக இருந்தன. விலைக் கட்டுப்பாடுகள், கடன் வழங்களில் குறைப்பு, வட்டி வீதங்களில் கட்டுப்பாடு, வர்த்தகக் கட்டுப்பாடு என்பன அங்கு மேலோங்கி நின்றன. அந்தக் காலப் பகுதியிலேயே அங்கு காணிச் சீர்திருத்தமும் நடைபெற்றது. அப்போது சுமார் 6,000 பிரமாண்டமான கோட்டங்கள் சிறுசிறு விஸ்தீரணங்களில் துண்டாடப்பட்டன.

ஆனல் 1973 ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அரசாங்கம், விவசாய மற்றும் பொருளாதாரத் துறைகளில் தாராள சந்தைப்படுத்தல் முறையை அமுலுக்குக் கொண்டு வந்தது. அதன்விளைவாகக் கட்டுப்பாடுகள், கடன் குறைப்பில் தளர்வு என்பன நடைமுறைக்கு வந்தன. காணிச் சீர்திருத்தத்திலும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. துண்டாடப்பட்ட கோட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி பழைய சொந்தக்காரரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மிகுதி மூன்றில் ஒரு பகுதி சுமார் 40,000 குடும்பங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. எஞ்சிய மூன்றில் ஒரு பகுதிக் காணி ஏலத்தில் விற்கப்பட்டது.

இதன் விளைவாக முன்னர் நடைமுறையில் இருந்த நிலச்சுவாந்தர் முறைக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. இந்த நிலப்பிரபுத்துவ முறையின் கீழ், பெரும் நிலப்பரப்புக்குச் சொந்தமானவர்கள் பல விவசாயக் குடும்பங்களைத் தமது பண்ணைகளில் குடியமர்த்தி அவர்களைக் கொண்டு அங்கு விவசாயம் செய்வித்தனர். குடியானவர்களைத் தாம் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் போல அவர்களிடம் இருந்து வேலைவாங்கிக் கொண்டு, அவர்களின் பொருளாதார, சமூக, அரசியல் விவகாரங்களைத் தாமே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

ஆனல் புதிய அரசின் காணி மாற்ற நடவடிக்கைகளால் குடியானவர்கள் பெரும் எண்ணிக்கையில் வயல்களில் வேலை செய்ய முடியாதநிலை ஏற்பட்டது. இதனல் பலர் பண்ணைகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு வேலை இழந்தவர்கள், ஏனைய நாடுகளில் அனேகமாக நகரங்களுக்குப் 'படை' எடுத்துக் குடிபெயர்வதே வழக்கம். ஆனல் சிலி நாட்டில் அவ்வாறு நடைபெறவில்லை. 1975 ஆம் ஆண்டிற்குப் பின்னர் குடிசன மதிப்பீடு அங்கு எடுக்கப்படவில்லை. எனினும் விவசாய ஆராய்ச்சிக் குழு ஒன்று நடத்திய விவசாயிகள் வேலை வாய்ப்பு, குடிபெயர்வு, உற்பத்தி சம்பந்தமான ஆய்வுக் கணக்கெடுப்பின் பிரகாரம் நகரங்களின் குடிசனத் தொகை மாற்றம் அடையாமல் நிலையாக இருந்திருக்கிறது.

பண்ணைகளில் வேலை இழந்தவர்கள் நகர்ப்புறங்களை நாடாமல் இருப்பதற்குக் காரணம், நகரங்களில் வேலைவாய்ப்பு மிகக் குறைவாக இருப்பதேயாகும். குறிப்பாக கைத்தொழில் துறையில் வேலை வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் பின்னர் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களால், மலிவு விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுடன் போட்டி போட முடியவில்லை. அதனல் கைத்தொழிலுற்பத்தித்துறை வேலைவாய்ப்பைப் பெருக்கும் விதத்தில் வளர்ச்சி அடையவில்லை.

சிலி நாட்டில் வேலையில்லாதோரின் உத்தியோகபூர்வமான கணிப்பு 12 சதவீதமாகும். ஆனல் கிராமப்புற மக்களில் 6 முதல் 8 சதவீதமானவர்கள் அடிப்படை வாழ்க்கைச் செலவுக்குப் போதாத வருமானம் தரும் மிகவும் தரக் குறைவான தொழில்களையே செய்கிறர்கள். அதனல் அவர்கள் ஆகக் குறைந்த வேலைவாய்ப்பையே பெறுகிறர்கள் என்றே கருத வேண்டும்.

சிலி நாட்டு விவசாயிகள் தாம் எப்போதும் விவசாயிகளாகவே இருக்கவும் எப்படியும் ஒரு துண்டுக் காணியாவது பெற்றுவிட வேண்டும் என்றுமே விரும்புகிறர்கள் என அந்த நாட்டின் திட்ட இயக்குநர் திரு. ஜேம்ஸ் கிறிஸ்பி கூறுகிறர்.

### வேலை இழந்தவர்கள்

நாட்டின் வளம் மிக்க மத்திய பிராந்தியத்தில், விவசாயப் பிரதேசத்திற்கு வடக்கே, சந்தியாகோவை அண்மித்துள்ள இடத்தில் ஏற்றுமதிக்கென விசேஷமாக உற்பத்தி செய்வதற்காக, பெரிய அளவிலும், மத்திய அளவிலும் பிரமாண்டமான பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு பிரதானமாக பழ உற்பத்தியே மேற்கொள்ளப்படுகிறது.

இயந்திரமயமாக்கப்பட்ட பிரஸ்தாப நவீன பண்ணைகளில் பெருந்தொகை நிதி முதலீடு செய்யப்பட்டது. இந்தப் பண்ணைகளில் விளையும் பொருள்கள் நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் 90 சதவீதமாக இருந்தன. ஆனல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பண்ணைகளில் ஒரு சில வேலையாட்கள் மட்டுமே தேவைப்படுகின்றனர். அனேகமாக எல்லா வேலைகளும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. அறுவடை காலங்களில் மட்டும் தொழிலாளர் தேவை 10 முதல் 15 மடங்காக உயரும்.

நாடு பிராந்தியங்களாகப் பிரிக்கப்படுவதற்குச் சற்று முன்னர் தெற்குப் பகுதியில் கால்நடைப் பண்ணையே பிரதான தொழிலாக மாறியது. இந்தப் பிரதேசம் முன்னர் கோதுமை பயிரிடப்படும் பகுதியாக இருந்தது. ஆனால் உரவகைகளுக்கும் ஏனைய விவசாயப் பொருள்களுக்கும் வழங்கப்பட்ட மானியம் நீக்கப்பட்டதாலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் இறக்குமதி செய்யப்படும் கோதுமையுடன் உள்நாட்டுக் கோதுமை விலையில் போட்டிபோட முடியவில்லை. கால்நடைப் பண்ணைகளும், பழத் தோட்டங்கள் போலவே பெருந்தொகை முதலீட்டுடன் நடத்தப்பட்டன. அங்கும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே வேலைக்குத் தேவைப்பட்டனர்.

மத்திய பிராந்தியத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் செழிப்புக் குறைந்த நிலக் கண்டம் நீண்டு விரிந்து கிடக்கின்றது. இந்த நிலக் கண்டத்தின் வடக்கில் தானியங்கள் தவிர்ந்த ஏனைய விளைபொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதுண்டு. தெற்கில் அனேகமாகக் கோதுமையே பயிரிடப்படுகிறது. விவசாயத்தில் மிகக் குறைந்த லாபமே கிடைப்பதால் இரண்டு பகுதிகளிலும் பணம் அவ்வளவு பெருந்தொகையாக முதலீடு செய்யப்படுவது இல்லை. பிரதான உணவுப் பயிர்களான உருளைக்கிழங்கு, அவரை, பீட் வகைகள் என்பன மாறிமாறிப் பயிரிடப்படுவதுண்டு. எது அதிக விளைச்சல் தருமோ அதனையே உற்பத்தி செய்கிறார்கள். இங்கு சிறுமட்ட விவசாயிகளுக்கு இடமுண்டு.

நிலச்சுவாந்தர் பண்ணை முறை அருகியதனாலும் ஏற்றுமதி நோக்குடனான பண்ணைகள் இயந்திரமயமாக்கப்பட்டதாலும் வேலை இழந்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் — சுமார் இரண்டு லட்சம் பேர் — முன்சொன்ன மத்திய பிராந்தியத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடைப்பட்ட நிலக் கண்டப் பகுதியில் விவசாயம் செய்ய முயற்சிக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் சந்தேகப்பட்டனர். அதன் காரணமாகப் பெருமளவில் உள்நாட்டுக் குடிபெயர்வுக்கு வழி உண்டாகும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது. ஆராய்ச்சியாளர்களின் சந்தேகம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது.

இந்தப் பிரதேசத்தில் காணிச் சொந்தக்காரராக இருக்கும் தமது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் பெருவாரியான விவசாயிகள் சேர்ந்துகொண்டனர் என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. சிலர் சிறு தோட்டங்களில் வேலைக்குச் சேர்ந்து கொண்டனர். மற்றவர்கள் பங்கு அடிப்படையில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். மற்றும் பலர் 'புதிய கிராமவாசிகள்' ஆக மாறினர்.

இந்தப் புதிய கிராமங்களில் குடிபெயர்ந்துள்ளவர்களின் பிரச்சினைகள், நஷ்டங்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைச் சிபார்சு செய்யும் நோக்கத்துடன் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சிக் குழுவின் அனுசரணையுடன் விவசாய ஆராய்ச்சிக் குழு ஆய்வு ஒன்றை நடாத்தி வருகிறது.

கால்நடைப் பண்ணைப் பிரதேசத்துக்குச் சமீபத்தில் உள்ள ரெமியுக்கோ என்ற இடத்தைச் சுற்றிவர உள்ள பகுதி முன்னர் கோதுமை பயிரிடப்பட்ட இடமாகும். இந்தப் பகுதியில் மப்புச்சே இந்தியர்களுக்கென காணிகள் விசேஷமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அக்காணிகளின் சொந்தக்காரர்களாகவும் விளங்குகின்றனர். பல பரம்பரைகளாக மிகக் குறைந்த தொகையை முதலாக இட்டு அங்கு விவசாயம் நடந்திருக்கிறது. மண் வளமற்றது. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான காணிகளின் விஸ்தீரணம் மிகவும் சிறிய அளவினதாகும். அதனால் போதிய வருவாய் பெற முடியாதிருந்தது. இக்காரணத்தால் கோதுமைச் செய்கையிலிருந்து மாறி வேறு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் வாய்ப்பும் வசதியும் உள்ளவர்களும் அவ்வாறே செய்துள்ளனர். அவர்கள் இப்போது பலவிதமான உப உணவுப் பொருள்களைப் பயிரிடுகின்றனர்.

அந்தப் பகுதியில் பாரிய அளவிலான காடு வளர்ப்புத் திட்டத்திற்காக விவசாயிகள் தமது காணிகளை விற்கும் அபாயமும் இப்போது தோன்றியுள்ளது. அருகில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் வேலை வசதி மிகக் குறைவு. எல்லைச் சண்டைகள் அடிக்கடி நடைபெற்றுவருவதால், ஆர்ஜென்டினாவுக்கு வேலைதேடிக் குடிபெயர்வதற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாகிவிட்டது. வருடத்தில் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மப்புச்செக்காரர் பழத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக வடக்கே செல்கின்றனர். அறுவடைக் காலத்தில் அங்கு வேலை செய்வதன்மூலம் ஆகக் குறைந்த ஊதியத்தைவிட சற்று அதிக பணம் உழைக்க முடியும். "இதில் குறிப்பிடத்தக்க விசேஷம் என்னவெனில், இவ்வாறு சற்று அதிக வருவாய் பெறக்கூடியதாக உள்ளது பெரும் அதிர்ஷ்டம் என்றே அவர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் இதுவே அவர்கள் மேலதிக பணம் சம்பாதிப்பதற்கு உள்ள ஒரேயொரு வழியாகும்" என்று திட்ட இயக்குநர் ஜேம்ஸ் கிறிஸ்மீ சொல்கிறார்.

இந்தப் பகுதிக்கு வடக்கே பழத் தோட்டக் கண்டத்துககுக் கீழே, பல்லின பயிர்ச்செய்கை மூலம் அதிக வேலைவாய்ப்புக் கிடைக்கும் வசதி உண்டு. பழங்கள் பழுக்கும் அதே காலப்பகுதியிலேயே பயிர்களும் முற்றி அறுவடைக்குத் தயாராக இருப்பதால் விவசாயிகள் தங்கள் காணிகளை விட்டு பழத் தோட்டங்களுக்குச் செல்ல முடிவதில்லை.

இந்தப் பகுதிக்கு மிகப் பெரும் எண்ணிக்கையினர் வேலை தேடிச் செல்கின்றனர். ஆனால் அந்தப் பகுதியின் பொருளியல் நளம் அவர்களை ஆதரிக்கக்கூடிய அளவுக்கு இல்லை என்பதாலும், ஏழ்மை நிலையே அங்கு மேலோங்கி நிற்கிறது என்பதாலும் அவர்கள் மிக விரைவில் அங்கிருந்து வேறு இடம் தேடிச் செல்வார்கள் என ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர். சிலர் பண்ணைகளில் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அதேவேளை, பெரும் எண்ணிக்கையானோர் காட்டில் பழங்களைச் சேகரித்தும், மீன்பிடித்தும், வேட்டையாடியும் தமது ஜீவனோ

(28-ம் பக்கம் பார்க்க)

# மகாவலியாற்றைத் திசை திருப்பும் திட்டம் ஒரு பரம்பரைக் கிராமத்தின்மீது ஏற்படுத்தி உள்ள தாக்கம்

— எஸ்- பீ- பெர்னாண்டோ

## முகவுரை

இக்கட்டுரை வட மத்திய மாகாணத்தில் உள்ள புராணக் கிராமங்களில் ஒன்றைப் பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சியறிக்கையொன்றிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இக்கிராமம் 1970 களின் நடுப்பகுதியில் மகாவலித் திட்டத்தின்கீழ் வந்துள்ளது. இந்தச் சிறு கட்டுரையில் எங்கள் கிராமத்தின் மீது இத்திட்டம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை ஒரு சமூகவியல் கோணத்துக்குள்ளே அமைக்க முயல்வோம்.

எங்களுடைய ஆராய்ச்சிக்கு இகலவேவ (1) என்னும் இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டதற்கு இரட்டைக் காரணங்களுக்காக ஒரு நோக்கம் உண்டு. முதலாவதாக பரம்பரை உற்பத்தி முறையொன்றின் சில சுயத்தன்மைகளைத் தெற்றெனக் காட்டிய ஒரு கிராமத்தின் மீது ஒரு விவசாயத் திட்டம் அமுலாக்கப்படும் விதத்தை ஆராய்வதற்கு அது ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்தது. இரண்டாவதாக, திட்ட அமைப்பாளர்கள் கூறியுள்ளபடி. இப்பிரதேசத்தில் மட்டுமே, பொருளாதார விருத்தியில் நோக்கங்கொண்டுள்ள அதே சமயத்தில், சம்பந்தப்பட்ட குடியேற்ற வாசிகளின் சமூக—கலாசார அம்சங்களை அவர்கள் கவனத்துக்கு எடுத்துக்கொண்டுள்ளனர். ஆகையால், இந்த ஆராய்ச்சியின் தொடக்கத்திலேயே நுண்—மட்டத்தில் இத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய தாக்கம் எப்படியிருக்கலாம்? அது இந்தப் புராணக் கிராமத்தின் முழு அமைப்பையும் மாற்றிவிடப் போகிறதா? என்ற கேள்விகளை எழுப்பலாம்.

இந்த ஆராய்ச்சிக்காக உருவாக்கப்பட்ட பிரதான ஆராய்ச்சி முறையில், நேர்முகப் பேட்டிகள் வாயிலாகப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாள் அடங்கியிருந்தது. இவை முறைப்படியல்லாத பேட்டிகள் மூலம் நிறைவாக்கப்பட்டன. பிரதேசம் நான்குக்கிராமங்களாகப் பிரிக்கப்படுகிறது. எங்களுடைய பரிசீலனையின் நோக்கத்துக்காக, இவை படை (அடுக்கு) யாகவும் குடும்பங்கள் மாதிரி பார்க்கும் அலகாகவும் உபயோகிக்கப்பட்டன. மொத்தக் குடிமக்கள் தொகையில் 33 சதவிகிதத்தினராயுள்ள 200 குடும்பங்கள் மாதிரிக்காகத் தெரிவு செய்யப்பட்டு, கணவனிடமிருந்தும் மனைவியிடமிருந்தும் மாறி மாறிப் பேட்டிகள் பெறப்பட்டன(2).

திட்டத்தின் விளைவைப் புரிந்துகொள்வதற்காக, மகாவலிக்கு முன்பு இக்கிராமத்தின் அமைப்பைச் சுருக்கமாகக் குறிப்பிடுவது சுவாரஸ்யமாயிருக்கும்.

(1) இது ஒரு கற்பனைப் பெயர்.

(2) பரிசீலனை 1980 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## மகாவலிக்கு முன்பு கிராமத்தின் அமைப்பு பொருளாதாரக் கட்டுக்கோப்பு

நெற் சாகுபடியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட வரலாற்றைக் கொண்டுள்ள ஒரு கிராமத்தின் பொருளாதார உள்ளமைப்பை ஆராய முயலும்போது, காணி உடைமை அமைந்துள்ள விதமும் கிராம நீர்வளங்களை அடையும் முறையும் மிக முக்கியமாகும்.

கிராமவாசிகள் தங்களுடைய சொத்துரிமைகள் சிங்கள மன்னர்களின் காலத்திலிருந்து தங்களிடம் இருந்து வருவதாக மிகுந்த பெருமையுடன் கூறுகின்றனர். வாய்மொழியாக வந்த கர்ணபரம்பரைச் செய்திகளின்படி, பரவணிச் சொத்துரிமைகள் இப்பிரதேசத்தில் தங்களுடைய உறவினர்களுடன் குடியிருந்த மூன்று குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆதலால், இக்கிராமவாசிகள் அதே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக, ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்களாக இருக்கிறார்கள். அத்துடன், தாங்கள் விசேட நல உரிமைகளும் அனுகூலங்களும் வழங்கப்பட்ட ஓர் உயர் சாதி — ரடால சாதியைச் சேர்ந்தவர்கள் என்றும் வெளிப்படையாகத் தெரிவிக்கிறார்கள். கிராமக் காணிகளுக்குள்ள உரிமை அவர்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் உள்ளதாயிருக்கிறது. இதன் காரணமாக, இவ்வுரிமையைத் தங்கள் குலத்துக்குள்ளேயே பாதுகாத்து வைக்க வேண்டும் என்ற நோக்குடன் இக்குழுவினர் தங்களுடைய சொந்தச் சமூக — கலாசார நெறிமுறைக் கோவைகளை உருவாக்கினர். உண்மையில், மகாவலித் திட்ட காலம்வரை, கிராமக் காணிகளில் எதுவும் அவர்களுடைய குலத்துக்கு வெளியே எவருக்கும் கைமாற்றப்படவில்லை. இவ்விதமாக , இக்குழுவினர் தங்களுடைய சாதிச் சொந்தத்தில் தொடர்ந்து ஒரேவித இயல்பினராக இருந்துவந்தனர்.

இந்த ரடால குடும்பங்களுக்குப் புறம்பாக, மற்றும் குழுக்களும் இருந்தன. இக்குழுக்கள் ரடால குடும்பங்களுக்கு உதவியாக இருந்தன. இவை விசேஷ நலஉரிமைகளற்ற சாதிகளைச் சேர்ந்தவை — முரசறைவோர், துணி வெளுப்போர். இவர்களுக்குச் சொந்தமாக எந்த நெற்காணிகளும் இருக்கவில்லை. இவர்கள் கிராமத்துக்கு அருகிலுள்ள காணிகளில் வசித்து வந்தனர். கிராமக் கோவிலிலும் ரடால குடும்பங்களுக்கும் அவர்கள் பல்வேறு சேவைகளைச் செய்ய வேண்டியிருந்தது. இவ்விதமாக அவர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்தைத் தேடிக் கொண்டனர்.

காணி உடைமையைப் பொறுத்தவரை, இரு குழுக்களுக்குமிடையே ஒரு குறிப்பிடத்தக்க வித்தியாசம் நிலவியது. அத்துடன், சமூக முறையின் அனுக்கிரமத்தில் அவர்களுடைய நிலைகளும் வெவ்வேறாக இருந்தன. எனவே, காணி என்பது வெறும் உற்பத்திக் கருவியாக மட்டுமன்றி அதற்கு மேற்பட்ட ஒன்றாக விளங்கியது. மக்கள் தங்களுடைய பரஸ்பர சமூக உறவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்குரிய ஓர் அடிப்படையாகி விட்டது காணி.

இங்கு ஆராயப்பட வேண்டிய இன்னோர் அம்சம் காணிக் கைமாற்ற முறையாகும். காணிகள் குலபதி முறையில் அஃதாவது தந்தையிடமிருந்து குழந்தைகளுக்குக் கைமாற்றப்பட்டன. எனினும், கிராமத்திலுள்ள மக்கள் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு அதே சமயத்தில் அதன் காணிப் பரப்பில் அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை; இதற்குக் காரணம் கிராமக் குளத்தில் நீர் வரையறுத்த அளவில் இருந்ததே காரணம். ஆதலின், சில குடும்பங்கள் மூல மானியக் காணி உரிமையாளரின் நேரடிச சந்ததியான ஒருவரின் தலைமையில் போதிய நீர்வளமுள்ள இடங்களில் புதிய கிராமங்களை உண்டாக்குவதற்காகத் துணிந்து காட்டுக்குள் சென்றனர். (ஏனென்றால், காணி ஓர் அரும் பொருளாயிருக்கவில்லை). இந்தப் பிரதேச விஸ்தரிப்பு முறை படிப்படியாக குடும்ப அதிகாரத்தையும் வளர்த்தது.

## நெற்சாகுபடி நீரைப் பெறுதல்

மழை நீரால் நிரம்பிய கிராமக் குளமே குடிமககளுக்குத் தேவையான நீருக்குரிய பிரதான, ஆதாரமாக இருந்துவந்தது. வறண்ட பிரதேசத்திலே நீர் ஓர் அரும்பொருளாக இருந்தது. இக்காரணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த கிராமவாசிகள் நீர்வழங்கலைக் கட்டுப்படுத்தவும், விநியோகிக்கவும் பராமரிக்கவும் குளத்தைச் சுற்றித் தங்களை ஸ்தாபன ரீதியாக அமைத்துக் கொண்டனர். கிராம நெற்கழனிகளில் பங்குதாரராயிருந்த ஒவ்வொருவருக்கும் கிராமக் குளத்தில் இருந்து நீரைப் பெற உரிமை இருந்தது. கீழ் சாதியாருக்கு இவ்வுரிமை அளிக்கப்படவில்லை. எனவே, அவர்களுடைய வாழ்க்கையில் நெற்சாகுபடி ஓர் இரண்டாந்தரமான பங்கே எடுத்தது.

## சேனைச் செய்கைக்காகக் காட்டுக் காணியைப் பெறல்

வரலாறறு ரீதியாக, மாறும் அல்லது சேனைச் செய்கை கிராமப் பொருளாதாரத்தில் ஒரு பொது அம்சமாக இருந்து வந்தது. கிராம வாசிகள் கிராமத்தின் எல்லைகளுக்குள்ளேயிருக்கும் காட்டுக் காணியில் பயிரிடத் தங்களை ஸ்தாபன முறையில் கூட்டாக அமைத்துக் கொண்டனர். கீழ்ச் சாதியார் தங்களுடைய சேனைச் செய்கையில் ஈடுபடுவதற்காகக் காட்டின் ஒரு தனிப் பகுதி அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

## உழைப்பு முறையின் அமைப்பு

சாகுபடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள், முதலாவதாக , விரிவடைந்த குடும்பத்துக்குள்ளேயே செய்யப்பட்டன. வழக்கமாக இந்த ஏற்பாடுகள் குடும்பத் தலைவரான தந்தையின் கட்டுப்பாட்டதிகாரத்தில் இருந்தன. முழுக் குடும்பமும் (விரிவடைந்த குடும்பம்) வயலில் ஒன்றாக வேலை செய்தனர். உற்பத்தி விநியோகிக்கப்பட்டபோது மட்டுமே உண்மையான பங்கீடு நடைபெற்றது.

இரண்டாவதாக, இந்தப் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கிராம மட்டத்திலும் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது (நீரை விநியோகிப்பது, குளத்தை முகாமை செய்வது, சாகுபடி நடவடிக்கைகள் முதலியன சம்பந்தமாக வேலை நேர அட்டவணையைத் தயாரிப்பது). இந்த நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் சடங்காசாரங்கள் இரண்டறக் கலந்திருந்தன. இதனால் இந்நடவடிக்கைகளில் மனச்சாட்சிக்கொப்ப பங்குபற்றும் கடமைப்பாட்டுணர்வு எல்லோருக்கும் உண்டாகியது. ஆதலால், கிராமத்துக்குள்ளே தொழில் பிரிப்பு அவசியமாகிவிட்டது—நீர் வேலைப் பகுதி, காணி, சடங்காசார நிகழ்ச்சிகள் முதலியவற்றிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், இந்தத் தொழிற் பிரிப்பு இவ்வித்தியாசமான குழுக்கள் நிலத்துடன் கொண்டுள்ள உறவையும் தெளிவாக எடுத்துக் காட்டியது. நிர்வாக விவகாரங்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் ஓரளவுக்கு நேரடி உற்பத்தியாளர்களாக இருந்தனர். அவர்களுடைய வயல்களில் மற்றவர்கள் வேலைசெய்தனர். கீழ்ச் சாதிக் குழுவினர் நிலத்தில் வேலை செய்வதுடன் கட்டுண்டு கிடந்தனர். மற்றக் கிராமவாசிகள் சுதந்திரமாகப் பயிரிடுவோராயிருந்தனர். அவர்களுடைய சாகுபடி நடவடிக்கைகள் பரஸ்பர உதவி முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

## உற்பத்தியின் பகிர்வுமுறை

ஆரம்ப கட்டங்களில், ஒருவகை நிலவரி பொருளாகவோ அல்லது பணமாகவோ அல்லது சேவையின் உருவத்திலோ பிடுங்கப்பட்டது. உற்பத்தி, பிரதானமாகப் பிழைப்பாதாரமாகவும் பல்வேறு சேவைகளுக்கான கொடுப்பனவாகவும் தெய்வங்களுக்குரிய நிவேதனங்களாகவும் உபயோகிக்கப்பட்டது. இந்தப் பகிர்வு முறைகள் அக்குழுவினருக்குள்ளே கலாசாரப் பாரம்பரியங்களையும் இயற்கைமீது அவர்கள் சார்ந்திருக்கும் உறவுகளையும் என்றென்றும் நிலைக்கச் செய்வதோடு நிலச் சொந்தக்காரரின் நிலையையும் உத்தரவாதப்படுத்தியது.

## அரசியல் ஸ்தாபனம்

கிராமவாசிகளின் முக்கிய அக்கறை விவசாயத்தை நோக்கியே ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது. தங்களுடைய விவசாயப் பணிகளை நிறைவேற்றும் நிகழ்வுப் போக்கில் இயற்கை உண்டாக்கிய கஷ்டங்களை வெல்வதற்கு அவர்கள் அவ்வளவாக நோக்கங்கொள்ளவில்லையாதலால், கூட்டு ஸ்தாபனத்துக்கான தேவை மிக முக்கியமாகிவிட்டது. இவ்விதமாகக் கிராமத்திலுள்ள அரசியல் முறை, உற்பத்தியின் சமூக உறவுகள் ஒழுங்குபடுத்தி அமைக்கப்படுவதுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

பிரிட்டிஷ் நிர்வாகத்தின்போது தோட்டப் பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கிராமத்துக்குள் ஒரு பெரும் நிலைமாற்றம் புகுத்தப்பட்டது. அதன் விளைவாகக் காணியை அடையும் முறைக்கு ஒரு நியாயாதிக்க உருவம் கொடுக்க வேண்டிய அவசியம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. அக்காலத்திலிருந்து தீவிர உபயோகத்திலிருந்த சகல காணிகளும் தனியார் சொத்துக்களாகின. உரிமை அறிவிக்கப்படாத சகல காணிகளுக்கும் நேரடியாக அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இக்கொள்கைகளின் விளைவாக, பிரதேச விஸ்தரிப்பின் காரணமாகக் காணிகளைப் பெற்ற குடும்பங்கள் பெருவாரிச் சொத்துக்களின் சொந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்களாகிவிட்டனர். அதே சமயத்தில் காணிகளும் அரும்பொருளாகிவிட்டன. குடிமக்கள் தொகை அதிகரித்ததுடன் கிராமத்தில் காணிகள் துண்டாடப்பட்டன. காணிகள் திரும்பத் திரும்பத் துண்டு துண்டாக்கப்பட்டதால், விரைவில் பாத்திகளில் சில இலாபந்தராதவையாகிவிட்டன. இவை அதிகமான காணிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தவர்களுக்கு மாற்றப்பட்டன. இக்காணிகளை இவ்விதம் கைமாற்றியவர்கள் குத்தகை விவசாயிகளாயினர்

காணிச் சொந்தக்காரர்கள் இப்பாத்திகளை விலைக்கு வாங்கி, இவற்றைக் குத்தகை அடிப்படையில் விவசாயிகளுக்கு மீண்டும் வழங்கியதால் இரு சாராருக்குமிடையே ஒரு புதிய உறவு தோன்றியது. அதன் விளைவாக, நாமறிந்துள்ள சுரண்டல் முறைகள் தலைதூக்கின. குத்தகை விவசாயிகள் காணியில் தங்களுக்கு உள்ள உரிமைகளை நீக்கிவிட்டதன் மூலம் தொழில் முறையில் மட்டுமன்றி உற்பத்தியின் பகிர்வுமட்டத்திலும்கூட பிறரைச் சார்ந்திருக்கும் ஒரு குழுவாகிவிட்டனர். இப்பொழுது நேரடி உற்பத்தியாளருக்கும் அஃதாவது குத்தகை விவசாயிக்கும் காணிச் சொந்தக்காரருக்கும் இடையே சமமற்ற பங்காளித்துவம் இருந்து வந்தது. எங்களுடைய கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட வர்க்க அமைப்புத் தோன்றுவதற்கு அடிகோலிய வழிகளில், உறவுப் பந்தங்கள் மீது நிறுவப்பட்ட இந்தச் சாதாரண ஒப்பந்த முறைகளும் ஒன்றாகும்.

ஆட்சியாளர்கள் தங்களுடைய நிர்வாக உபாயங்கள் மிகச் சிறப்பாகத் தொழிற்படுவதற்காக, ஏற்கெனவே ஒரு ஸ்திரமான பொருளாதார அடிப்படையைக்கொண்ட இத்தலைவர்களைத் தங்களுக்குச் சேவைபுரிய அமர்த்திக் கொண்டனர். ஆட்சியாளர்களுக்கு அவர்கள் செய்யும் வேலைகளுக்குப் பிரதிபலனாக அவர்களுக்கு ஒரு வகைச் சம்பளம் வழங்கப்பட்டது. இப்புதுவகை வருமானமும் ஆட்சியாளர்களுடன் அவர்கள் கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளும் சேர்ந்து கிராமத்தில் அவர்களுடைய நிலையைப் பலப்படுத்தியதுடன் மட்டுமன்றி அதை மீண்டும் உண்டாக்குவதில் ஒரு புதிய பொறி அமைப்பையும் சிருஷ்டித்தன. இக்குழுவினர் 1920 களில் ஏற்பட்ட உணவு நெருக்கடியின் போது விவசாயத்துக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வசதிகளை ஆகக் கூடிய அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளச் சாதகமானநிலையில் இருந்தனர். அவர்கள் வெளியில் கொண்டிருந்த தொடர்புகளின் காரணமாக இந்த உத்திகளின் தொழினுட்பத்தையும் அவர்களால் அறிந்து கொள்ள முடிந்தது.

சாதாரண கிராமவாசிகள் இந்த வசதிகளை அடைய இக்குழுவினரின் பரிந்துரையைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டங்களும் பிந்திய கட்டத்தில் குத்தகை விவசாயிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட நெற்காணிகள் சட்டமும் அமுலிலிருந்துவந்த போதிலும், அவர்களுடைய நிலைமை மாறாது அப்படியேயிருந்துவந்தது. காணியற்றோர் எதிர்ப்பெதுவும் காட்டாமல் இவ்விதம் அமைதியாயிருந்துவந்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, ஓர் இன உறவுச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டே அவர்களுடையஉற்பத்தி உறவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கலாம். இவ்வகையான உற்பத்தி உறவுகளில் உள்ள குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், அவர்களுடைய உடனடிப் பொருள் தேவைகள் திருப்தி செய்யப்பட்டதாகும். அவர்களுடைய உயிர் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கச் சக்தியற்றிருந்த இந்நிலைதான் ஏற்றத் தாழ்வான—சமமற்ற உறவுகளுக்கு அவர்கள் சம்மதிக்கத் தேவையான வலுவைக் கொடுத்தது.

எனினும், இந்தப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் பெருமளவில் வளர முடியாதிருந்தன. ஏனென்றால், கிராமத்தில் சாகுபடி முறைகளும் நீர்ப்பாசன உத்திகளும் நீர் சேமிப்பு வசதிகளும் சந்தைப்படுத்தல் வசதிகளும் வருடக் கணக்கில் மாற்றங் காணாமலே இருந்துவந்தன. இதன் விளைவாக, விவசாயத்தில் உள்ளடங்கிய நிச்சயமற்ற நிலைமைகள், அபாயக் காணிகளையொட்டி சிறிய விவசாயிகள் தொடர்ந்து பரிதபிக்கத்தக்க நிலைமையிலேயே இருந்துவந்தனர். ஆதலால், விளைச்சல் குறைவான மட்டங்களிலேயிருந்து வந்தது. வடமத்திய மாகாணத்திலுள்ள பெரும்பாலான கிராமங்களில் இந்த நிலைமையே இருந்து வந்தது. பரம்பரை விவசாயத் துறையில் முன்னேற்றம் ஆமைவேகத்தில் நடைபெற்றதற்கு இதுவே முக்கிய காரணம். (குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற தேசியப் பிரச்சினைகளுக்குத் தக்க பரிகாரங்களைக் காண்பது சாத்தியமற்றிருந்ததற்கும் இது ஓரளவுக்குக் காரணமாகும். எனவே, இத் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவே மகாவலி ஆற்றைத் திசைதிருப்பும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கிராமக் கட்டுக்கோப்பின்மீது மகாவலித் திட்டத்தின் தாக்கம்

வடமத்திய மகாகாணத்தைப் பொறுத்தவரை, வருடம் முழுவதும் பயிர்செய்யும் முறைக்கு உதவக்கூடிய ஒரு ஸ்திரமான நீர்ப்பாசன முறையின் கீழ் நிலச்சக்தியுள்ள 71,000 ஏக்கர் வேளாண்மைக் காணிகளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் மகாவலி ஆற்று நீர் திசைதிருப்பப்பட்டுள்ளது. ஆதலால், இத்திட்டத்துக்காக நிலவுடைமை முறையை மீண்டும் ஒழுங்குபடுத்தி அமைக்கவும், இக் காணிகளைத் தொழிற்படுத்தப் போதிய ஆள் பலத்தைச் சிருஷ்டிக்கவும், திட்டத்தை அதன் உத்தேசிக்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கி நெறிப்படுத்த விஷயமறிந்த ஒரு முகாமைக் குழுவை அமைக்கவும் வேண்டியிருந்தது. இப்பொழுது இக்கருத் திட்டத்தின் பொருளாதார—சமூகத் திட்டங்களின் அமுலையும் எங்கள் கிராமத்தின்மீது அவை ஏற்படுத்திய தாக்கத்தையும் ஆராய்வோம்.

## திட்டத்தின் பொருளாதாரத் தாக்கம்

உத்தேசிக்கப்பட்ட திட்டங்களின்படி, நிலவுடைமை முறையை 2.5 ஏக்கர் பரப்புள்ள நீர்ப்பாய்ச்சத்தக்க பண்ணைகளாகவும் 0.5 ஏக்கர் பரப்புள்ள வீட்டுடன் சேர்ந்த துண்டுக் காணிகளாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தி அமைக்க வேண்டி இருந்தது. ஆதலால, 1976 ஆம் ஆண்டில் இப்பிரதேசத்திலுள்ள சகல காணிகளும் அரசினர் சொத்தாகப பிரகடனம் செய்யப்பட்டன. இதனல் கிராமவாசிகளில் சிலர் காணிச் சுவீகரிப்பை எதிர்த்து ஆட்சேபனை தெரிவித்த போதிலுங்கூட, அவர்கள் யாவரும் தங்களுடைய பரம்பரைக் காணிகளை ஒப்படைக்க வேண்டி இருந்தது.

எமது பரிசீலனையில் உள்ள பிரதேசத்திலிருக்கும் காணிகளை மறு பகிர்வு செய்வதில் மகாவலி சபை கீழ்க்கண்ட கொள்கைகளைப் பின்பற்றியது—

— ஒவ்வொரு கருக் குடும்பமும் காணிப் பகிர்வு சம்பந்தமாக ஒரு தனி அலகாகக் கருதப்படுகிறது: கணவன் அல்லது தந்தை தானு கவே குடும்பத்தின் தலைவராகிறர். காணி அவருடைய பெயரில் பதிவு செய்யப்படுகிறது. ஆனல், காணிகள் ஆண் பெண் ஆகிய இரு சாராருக்கும் விநியோகிக்கபபடலாம்;

— பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் ஒரு காணித் துண்டைப் பெற உரிமையுண்டு;

— காணிகளைப் பண்படுத்தச் சக்தியற்றவர்களும் வயோதிபர்களும் காணிபெறத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகளாகக் கருதப்பட மாட்டார்கள்.

(கடைசியில் குறிப்பிடப்பட்ட இவ்விரு கொள்கைகளும் புராணக் கிராமத்தில் மட்டுமே அமுலாயின.)

சகல காட்டுக் காணிகளும் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டதுடன் மேலதிக ஆட்பலம் தேவைப்பட்டது. பரிசீலனையில் உள்ள பகுதியில், குடிபெயர்ந்த 310 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இக்குழுவினர் இந்தப் பிரதேசத்தில் உள்ள இரு கேர்தல் தொகுதிகளிலிருந்து வந்தனர். நாங்கள் நடத்திய பரிசீலனையிலிருந்து கிடைத்த புள்ளிவிபரங்களின்படி, இக்குடும்பங்களில் பெரும்பாலானவை (98.0 சதவிகிதம்) உள்ளூர் அரசியல் கட்சிக் குழு மூலமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனல், பூர்வக குடி மக்கள் சம்பந்தமாக இந்தக் கட்சிக் குழுவின் செல்வாக்கு ஆகக் குறைவாகவே இருந்துள்ளது. (3.0 சதவிகிதம்). குடிபெயர்ந்த குழுவினரில் சம பூமிச் சிங்களவர், கண்டிய சிங்களவர், பௌத்தர், முஸ்லிம்கள் ஆகியோர் அடங்கி உள்ளனர். காணிகள் ஒதுக்கப்பட்டபோது, அதிகாரிகள் புராணக் கிராமவாசிகளின் விருப்பத்தை மதித்து, இந்தச் சமூக—கலாசார வேறுபாடுகளின்படி மக்களைத் தொகுத்தனர்.

பரிசீலனையில் அறியப்பட்ட புள்ளி விவரங்களின்படி, பரிசிலனை செயயப்பட்ட பிரதேசத்திலுள்ள மக்கள் பிரதானமாக விவசாயிகளாகவே உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் பரம்பரைக் காணிகளில் வேளாண்மை செய்து வந்தவர்களாவர். சாதி, சமய, இன பேதமின்றிக் காணி விநியோகக் கொள்கை அமுல் செய்யப்பட்டதில் கிராமக் காணிகளைப் பெற எல்லோருக்கும சமவாய்ப்புக் கிடைத்துள்ளது. சகலரும் காணித் துண்டுகளைப் பெற்றுள்ளனர்; ஆனல் அக்காணிகளின் உடைமை (உரிமை)யைப் பெறவில்லை. இதன் விளைவாக, நில உடைமையை அடிப்படையாகக் கொண்ட பரம்பரை அதிகாரக் கட்டுக்கோப்பு முற்ருகத் தகர்ந்துவிட்டது. இந்த அசாதாரண சம்பவத்தைப் பற்றி முதலில் புராணக் கிராமத்திலேயே ஆராய்வோம். இரண்டாவதாக கிழ்ச்சாதியாருக்கும் குடிபெயர்ந்த குழுவினருக்கும் எதிராகப் புராணக் கிராமவாசியை ஆராய்வோம்.

பரிசீலனையில் கிடைத்த தரவுகளிலிருந்து காணிக் கொள்கையை அமுல் செய்யும் மட்டத்தில் சில விதிவிலக்குகள் செய்யப்பட்டுள்ளன என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. 18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட சில குடும்பங்கள் (எல்லாக் குடும்பங்களுமல்ல) மேலதிக காணித் துண்டுகளைப் பெற்றன. சட்டபூர்வமாக 20 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளைக் கொண்டுள்ள காணிச் சொந்தக் காரர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு மேலதிக காணிகள் கொடுக்கப்பட்டன. ஆனல் இன்று எங்கள் கிராமத்தில் எவரிடமும் 10 ஏக்கருக்கு மேற்பட்ட காணி இல்லை.

காணி விநியோகத்தில் கையாளப்பட்ட இந்த முறை கிராமத்தில் காணி வைத்திருக்கும் முறை மீது ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டைத் திட்டமாக உண்டாக்கி உள்ளது. அதனல் காணியற்ற சிலரும் குறைவான காணிகளைக் கொண்டிருந்த சிலரும் முன்னைய காணிச் சொந்தக்காரர்களை விட அதிகமான காணிகளைப் பெற்றனர். நில உடைமை சம்பந்தமாகக் கிராம அரசியல் மீக்கட்டுக்கோப்பு எவ்வாறு தொழிற்பட்டதென்பதை நாம் ஏற்கெனவே கண்டுள்ளோம். இந்த அதிகாரம் பொருந்திய கட்டுக்கோப்பு நிர்மாணிக்கப்பட்ட அத்திவாரமே பிளக்கப்பட்டு வருவதை இப்பொழுது காண்கிறேம். ஆதலால், நாம் அவதானித்துள்ளதுபோல், கிராமத்தில் உள்ள தலைமைத்துவ முறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது. கிராம மட்டத்தில் அதிகாரத்திலுள்ள கட்சி ஏற்படுத்தி வரும் அரசியல் குழுக்களில் முக்கிய பங்கேற்பதற்குப் புதிய காணிச் சொந்தக்காரர்கள் முயன்று வருவதை இன்று காண்கிறேம். இப்புதிய நிலைமை கிராமவாசியின் நேர் எதிரில் இருவகையான தலைவர்களைக் கொண்டு வந்திருக்கிறது. பரம்பரைத் தலைவர்களும் அரசியல் கட்சியுடன் நேச உறவு கொண்டுள்ள புதிய தலைவர்களும் முன்பு போலன்றி, கிராமவாசிகள் எந்தச் சித்தாந்தக் காரணங்களுக்காக அல்லாமல் சுய இலாபத்துக்காக இப்புதிய தலைவர்களை; இப்பொழுது ஏற்றுக் கொள்கிருர்கள். காணிக் கொள்கை குடும்ப உறவுகளில் ஏற்படுத்தப் போகும் விளைவைக் காணச் சுவாரஸ்யமாயிருக்கும். குலபதியின் அதிகாரத்துக்குப் பதிலாக இப்பொழுது அரசாங்கத்தின் அதிகாரம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு கருக் குடும்பமும் தனது சொந்தக் காணித் துண்டுகளுடன் புதிய திட்டத்துக்குள்ளே சுதந்திர உரிமையுள்ள ஒரு நிலையைப் பெற்றுளளது.

புதிய திடடத்தின் கீழ் காணிகளைப் பெருத பழைய கிராமவாசிகள் இது ஒரு 'துர்ப்பாக்கியம்' என நிலைமையை ஏற்றுக்கொள்ள முயல்கின்றனர். ஆனல், இது புதிய திட்டத்தினல் கருக் குடும்பத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள ஒரு பொருளாதாரச் சுமையென வாலிபர்களில் சிலர் கருதுகிறுர்கள்.

காணி விநியோகக் கொள்கை புராணக் கிராமவாசிகளின் சொத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக இருந்துவந்த காணிகளைக் கீழ்ச் சாதியாரும் குடிபெயரும் குழுவினரும் பெறுவதற்கான சாத்தியப்பாட்டை உண்டாக்கியது. காணிக் கொள்கையின் முன்பு எல்லோரும் சமமாகக் கருதப்படுகின்றனர். பொருளாதார ஏற்றத் தாழ்வை ஆதரித்து வந்த இலட்சியத்தை இது அழித்துவிட்டது. குறிப்பாகக் கீழ்ச் சாதியார் இப்பொழுது ஒரு புதிய உணர்வைப் பெற்றுவரக் காணப்பட்டனர்.

இவ்விதமாகக் காணி விநியோகக் கொள்கை, காணி பெறும் வாய்ப்பு மட்டத்தில் சமத்துவத்தை ஏற்படுத்திவிட்டது. அதே சமயத்தில் காணி பெறுவதில் இருந்துவந்த பாரம்பரை முறைகளை முற்றாக நசுக்கிவிட்டது. ஆனால் இது உற்பத்திக்கு உதவும் மூல சாதனம் மட்டுமேயாகும். எனவே, இந்த விவசாயிகள் உற்பத்திக்குத் தேவையான மூலாதாரங்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஆராய்வோம்.

புதிய திட்டத்தின் கீழ் சகல சாகுபடி நடவடிக்கைகளும் ஒரு குறிப்பிட்ட சூசியைப் பின்பற்ற வேண்டும். ஆள்—உழைப்புச் சக்தி இப்பொழுது கருக்குடும்பத்துடன் வரையறுக்கப்பட்டிருந்ததன் காரணமாக, பண்ணையின் உயர் தேவை குடியேற்றப் பகுதியில் ஒரு தேவையை உண்டாக்கின்றது. 2.5 ஏக்கர் வயலொன்றில் வேலை செய்ய முழு நேர விவசாயத் தொழிலாளர்களாயுள்ள குடும்ப அங்கத்தவர்களில் ஏறக்குறைய மூவர் வேண்டும் என்பதை இக் குடும்பங்கள் உணர்ந்துவிட்டன. பிரதான குடியிருப்பாளர்களில் 30 சதவிகிதத்தினருக்கு மேற்பட்டோர் 40 வயதுக்குக் கீழ்ப்பட்டோராயிருக்கின்றார்கள் என இவ் வுதாரணம் எடுத்துக்காட்டுவதால். பொறிமுறையாக்கம் அபிவிருத்தி அடைந்தால் அன்றி மற்றப்படி இந்த ஆள்பலப் பற்றாக்குறை ஒரு பெருந்தேவையாகவே இருந்து வருகிறது.

காணிச் சுவீகரிப்புடன் புராணக் கிராமத்திலுள்ள எருமை மாடுகளின் தொகை 500-லிருந்து 100-க்குக் குறைந்துவிட்டது. செய்திட்ட ஏற்பாடுகளில் இம்மிருகங்களுக்குத் தகுந்த மேய்ச்சற்றரைகளும் நீரும் கிடைப்பதன் சாத்தியம் பற்றித் தாங்கள் முன்னரே அறிந்திருக்கவில்லை என்று கிராமவாசிகள் கூறினர். இப்பிரதேசத்துக்குச் செய்திட்டத்தினால் ஒரு குறிப்பிட்ட தொகை இயந்திரக் கலப்பைகள் (டிராக்டர்கள்) கொடுக்கப்படுகின்றன. ஆனால் விவசாயி—இயந்திரக்கலப்பை விகிதாசாரம் ஏறக்குறைய 82.3 ஆகவே இருக்கிறது. பண்ணை—சக்தி சம்பந்தமாக ஒரு போதாக் குறை இருந்து வருகிறதென்பதை இது எடுத்துக் காட்டுகிறது. சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, புராணக் கிராமத்திலுள்ள சிறுபான்மைக் குழு இந்த அருமையை ஏகபோகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது. ஏக்கருக்கு 400 ரூபாவீதம் இயந்திரக் கலப்பையையும் ஏக்கருக்கு 240 ரூபா வீதம் மூன்று சோடி எருமைகளையும் இவர்கள் வாடகைக்குக் கொடுக்கின்றனர். திட்டத்தின் ஆரம்பத்திலேயே புதிய முறைகளில் பணத்தைக் குவிப்பது சாத்தியமாக்கப்படுகிறதென்பதை இது எடுத்துக் காட்டுகிறது. இறுதியில் இது முன்பிருந்துவந்த பணம் படைத்தோரைச் சார்ந்திருக்கும் உறவுகளுக்கு அடிகோலக்கூடும்

விவசாய — ரசாயனப் பொருள்களைப் பொறுத்தவரை, இரு குழுக்களுக்குமிடையே சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. புராணக் கிராமவாசிகளில் 84 சதவீகிதத்தினருக்கும் கீழ்ச்சாதியினருக்கும் குடிபெயரும் குடியேற்றக்காரர்களுக்குமிடையே 42 சதவிகிதத்தினரும் இந்த வசதிகளை உபயோகிக்கின்றனர். பிற்கூறிய இவ்விரு குழுவினருக்கும் இந்தத் தொழில்நுட்ப உத்திகளைப் பற்றி வரையறுக்கப்பட்ட அறிவே இருக்கிறது. அத்துடன். இவற்றைப் பெறுவதற்குத் தேவையான பணமின்மையே அவர்களில் பெரும்பாலோருக்குத் தடையாக இருந்து வருகிறது என்பதை நேர்முகச் சந்திப்புகள் வெளிப்படுத்தின.

தற்போதுள்ள செய்திட்டத்துக்குள்ளே சாகுபடி, நீர் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள் யாவும் விஞ்ஞான முறைகளையே பின்பற்றுகின்றன. இவை ஒரு விசேடித்த நிர்வாகப் பகுதியினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இணைப்பு — விவசாயிகள் சாதாரண மக்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். கமிட்டிக் கூட்டங்களில் இந்த இணைப்பு — விவசாயிகள் சமூகமளிக்கும்போது அடிமட்டத்தில் உள்ள மக்கள் பங்குபற்றுகின்றனர். என்ற எண்ணம் மனத்தில் பதிகிறது. ஆனால், உண்மையில் திட்டமிடும் ஸ்தாபனத்தினால் எடுக்கப்படும் முடிவுகளைப் பிறருக்குத் தெரியப்படுத்துவது மட்டுமே அவர்களுடைய அலுவல். இந்தப் புதிய நிர்வாக அமைப்பு. கிராமவாசியென்ற முறையிலும் உழவன் என்ற முறையிலும் அமைப்பாளன் என்ற முறையிலும் தனது தனித்துவத்துக்கு ஒரு பயமுறுத்தலாக உள்ளதென்று புராணக் கிராமவாசி கருதுகிறான். பல்வேறு குறிப்புரைகள் மூலமாக அவன் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க முயல்கிறான். பரிசீலனையில் கிடைத்த புள்ளிவிவரங்களிலிருந்து, செய்திட்ட முகாமையாளர்கள் பெருமளவுக்குத் தலையிடுகிறார்கள் என்றும், திட்ட கர்த்தாக்களுக்கும் விவசாயிகளுக்குமிடையேயுள்ள உறவு ஒரு வழிப்பட்டதாயிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

செய்திட்டத்தில் புதிய உற்பத்தி மூலாதாரங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன என்பதும் புது வகையான உறவுகள் சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றன என்பதும் வெளிப்படை. ஆனால் முன்பிருந்துவந்த பிரதான தன்மை அஃதாவது உற்பத்தி முறையில் விவசாயியின் சார்ந்திருக்கும் நிலை தொடர்ந்து அப்படியே இருந்துவருகிறது.

பண்ணை உற்பத்தியைச் சந்தைப் படுத்துவதைப் பொறுத்தவரை, அதில் பெரும் பகுதி தங்களுடைய உணவாகப் போய்விடுகிறதென்று 50 சத விகிததுக்கு மேற்பட்டோர் கூறினர் பல்வேறு காரணங்களுக்காக மிதமிஞ்சிய உற்பத்தியை (விவசாயிகளில் 84 சதவிகிதத்தினர்) தனியார் வியாபாரிகளுக்கு விற்று வருகிறார்கள். அக் காரணங்களில் சில பின்வருமாறு—

— உடனடியாகப் பணம் பெற முடியும்.

— பேரத்தில் எந்த நிர்வாகச் சம்பிரதாயங்களும் சம்பந்தப் படுவதில்லை;

— முழு உற்பத்தியையும் உடனே விற்றுவிட முடியும்;

மொத்தத்தில் செய்திட்டத்திலே களஞ்சியப்படுத்தலுக்கும் சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணைப்படுத்தலுக்கும் வசதிகள் போதா. இதன் விளைவாக, பரம்பரை வியாபாரி இந்தப் பண்ணை உற்பத்தியில் தொடர்ந்து ஏகபோக உரிமையை அனுபவித்து வருகிறார்.

## செய்திட்டத்தின் சமூகத் தாக்கம்

இச்செய்திட்டத்தின் சமூகத் தாக்கத்தை இரு மட்டங்களில் நாம் ஆராயலாம்—

1. குடும்பத்துக்குள்ளேயும் புராணக் கிராமத்தின் சமூக அமைப்பிலும்

11. புராணக் கிராமவாசிகள்மீது குடிபெயரும் குடியேற்றக்காரர்களின் தாக்கம்.

1. குடும்ப உறவுகள்

முந்திய காணியாட்சி முறையின் கீழ், உற்பத்தி முறையில் இன உறவுகள் ஒரு முதன்மையான பங்கெடுத்தன. ஆனால், இன்றோ கருக் குடும்பத்தின் அடிப்படையில் அமுலுக்கு வந்த காணி விநியோகக் கொள்கையின் பயனாக, புராணக் கிராமத்திலிருந்துவந்த குலபதியின் அதிகாரம் குலைந்துவிட்டது. இவ்விதமாகக் கருக் குடும்பம் செய்திட்டத்துக்குள்ளே இப்பொழுது சுயாதிகாரமுள்ள ஒரு நிலையைப் பெற்றுவிட்டது. பரிசீலனையில் கிடைத்த புள்ளிவிவரங்களிலிருந்து உதாரணமாக, முடிவெடுக்கும் முறையில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே நெருங்கிய பங்காளித்துவத்தை நோக்கிச் செல்லும் ஒரு குறிப்பிட்ட போக்கு காணப்படுகிறது. குடும்ப வரவு செலவுத் திட்டம், அவர்களுடைய குழந்தைகளின் எதிர்காலம், சினிமாவுக்குப் போவது, புதினப் பத்திரிகையைத் தெரிவு செய்தல் முதலிய காரியங்களில் இது மிகத் தெளிவாகத் தெரிகிறது. எனினும், கூட்டு முடிவெடுக்கும் இந்த முறை குடும்பத்தை மட்டும் பொறுத்த காரியங்களுடன் நின்றுவிடுவதாகத் தோன்றுகிறது. சகல வெளி உறவுகளும் — உதாரணமாக நண்பர்களைப் போய்ப் பார்த்தல், அரசியல் கூட்டங்களில் பங்குபற்றுதல், பயிர்களைத் தெரிவு செய்தல் முதலியன — பிரதானமாக ஆணைச் சுற்றியே சுழல்வதாகத் தோன்றுகிறது — (பெண் இக்காரியங்களிலிருந்து முற்றாக நீக்கப்பட்டு விடுவதில்லை).

குடும்பப் பணிகளைப் பிரிய்யத்தைப் பொறுத்தவரை, நாளாந்த வேலைகளைச் செய்வதில் ஆண் பங்குபற்றுவதில்லை என்பது பரிசீலனையில் தெளிவாகத் தெரியவந்தது. ஆனால் சந்தைப்படுத்தல், பெட்டிக்கடைக்குப் போதல் முதலியன போன்ற வெளிவேலைகளைப் பொறுத்தவரை, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆணே இந்த வேலைகளைச் செய்கிறான்.

இதிலிருந்து கருக் குடும்பத்தைப் பொறுத்தவரை, முடிவெடுக்கும் முறையில் கணவனும் மனைவியும் பங்குபற்றும் சில நிகழ்ச்சிகள் காணப்பட்ட போதிலுங்கூட, ஆணே ஆட்சி அதிகாரம் செலுத்தும் பரம்பரை இலட்சியம் சராசரிக் குடும்பத்தில் தொடர்ந்து முக்கிய அம்சமாக இருந்து வருகிறது. செய்திட்டமும்கூட இந்நிகழ்வுக்கு உதவுகின்றது; காணி கணவனின் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. விவாகரத்து நடைபெற்றால், குடும்பக் காணியில் மனைவிக்கு எந்தவிதமான உரிமையும் கிடைப்பதில்லை. இது தவிர, சாகுபடி நடவடிக்கைகள் சம்பந்தமான சகல அறிவுறுத்தல்களும் கணவனுக்கே அனுப்பப்படுகின்றன; இக்கூட்டங்களில் மனைவி பங்குபற்றுவதே இல்லை. இந்த நிலைமைகளின் கீழ், பெண் தொடர்ந்து ஓர் இரண்டாந்தரப் பங்கெடுத்து வருவதும் இந்த விவசாய சமுதாயத்தில் அவள் தாழ்ந்த நிலையில் இருந்துவருவதும் வெகு சாதாரணமாகும்.

### புராணக் கிராமத்துக்குள்ளே சமூக உறவுகள்

செய்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், புராணக் கிராமவாசி செய்திட்டத்தைச் சேர்ந்த ஆளணியினர் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள் மற்றும் சேவைகளைச் சேர்ந்த ஆளணியினர் போன்ற அநேக வெளியார்களுடன் தொடர்புகொள்ள வேண்டியவராகிறார். இந்த ஆளணியினரெல்லோரும் புராணக் கிராமவாசிகளுடன் ஒருவழிப்பட்ட உறவையே ஸ்தாபித்திருக்கிறார்கள் — அஃதாவது கிராமவாசி இந்த ஆளணியினரிடம் போகவேண்டி உள்ளது; இவர்கள் கிராமவாசியிடம் போவதில்லை — எனபதைப் பரிசீலனைப் புள்ளிவிவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

செய்திட்டம் சம்பந்தமாகப் பிரச்சினைகள் எழும்போது, (பரிசீலனை செய்யப்பட்ட போது காணப்பட்ட பிரச்சினைகள் பிரதானமாக நீர்போதாமை, அவர்களுடைய காணித் துண்டுகளுக்கு அவர்களுக்குள்ள சட்டபூர்வமான பாத்தியதை, பயிர் முறை ஆகியன பற்றியனவாகவே இருந்தன) புராணக் கிராமவாசிகளில் 78 சதவிகிதத்தினர் அதிகாரிகளிடம் சென்று அவற்றைத் தீர்க்க முயல்கிறார்கள். அதிகாரிகளே உண்மையில் சகல உற்பத்தி நடவடிக்கைகள் மீதும் கட்டுப்பாட்டதிகாரத்தைக் கொண்டுள்ளனர். நிர்வாக ஆவணங்கள் சம்பந்தமாகப் பிரச்சினைகள் தோன்றும்போது, அவர்கள், சபை அதிகாரிகளின் உதவியை நாடும் போக்கே காணப்படுகிறது; சிலர் கிராமப் பெரியார்களுடன் கலந்தாலோசிக்கிறார்கள; சிறுபான்மையினர் மட்டுமே அரசியல் கட்சிக் குழுத் தலைவர்களிடமிருந்து உதவி பெறுகின்றனர். ஆனால் தங்களுடைய அயலார்கள் — தங்களுடைய சொந்தக் கிராமத்தவர்களும் குடிபெயரும் குழுவினரும் — தொடர்பாக எழும் பிரச்சினைகளைப் பொறுததவரை, புராணக் கிராம வாசிகள் தொடர்ந்து இவற்றைத் தங்களுக்கிடையிலேயே தீர்த்துக்கொள்கின்றனர் (75 சதவிகிதத்தினர்). இப்பிரச்சினைகளையொட்டி எவரும் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்தோ அல்லது அரசியல் கட்சிக் குழுத் தலைவர்களிடமிருந்தோ உதவிபெற பெற முயல்வதேயில்லை.

இவ்விதமாக, இப்புள்ளி விவரங்கள் கிராமத் தலைமைத்துவ முறையில் ஒரு குறிப்பிட்ட ஊசலாட்டத்தை எடுத்துக்காட்டுகின்றன; உற்பத்தியை நோக்கி ஓர் இசைவாக்கத்தைப் பெற்றுள்ள புராணக் கிராமவாசி உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நேரடிப் பொறுப்பு வகிக்கும் புதிய தலைமையை ஏற்றுக்கொள்வதாகத் தோன்றுகிறது. அதே சமயத்தில், அவன் தனது நாளாந்த சமூக உறவுகளில் தொடர்ந்து பரம்பரைத் தலைவர்களை அங்கீகரித்து வருகிறான்

11 புராணக் கிராமவாசிகள் மீது குடிபெயரும் குடியேற்றக்காரர்களின் தாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திட்டம் புராணக் கிராம வாசிகளைப் பல்வேறு சாதிகளையும் சமயங்களையும் இனங்களையும் சேர்ந்த ஒரு புதிய குழுவின் செல்வாக்குக்கு உட்படுத்தியுள்ளது. இக்குழு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை ஆராய்வதற்கு முன்னர், இரு குழுக்களினதும் சமூக நிலைமையைத் துரிதமாக ஒப்பு நோக்குவது அவசியமாகும். ஏனென்றால் இதுவே அக்குழுக்களைப் புரிந்துகொள்ள உதவுவதுடன், சில குறிப்பிட்ட சந்தர்ப்ப நிலைகளில் இத்தகைய குழுக்கள்; ஒன்று சேர்க்கப்படும்போது வெளித் தோற்றக்கூடிய மனப்போக்குகளை மதிப்பிடவும் எங்களுக்குத் துணைபுரியும்.

அ. குடியேற்றப்பகுதியில் வயது அமைப்பு

மாதிரியின் குறிப்பிடத்தக்க அம்சம், ஒப்பீட்டளவில் இளம் வயதினரைக் கொண்ட தொழிலாளர் படை இருப்பதாகும்: விவசாயிகளில் 61 சதவிகிதத்தினர் 40 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள். இளம் குடும்பங்கள் இருந்து வருவது, இளம் பிள்ளைகள் அதிக தொகையிலிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன. இந்த அம்சத்தைச் செய்திட்டம் முன்னுணர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஏனென்றால் கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றுக்கான சமூக மேந்தலைகளுக்கு அது ஏற்கெனவே தேவையான முதலீடுகளை ஒதுக்கியுள்ளது — இது சபை வழங்கிய தகவல். பரிசீலனை நடத்தப்பட்ட சமயத்தில் இந்த வசதிகள் புராணக கிராமத்தில் மட்டுமே கிடைக்கக் கூடியனவாயிருந்தன. இப்போதாக் குறைகளின் காரணமாகப் புதிய குடியேற்றக் காரர்களில் பெரும்பாலோர் தங்களுடைய குழந்தைகளைப் பாட்டன், பாட்டிமார், உறவினர்களிடம் விட்டுவிட்டுக் குடியேற்றப் பகுதிக்கு வந்துவிட்டனர்.

ஆ. இரு குழுக்களினதும் கல்விச் செயற்பாடு

இரு குழுக்களிலுமுள்ள விவசாயிகளிடையே எழுத்தறிவு விகிதம் உயர்வாயிருப்பதாகத் தோன்றுகிறது — 9 சதவிகிதத்தினர் மட்டுமே பாடசாலைக்குப் போகாதவர்கள்.

உயர் கல்வியை நோக்கி, புராணக் கிராமவாசிகளிடையே காணப்படும் மனப்போக்கு குறிப்பிடத்தக்கதாகும். வாலிபர்களில் 60 சதவிகிதத்தினர் ஜி. சி. ஈ. சாதாரண தரத்தைப் பூர்த்தி செய்துள்ளனர். கிராமத்தைச் சேர்ந்த மூவர் பல்கலைக்கழகத்தில் உள்ளனர்; ஒருவருக்கு விவசாய மேற்படிப்புக்காக வெளிநாட்டுப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாகக் குடியேறியவர்கள் இடையே வாலிபர்களில் 33 சதவிகிதத்தினர் மட்டுமே ஜி. சி. ஈ. சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர் அல்லது அவ்வகுப்புவரை படித்துள்ளனர். இதற்குக் குழந்தைகளில் 80 சதவிகிதத்தினர் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருப்பது காரணமாயிருக்கலாம். இக்குடும்பங்களில் பெரும்பாலானவை பொருளாதார அடிமட்டத்திலுள்ளன. அவர்களுடைய பிரதான அக்கறையெல்லாம் ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்வதாகவே இருந்துள்ளது. ஆதலால், முழுக் குடும்பமே தொழிலாளர்களாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்துள்ளது. எனவே அவர்களுடைய குழந்தைகளுக்கு இடைநிலைக் கல்வி என்பது அடைய முடியாததாகவே இருந்துவந்தது.

இ. சமூக ஏற்றத்தின் காட்டிகளாக பல்வகைத் தொழில்கள்

பரம்பரை விவசாயம் புராணக கிராமவாசிகளுக்கிடையே மட்டுமன்றிப் புதிய குடியேற்றக்காரர்களிடையேயும் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்துள்ளது. இன்று புராணக் கிராமவாசிகளிடையே பல்வகைத் தொழில் ஈடுபாடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்; 27 சதவிகிதத்தினர் அரசாங்க சேவைத் துறையில் — கிராமப் பொதுப் போக்குவரத்து, தபாற் சேவைகள், பொலிஸ் சேவை, விவசாயத் திணைக்களத்தில் ஆசிரியர்களாகவும் அதிகாரிகளாகவும் — இருக்கிறார்கள்.

புதிதாகக் குடியேறியவர்களைப் பொறுத்தவரை விவசாயமே அவர்களுடைய பிரதான தொழிலாக இருக்கிறது. (94 சதவிகிதத்தினர்) 6 சதவிகிதத்தினர் விவசாயத் தொழிலுடன் பெட்டிக் கடை நடத்துவதையும் சேர்த்திருக்கிறார்கள்.

ஈ. விசேட உரிமையுள்ள நிலையின் காட்டிகளாக பௌதிக சொத்துக்கள்

இலங்கையிலுள்ள கிராம மக்களிடையே, வீடு அமைந்திருக்கும் விதமும குடிநீர் வசதிகள் கிடைக்கக் கூடியனவாயிருப்பதும் ஒரு குறிப்பிட்ட சமூக உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாகவும் குடும்பத்தின் பொருளாதார நிலைமையைக குறிப்பதாகவும் கருதப்படுகின்றனவென்று தெரிகிறது. குடியிருப்பு நிலைமையைப் பொறுத்தவரை, புராணக் கிராமவாசிகளில் 72 சதவிகிதத்தினர் நிரந்தர வீடுகளைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர்.

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

பாயத்தை நடத்துகின்றனர் என்பதே உண்மை நிலையாகும். இவர்கள் பழத் தோட்டங்களில் அறுவடைக் காலத்தில் வேலை தேடிச் செல்வோர் கூட்டத்தைப் பெருக்கவே செய்வர்.

### வறுமையின் அவசியம்

சிலியின் இப்போதைய ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட விவசாயப் பொருளாதாரம், விவசாயியின் பொருளாதாரத்திலேயே தங்கி உள்ளது என்பது சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சிக் குழுவின் அனுசரணையுடன் நடத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளதாக திரு. கிறிஸ்பி தெரிவிக்கிறார். பாரிய பழத் தோட்டங்கள் லாபம் தருவதற்குப் பருவகாலத் தொழிலாளர் தாராளமாகக் கிடைப்பது அவசியம். வருமானம் தேவைப்படும் ஏழைகள் பெரும் எண்ணிக்கையில் இருக்கும்வரைக்கும் தொழிலாளர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பர்.

மேற்கண்ட ஆய்வு மூலம் விவசாயிகளின் ஏழ்மை நிலை படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. காணி மீள் பகிர்வின் மூலம் 40,000 சிறிய கமங்கள் உருவாக்கப்பட்டதாக டாக்டர் கிறிஸ்பி தெரிவிக்கிறார். மானியங்களும் கடன் வசதிகளும் நீக்கப்பட்டுவிட்டதால், சிறு கமங்களை வைத்திருக்கும் விவசாயிகள் தங்களுக்குத் தெரிந்த வழமையான பயிர்களையே —

(33-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மருந்தாக்க கூட்டுத்தாபன கொள்வனவுகள் மருந்து விலைகள் பற்றிய ஓர் ஆய்வு.

எல்- ஜீ- ஜயவர்தன
ரீ அத்தபத்து

மருந்து விலைகள் சமூக கட்டுக்கோப்பிலும் அரசியல்வானிலும் அபரிமித தாக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஒரு விடயமாகும். இது தொடர்பில் அரசும் பொதுமக்களும் வெகு விழிப்பாக உள்ளனர். மனம் போனபடியெல்லாம் மருந்துப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழியாக, அரசானது, 1959ஆம் ஆண்டில், தேசிய படிமுறைக் குழுவுக்கூடாக, இறக்குமதி செய்யப்பட வேண்டிய மருந்துகளைத் தெரிந்தெடுத்து வகைப்படுத்த உதவியது. மருந்துப் பொருள்களுக்காகச் செய்யப்படும் அநாவசியச்செலவினங்களை மேலும் குறைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் 1972ஆம் ஆண்டில் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (அ.ம.கூ.) தாபிக்கப்பட்டது.

தனியார் துறையினரின் ஆதிக்கத்திலிருந்து அரசின் கைகளுக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்யும் உரிமை மாற்றமடைந்ததனைத் தொடர்ந்து, அபிவிருத்தியடைந்த உலகில் உள்ள மருந்துப் பொருள் உற்பத்தியாளர்களின் தாக்கமும் கூட, படிப்படியாகக் குறைந்து வரலாயிற்று. ஒரு கொள்கையாக, விலைக்கேள்விகள் இனப் பொதுப் பெயர்கள்மூலம் கோரப்பட்டன. 1972ஆம் ஆண்டில், இனப் பொதுப் பெயர்களின்கீழ் வியாபாரஞ் செய்த சோசலிச நாடுகளிலிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டது.

1973ம் ஆண்டு முதல் 1977ம் ஆண்டு வரை அ.ம.கூ. இலங்கைக்கான ஒரேயொரு மருந்துப் பொருள் இறக்குமதியாளராக இருந்து வந்தது. 1977ம் ஆண்டுக்குப் பின்னர், தேசிய படிமுறைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துப் பொருள்களைத் தடையின்றி இறக்குமதி செய்வதற்கு உத்தரவுபெற்ற இறக்குமதியாளர்களை அரசு அனுமதித்தது.

இந்த ஆய்வில், 1973 முதல் 1981 வரையிலான ஆண்டுகளின் போது அ.ம. கூட்டுத்தாபனத்தினால் தனியார் துறையினருக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் விலைகளை நாம் ஆராய்வோம். இக்காலப் பகுதியின் போது அரச மருத்துவக் களஞ்சியத்துக்கென (அ.ம.க.) செய்யப்பட்ட சிறு பெருந்தொகைப் பெறுமதியான கொள்வனவுகள் பற்றியும் இங்கு அவதானிப்புரைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்ஆய்வு மருந்துகளின் விற்பனை விலைகளையும் இவற்றோடு தொடர்புபட்ட காரணிகளையும் பற்றிய அவதானிப்புரைகளையும் உள்ளடக்குகின்றது.

## கொள்வனவு நடைமுறை

அ. ம. கூட்டுத்தாபனத்தினால மேற்கொள்ளப்படும் கொள்வனவு நடைமுறை பற்றி ஒரு சுருக்கமான குறிப்பை இங்கு தருவது பொருத்தமானதாகும். கொள்வனவுகள் 'உலகளாவிய' கேள்விப்பத்திர முறைமூலமும், நன்கு அறியப்பட்ட ஏற்கத்தகு வழங்குநர்களிடமிருந்து கோரிக்கைகள் கோரப்படும் 'மட்டுப்படுத்திய விலைக்கேள்விகள்' மூலமும், தனியாதிகக் வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் 'நேரடி விலைக்கேள்விகள்' மூலமும் செய்யப்பட்டன.

1973ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்குப் பின்னர் உலகளாவிய கேள்விப்பத்திர முறை மூலம் சில கொள்வனவுகளே செய்யப்பட்டமையினால், 'உலகளாவிய' விலைகள் 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் கணக்குக்குச் சேர்க்கப்படவில்லை. 1977ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது (தொடர்ச்சியாக) உலகளாவிய கேள்விப்பத்திர முறைமூலம் (வெவ்வேறு மூலங்களிலிருந்து) கொள்வனவு செய்யப்பட்ட 84 மருந்துப் பொருள்களின் விலைகள் பற்றிய ஆய்வொன்று நடாத்தப்பட்டது.

1977ம் ஆண்டில் உள்ள இறுதி விலையானது 1973ம் ஆண்டின் விலைகளோடு ஒப்புநோக்கி ஆயப்பட்டு, விலை அதிகரிப்பாகவோ, விலைக் குறைப்பாடு ஆகவோ விலை மாறிலியாகவோ விவரிக்கப்பட்டது. பெரும்பாலான மருந்துகள் விலை அதிகரிப்பையே காட்டுகின்றன. இவற்றில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருள்களான நுண்ணுயிரெதிரிகள், எதிர்விழுப்புப் பொருள்கள், நோவகற்று மருந்துகள், உயிர்ச்சத்துக்கள் என்பன அடங்கும்.

1973ம் ஆண்டுக்கும் 1981ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட கொள்வனை விலைகளைப் பார்க்கும் போது, 1975ம் ஆண்டிலேயே ஆகவுயர்ந்த எண்ணிக்கையான விலை அதிகரிப்புகள் இடம் பெற்றுள்ளனவாகத் தெரிய வருகின்றது. (84 மருந்துகளுள் 59 மருந்துகளின் விலைகள் அதிகரித்திருந்தன) 25 மருந்துகளின் விலைகள் மாறிலியாக இருந்து காணப்பட்டன. வெவ்வேறு வழங்குநர்களிடமிருந்து உலகளாவிய கேள்விப்பத்திரமுறையில் பெறப்பட்ட விரைவில் விற்பனையாகும் 58 மருந்து வகைகளின் கணிப்புச் சராசரி விலை 1977ம் ஆண்டுவரை ஆயப்பட்டது. இப்பொருள்கள் மேலே உள்ள பந்தியில் கூறப்பட்ட அதே நோய்நீக்கத் தொகுதி மருந்துகளாகும். இத்தொகுதியில் கூட, பெரும்பாலான மருந்துப் பொருள்கள் விலை அதிகரிப்பைக் காட்டுகின்றன. இதிலும் 1975ல் தான் மிகவும் கூடுதலான அதிகரிப்பு காணப்பட்டது. இவ்வாண்டில் மருந்துப் பொருள் 46—67% விலை அதிகரிப்பைக் காட்டின.

1977ம் ஆண்டில் 32 மருந்துகளின் விலைகள் அதிகரித்தன. 19 மருந்துகளின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

## விலை அதிகரிப்புகள்

விலை ஒப்பீட்டுக்கான அடிப்படை ஆண்டு 1973 ஆகும்.

பெரும்பாலான விலை அதிகரிப்புகள் 1977லும் 1979லும் காணப்பட்டன. இவ்வாண்டுகளில் முறையே 210 மருந்துகளும் 155 மருந்துகளும் கொள்வனவு செய்யப்பட்டன. இவற்றில் முறையே 113, 106 மருந்துகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை காரணமாக 115 மருந்துகளே இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றில் 70 மருந்துகளின் (74%) விலை அதிகரித்துக் காணப்பட்டது. இம்மருந்துப் பொருள் ஒவ்வொன்றும் ஒரே மூலத்திலிருந்து கொள்வனவு செய்யப்படுவதோடு விலைகள் ஒரு சீராக உயர்ந்து கொண்டு போவதையும் காட்டுவதனால் இந்நிகழ்வுகள் முக்கியமானவையே.

### விலை வீழ்ச்சி

1977ல் தான் பெருமளவு மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆகவே பெருமளவிலான விலை வீழ்ச்சியும் இவ்வாண்டிலேயே காணப்பட்டது. கொள்வனை செய்யப்பட்ட 210 மருந்துகளுள் 41 மருந்துகளின் விலைகள் வீழ்ச்சியடைந்திருந்தன.

### விலை அதிகரிப்புகள்

இவ்வதிகரிப்புகள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மருந்துப் பொருள் தொடர்பானதெனக் கூறிவிட முடியாது. உலக நாடுகளிடையே விலை அதிகரிப்புகள் ஒரு முக்கிய தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளதாகத் தோற்றுகின்றது. உதாரணமாக ஐக்கிய இராச்சியத்திலும் இந்தியாவிலும் 25 முதல் 75% வரையிலான மருந்துப் பொருள்களின் விலை அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது. 1973 முதல் 1980 வரையிலான காலப் பகுதியின் போது பெருமளவிலான இறக்குமதிகள் இவ்விரு நாடுகளிலிருந்துமே செய்யப்பட்டுள்ளன. ஏற்கத்தகு தர அடிப்படையிலும் விலை அடிப்படையிலும் கேள்விப்பத்திர அளிப்புக்கள் செய்யப்படுகின்றன. இது இவ்வாறிருக்க, வேறு நாடுகளிலிருந்து கொள்வனை செய்யப்பட்டிருந்தால், விலை அதிகரிப்பு மட்டம் 100 வீதத்துக்கும் அதிகமானதாகவே இருந்திருக்கும்.

### ஐக்கிய இராச்சியம்

1973 முதல் 1980வரையிலான காலப்பகுதியின் போது, பெருமளவிலான தனியாதிக்க மருந்துகள் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து கொள்வனை செய்யப்பட்டன. 1980-ல் முன்னைய ஆண்டுகளைக் காட்டிலும் குறைந்தளவு மருந்துப் பொருள்களே இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் (34 மருந்துப் பொருளுள் 29 மருந்துகள்) அதாவது 40% ஆனவை, 1979யைக் காட்டிலும் விலை அதிகரிப்பைக் காட்டின. ஐ. இராச்சியத்திடமிருந்து 1974 முதல் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துப் பொருள்கள் படிப்படியான அதிகரிப்பைக் காட்டின என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

### இந்தியா

இக்காலப்பகுதியின் போது அடுத்த ஆகக்கூடிய இறக்குமதிகள் இந்தியாவிலிருந்தே செய்யப்பட்டன. மேலும் இவ்விலைகள் பல்தேசிய கம்பனிகளினதும் மாற்று தேசிய கம்பனிகளினதும் துணை நிலைக் கம்பனிகளிடமிருந்து பிரதானமாக வழங்கப்பட்ட "தனியாதிக்க" மருந்துப் பொருள்களின் விலைகளே என்பதை அவதானிக்க வேண்டும்.

### சுவிற்சலாந்து

சைபா—கீகி சான்டோஸ், ரோச் சுவிஸ் சீரம் முதலிய பிரபல்யமிக்க கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட மருந்துப் பொருள்களையே சுவிற்சலாந்திலிருந்து செய்யப்பட்ட கொள்வனைகள் உள்ளடக்குகின்றன. இவற்றில் விலைகள் சற்று உயர்ந்திருந்தபோதும், ஏனைய நாடுகளின் விலைகளோடொப்பிடுகையில் மாறிலியாக இருந்தன. 1973—1976 ஆண்டுகளுக்கிடையே பெரும்பாலான விலை வீழ்ச்சிகள் காணப்பட்டன.

### மேற்குஜேர்மனி

இருபத்தாறு மருந்துப் பொருள்கள் மேற்கு ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவற்தன. அதன் பின்னர் சில மருந்துப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பைக் காட்ட முற்பட்டன

### ஐ. அ.

ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து கொள்வனை செய்யப்பட்ட மருந்துப் பொருள்களைப் பொறுத்தவரை 1978ஆம் ஆண்டைத்தவிர, மற்றெல்லா ஆண்டுகளிலும் பல விலை அதிகரிப்புகள் காணப்பட்டுள்ளன. விலை வீழ்ச்சிகளைப் பொறுத்தவரை மாறிலி விலைகள் உள்ள மருந்துகளைக் காட்டிலும் ஓரளவு குறைந்ததாகவே உள்ளது.

சகல நாடுகளினதும் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது விலை அதிகரித்துக்கொண்டு போவதையே நாம் அவதானிக்க முடிகின்றது. இது மருந்துப் பொருள்களைப் பொறுத்தவரை அல்லாமல் ஏனைய பொருள்களைப் பொறுத்தவரையிலும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றேயாகும். பொது விலை அதிகரிப்பைக் காட்டிய இந்த ஆய்வு நோய் நீக்க மருந்துத் தொகுதிகளின் விலை மாற்றங்கள் பற்றிய குறிப்பாக தகவல் எதனையும் வெளிக்காட்டவில்லை. உலகளாவிய விலைக்கேள்வி அடிப்படையில் கொள்வனை செய்யப்பட்ட மருந்துப் பொருள்களின் விலைகளில் கூறப்பட்டவாறாக, அதிகரித்த விலைகள் பல்வேறு தொகுதிகளுக்குப் பொருந்துவனவாகும்.

இறக்குமதிகளைப் பொறுத்தவரை பாரிய முக்கியத்துவமுடைய சில நாடுகள் பற்றியே இங்கு ஆய்வு நடாத்தப்பட்டது. 1973—1981 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மொத்த இறக்குமதிகளில் 17 முதல் 28% வரையிலும் 10 முதல் 27% வரையிலும் இறக்குமதி வீதங்கள் அமைந்திருந்ததான முறையே இந்தியாவையும் ஐக்கிய இராச்சியத்தையும் தவிர, ஏனைய ஒவ்வொரு நாட்டுக்குமான இறக்குமதி மாதிரி பற்றி எம்மால் எவ்வித பொதுவிதியையும் அமைத்துக்கொள்ள முடியவில்லை.

### இந்தியா

இந்தியாவிலிருந்து செய்யப்பட்ட கொள்வனவுகள் பெரும்பாலும் ஒரு சீராக அமைந்திருந்தன. 1980ல் ஆகக்கூடிய இறக்குமதிகள் இந்நாட்டிலிருந்தே செய்யப்பட்டன. இந்தியாவில் இரு வகை வழங்குநர்கள் இருக்கின்றனர். ஒரு தொகுதியினர் * பாரம்பரிய உற்பத்தியாளர். மற்றவர்கள் பாரம்பரியமற்ற (அல்லது இனப்பொது) உற்பத்தியாளர்கள். முன்னையவை பல்தேசிய கம்பனிகளினதும் மாற்று தேசிய கம்பனிகளினதும் துணைநிலைக் கம்பனிகள் ஆகும். ஏனையவை உள்ளூர் இந்திய உற்பத்தியாளர்களாவர். பின்னைய சிலர் முன்னர் பல்தேசிய மற்றும் மாற்றுத் தேசிய கம்பனிகளுடன் சேர்ந்துழைத்தவர்களாக இருப்பதோடு இந்திய வர்த்தகத்துறையில் பிரபல்யமடைந்தும் காணப்படுகின்றார்கள். பாரம்பரிய மூலங்களை பாரம்பரியமற்ற மூலங்களோடு ஒப்பிடுகையில் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனவு வீதம் 11:9 ஆகும். ஒரு சில மருந்துப் பொருள்கள் ஏறத்தாழ பிரபல்யமிக்க ஒரு மூலத்திலிருந்தே கொள்வனை செய்யப்பட்டு வரலாயிற்று—உதாரணமாக: இன்சுலின், பெனிடோயின், சோடியம், ஐதரசன் பொரக்சைட், பென்சதீன் பெனிசிலின். தரத்தை ஒருபோதும் மறந்துவிடாமல், உள்ளூர் போட்டிச் சந்தையைச் சமாளிக்கத்தக்க வகையில் எதிர்காலத்தில் சிறிதளவு பிரபல்யமடைந்த வழங்குநர்களிடமிருந்தும் கொள்வனை செய்யும் வழக்கம் இனிப் பெருக அவசியமுண்டு எனலாம்.

* மருந்துகளை முதன்முதலில் கண்டுபிடித்து, அப்பொருள்களுக்கு ஆக்கவுரிமை கொண்டுள்ளவர்கள் பாரம்பரிய உற்பத்தியாளர்கள். ஆக்கவுரிமை முடிவடைந்த பின்னர் அல்லது கடன் அனுமதி முதலியவற்றின் மீது பொருள்களை உற்பத்திசெய்பவர்கள் பாரம்பரியமற்ற அல்லது இனப்பொது உற்பத்தியாளர்கள்.

### ஐக்கிய இராச்சியம்

தனித்த இனப்பொது மூலத்திலிருந்து பெருமளவிலான மருந்துகளை இறக்குமதி செய்தது என்ற வகையில் ஐக்கிய இராச்சியமானது 1979ல் முதலாம் இடத்தை வகித்தது. இவ்விறக்குமதிகள் தற்போது வேறு மலிவான ஏற்கத்தகு மூலங்களிலிருந்து செய்யப்படுகின்றன. இவற்றிற்கு உதாரணமாக விட்டமின் ஏயும் டியும், பினெக்சிமெதில் பெனிசிலின், ஐக்கிய இராச்சியத்திலிருந்துதான் பெறப்படவேண்டியனவாக உறுதிப்படுத்தப்பட்ட மருந்துகளும் சில உண்டு. அவற்றுக்கு உதாரணமாக குளோர்கெச்சிடீன் செற்றிமைட் லோஷன், விட்டமின் பீ. சி. போட்டே ஊசிமருந்து, கோட்டிகோஸ்டிரேயிட் ஆகியவற்றைக் கூறலாம். இவற்றுட் சில 1973 முதல் 1981 வரையிலான காலப் பகுதியில் 100% விலை அதிகரிப்பைக் காட்டியுள்ளபோதும் இவற்றை ஐக்கிய இராச்சியத்திலிருந்தே பெறவேண்டியிருந்தது.

### சுவிற்சலாந்து

1978ம் ஆண்டு முதல் இறக்குமதிகளில் ஓர் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. அக்காலம் முதல் இந்நாடு 3ம் இடத்திலேயே இருந்துள்ளது. இவற்றின் விலைகள் மாறிலியாக இருந்தபோதும் ஏனைய நாடுகளின். விலைகளைக் காட்டிலும் இவை ஒப்பீட்டடிப்படையில் உயர்ந்தனவாகவே காணப்பட்டன. (அண்மைக்காலம் வரை) வக்சீன், சீரு, இம்மியுரே குளொபுலின், றிவாம்பிசின் போன்ற சில மருந்துப் பொருள்களைப் பொறுத்தவரை தாபிக்கப்பட்ட மூலமாக இந்நாடு விளங்கி வந்துள்ளது

### இத்தாலி

1973ம் ஆண்டு முதல் இத்தாலி 4ம் இடத்தைப் படிப்படியாக எட்டிப்பிடித்தது. பாரம்பரியமற்ற இனப்பொது மூலங்களிலிருந்து வழங்கல்கள் செய்யப்பட்ட 1977ம் ஆண்டில் ஆகக்கூடுதலான இறக்குமதிகள் காணப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளுள் உயிர் எதிரிகள், மிகு குருதி அழுத்த எதிர்ப்பான்கள், ஊறிக் கலப்பான்கள் என்பன அடங்கும். 1977ம் ஆண்டுக்கெனக் கொள்வனை செய்யப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்புப் பொருட்கொள்வனைகளின் பெரும்பகுதி கொட்றி மொக்சாலோஸ் ஆக இருந்தது. இம்மருந்துப்பொருள் தற்போது வேறு மலிவான ஏற்கத்தகு மூலங்களிலிருந்து கொள்வனை செய்யப்படுகின்றது. தற்போது படிப்படியாகப் பிரபல்யமடைந்து கொண்டு வரும், கொட்றிமொக்சாஸோலை ஒத்த ஒரு மருந்தும் இம்மருந்துப் பொருட் கொள்வனையை குறைத்துள்ளதாகும்.

### ஐ- அ- நா-

ப்ரெட்னிசொலோன், எறித்ரோமைசின் போன்ற மருந்துகளும் கண்நோய் மருந்துகளும் ஆகிய ஒரு சில மருந்துகளே ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து கொள்வனைசெய்யப்படுகின்றன.

### சீனா

1978ஆம் ஆண்டுக்குப் பின்னரே சீனா பெருமளவு முன்னணிக்கு வந்துள்ளது. மருந்துத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களாக இருப்பார்களேயாயின் கொள்வனைகள் மேலும் அதிகமாக இருக்கும். இங்கு உற்பத்தியாகும் மருந்துகளின் தரம் குறையாததாக இருப்பதோடு விலைகளும் மலிவானவையாக இருந்தன.

### சிங்கப்பூர்

1979ம் ஆண்டில் சிங்கப்பூர் 5.36% ஆன இறக்குமதிகளைக் காட்டுகின்றது. இது 1973ல் இருந்த 1.3%ஐக் காட்டிலும் அதிகரித்ததாகவே உள்ளது. பாரம்பரிய உற்பத்தியாளர்களின் துணை நிலைக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பான்களுக்கான நம்பகமான ஒரு மூலமாக சிங்கப்பூர் விளங்கியுள்ளது. இம்மருந்துவகைகளின் மருத்துவத் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு விலையைக் காட்டிலும் தரத்துக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

### போலந்து

இறக்குமதி வீழ்ச்சியைக் காட்டும் மற்றுமொரு நாடு போலந்து ஆகும். 1972ல் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதும் இனப்பொது மூலங்களிலிருந்து மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வது ஒரு வெளிப்படுத்தப்பட்ட கொள்கையாக இருந்தது. 1973ம் ஆண்டில் 8.35% ஆன இறக்குமதிகள் போலாந்திலிருந்து செய்யப்பட்டன. மொத்த இறக்குமதிகளில் வீழ்ச்சியை 1974, 1975 ஆகிய ஆண்டுகள் காட்ட, 10.45% ஆன அதிகரிப்பு 1976ல் காணப்பட்டது. 1977ம் ஆண்டில், 1976ம் ஆண்டுக்கான கட்டளைகளில் 0.2% ஆன கட்டளைகள் மேண்மிகையாக நின்றுவிடலாயின. 1977ம் ஆண்டுக்குப் பிறகு அ.ம.கூ. இந்நாட்டிலிருந்து இறக்குமதிகளைச் செய்யவில்லை. திருப்திகரமாகத் தீர்க்கப்படாத வியாபாரப் பிரச்சினைகள் காரணமாகவே இதில் வீழ்ச்சி ஏற்பட்டதெனலாம்.

### அரச மருத்துவக் களஞ்சியத்துக்கான (அ.ம.க) இறக்குமதிகள்

ஒரு சில தனியாதிக்க மருந்துப் பொருள்களைத் தவிர, அரச மருத்துவக் களஞ்சியத்துக்கான கொள்வனை நடைமுறை எப்போதும் உலகளாவிய கேள்விப்பத்திர அடிப்படையிலேயே இருந்து வந்துள்ளது.

அட்டவணையில் காணக்கூடியவாறாக, குறித்த ஆண்டுகளின் போது மொத்தச் செலவினம் அதிகரித்துள்ளது.

ஆண்டு வாரியாக அ.ம.க. கொள்வனைகளின் பெறுமதி
1973—1981

(ஒப்பீட்டுக்கான தற்போதைய ரூபாய் பெறுமதிக்கு கொணரப்பட்டது)

| | ரூபா—இலட்சத்தில் |
|---|---|
| 1973 — | 12.0 |
| 1974 — | 166.0 |
| 1975 — | 260.0 |
| 1976 — | 312.0 |
| 1977 — | 201.0 |
| 1978— | 522.0 |
| 1979 — | 1168.0 |
| 1980 — | 1191.0 |
| 1981 — | 1599.0 |

1980ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1981ஆம் ஆண்டுக்காய அ. ம. க. இறக்குமதிகளில் ஒரு வேறுபாடு காணக்கூடியதாக உள்ளது. 1980ம் ஆண்டைக் காட்டிலும் 1981ம் ஆண்டில் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி 19.8%ஆல் அதிகரித்துள்ளதென்பதை அட்டவணை காட்டுகின்றது. இவ்வதிகரிப்பில் 63.6% விலை அதிகரிப்பினுல் ஏற்பட்டதெனவும் 34.4% மருந்து அளவு அதிகரிப்பினுல் ஏற்பட்டதெனவும் அவதானிக்க முடிகின்றது.

1980ல் சில இனப்பொது மூலங்களிலிருந்து செய்யப்பட்ட வழங்கல்கள் பற்றி முறைப்பாடு கிடைத்துள்ளது. ஆகவே 1981ம் ஆண்டில, ஊசி மருந்துகளான பெனிசிலின்கள், மற்றும் அவை போன்ற மருந்துகள் முதலான அதிமுக்கிய மருத்துவப் பெறுமதியுடைய மருந்துகளைப் பெறுவதற்காக பிரபல்ய மிக்க வழங்குநர்களிடமிருந்து மருந்துகள் தருவிக்கப்பட்டன. பெருமளவில் விலைகள் அதிகரித்தமைக்கு இது ஒரு காரணமெனலாம்.

வெளிநாட்டு நாணய சரிசம
மதிப்பில் ஏற்பட்ட மாற்றமும்
மருந்துகளின் சில்லறை விலைகளில்
அதன் தாக்கமும்.
1973—1981

கூட்டுத்தாபனத்தின் தற்போதைய
விலைகுறித்தற் கொள்கை

கூட்டுத்தாபனத்தின் விலைகுறித்தற் கொள்கை பற்றி இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமானதெனத் தோற்றுகின்றது. மருத்துவப் பொருளையும் அதன் பயன்பாட்டையும் கருத்திற்கெடுத்துக் கொண்டு பார்க்கும் பொழுது, மருந்துகளுக்கு விலை குறிப்பதைப் பொறுத்தவரை,வர்த்தக இலாபமீட்டும் நோக்கைக் காட்டிலும் சமூக நலனுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென 1978ம் ஆண்டின் முற்பகுதியில் அரசு முடிவு செய்தமை பொருத்தமானதே எனத் தெரிய வரும். மிகவும் சிக்கனமான விலையில் தரமான மருந்துகளை நோயாளிகளுக்கு அளிப்பதன்மூலம் அதி உச்ச நன்மை தருவதே அரசாங்கத்தின் இலக்காகும்.

தயாரிக்கப்பட்ட மருந்துகளுக்கென, 1977 நவம்பரில் மதிப்பிறக்கம் செய்யப்பட்டபோது நிலவி வந்த விலைகுறிக்கும் முறைமை 100% விலையீடு கேள்வுப் பெறுமதியில் 80% அளவிலான சில்லறை வரம்பை அனுமதித்தது.

மதிப்பிறக்கத்தின் காணபபடாத தாககம் யாதெனில், மதிப்பிறக்கத்துக்கு முந்திய விலைகளில் இறக்குமதிசெய்யப்பட்ட மருந்துப் பொருள்களின் விற்பனை மீது கூட்டுத்தாபனத்துக்கும், மொத்த விற்பனையாளருக்கும், சில்லறை விற்பனையாளருக்கும் ரூபா இலாப இரட்டிப்பு காணப்படக் கூடியதாக இருந்தமை ஆகும்.

கூட்டுத்தாபனமானது 8.5.78 தொடக்கம் விலையீடுகேள்வுப் பெறுமதியில் மருந்துகளை 'மொத்த விற்பனை' செய்யுமாறும் விலையீடுகேள்வுப் பெறுமதியில் 8%ல் சில்லறை விற்பனை செய்யுமாறும் கட்டாயப்படுத்தப்பட்டது. (ஆகவே, 1979, ஜூன் வரை அ.ம.கூ. சேவைத்தாபனம் ஒன்ருக மட்டுமே இயங்கி வந்தது.)

'அத்தியாவசிய' மருநதுகளுக்கும், 'அத்தியாவசியமற்ற' மருந்துகளுக்கும் என இரு அடுக்கு அமைப்பைக் கொண்ட இரண்டாவது விலைகுறிக்கும் முறைமை 1979 ஜூன் மாதத்தில் நடைமுறைக்கு வந்தது.

1978 மே மாதம் முதல் 1981 மார்ச் மாதம் வரை கூட்டுத்தாபனத்தின் சில்லறைக் கடைகள் 'அத்தியாவசிய' * மருந்துகளை குறைவான சில்லறை விலையில் விற்றுவர வியாபாரியும் அ.ம.கூ. விநியோகிப்பாளர்களும் அதே பொருளை கூடுதலான விலைக்கு சில்லறையாக விற்று வந்தனர். 1979 ஜூன் மாதம் முதல் அ.ம.கூ. சில்லறைக் கடைகளும் அ.ம.கூ. விற்பனையாளரும் 'அத்தியாவசியமற்ற' மருந்துகள் மீது கூடுதலான விளிம்பான விலையீடுகேள்வுப் பெறுமதி மீது 137% அனுமதிக்கப்பட்டனர்.

இந்த இரு அடுக்கு விலை அமைப்பு 'அத்தியாவசிய' மற்றும் 'அத்தியாவசியமற்ற' மருந்துப் பொருள் விற்பனைமூலம் கூட்டுத்தாபனம் முறையே 5, 15% 'அளிப்பை' ** சம்பாதிக்கின்றது என்ற ஓர் அபிப்பிராயத்தை உருவாக்குகின்றதெனலாம்.

உண்மையான 'அளிப்பை'க் கண்டறிய வேண்டுமானுல், மருந்துகளைத் தரையிறக்குவதற்கும் அகற்றி வெளிக்கொணர்வதற்குமான கட்டணங்களையும் (2%) கையிருப்பு வைத்திருப்பதற்கான வட்டியையும் (மூன்று மாதங்களுக்கு 4.5%) ஆண்டொன்றுக்கு 18% இப் பெறுமதிகளிலிருந்து கழித்தபின்னரே கணக்கிடவேண்டும். இச்சீராக்கங்களைச் செய்த பின்னர் மருந்து விற்பனையானது தேறிய அளிப்புத் தொகையாக, விலையீடுகேள்வுப் பெறுமதியில் 2.98% ஐக் காட்டியது.

* அத்தியாவசிய மருந்துகள் என்பவை கடுநோய்களுக்கும் அடிப்படைச் சுகாதாரப் பராமரிப்புக்கும் அவசியமான மருந்துகள் எனக் கூறப்படலாம்.

** விற்பனை விலைக்கும் (இங்கு அ.ம.கூ. விலை) உற்பத்திப் பொருளின் மாறுபாடு விலைக்கும் இடையே உள்ள வேறுபாடு 'அளிப்பு' எனக் குறிப்பீடு செய்யப்படும்.

இந்நிலைமை 1981 ஜூன் வரை நீடித்தது. இத்தேதியின் பின்னர் கூட்டுத்தாபனத்துக்கு நியாயமான இலாப வரம்பு அனுமதிக்கப்பட்டது. எவ்வாருயினும், உதாரணமாக, இன்சுலின் போன்ற, நெடுங்காலப் பயன்பாட்டுக்குத் தேவைப்படும் மருந்துகள் மீது, கூட்டுத்தாபனம் குறைந்த வரம்பையே விதிக்கின்றது. இதற்கிடையில், இவ்வியாபாரத்துறையின் கணிசமானளவு பகுதி தனியார்துறையினுல் இடங்கொள்ளப்பட்டுவிட்டது. பொதுத்துறைக் கூட்டுத்தாபனத்தைக் காட்டிலும் இதில் பல அனுகூலங்கள் உண்டு. பொதுத்துறைக் கூட்டுத்தாபனம் பல வரையறைகளுக்குட்பட்டே இயங்கவேண்டிய நிர்ப்பந்தமுடையதாகும். பொது நிதிகளைப் பயன்படுத்தும் அத்தகைய ஒரு நிறுவனத்துக்கு கட்டுப்பாடுகள் இருக்கவேண்டிய தவசியமேயாகும்.


(28ம் பக்கத் தொடர்ச்சி)


உருளைக்கிழங்கு, அவரை மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் வாங்கும் உணவுப் பயிர்களையே விளைவிக்கிறார்கள். எல்லோருமே அதே பயிர்வகைகளை உற்பத்தி செய்வதால், அவை பெருமளவில் சந்தைக்கு வருகின்றன. வசதி குறைந்த மக்களின் வாங்கும் சக்தி குறைவாக இருப்பதாலும், அவற்றின் விலை மிகக் குறைந்து போகின்றன.

விவசாயிகள் தமது வருமானத்தை நிலையாகப் பெறுவதானால் அதிகம் உற்பத்தி செய்து, அதிகம் விற்பனை செய்ய வேண்டும். அதனால் மேலும் விலை வீழ்ச்சி ஏற்படும். இதன்மூலம் பொதுவான உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கவும் வழி உண்டாகும். ஆனால் விவசாயிகள் தங்கள் வருமானத்தைச் சரிசெய்வதற்கு வேறு மேலதிக வேலைகளைச் செய்ய வேண்டி ஏற்படும். அதன் மூலம் பெரிய பண்ணைகளுக்குத் தேவையான தற்காலிகத் தொழிலாளர் பெரும் எண்ணிக்கையில் கிடைக்கவும் வாய்ப்புண்டு.

விவசாயிகள் வேலைவாய்ப்பு ஆய்வும் ஏனைய ஆய்வுகளும் சிலி நாட்டின் கிராமப் பகுதிகளில் பணிபுரியும் சுயேச்சையான சமூக சேவை நிலையங்களுக்கும் ஏனைய ஸ்தாபனங்களுக்கும் தகவல்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக, கல்வி ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்துக்கு மேற்கண்ட ஆய்வின் தரவுகள் வழங்கப்பட்டன. "எமது ஆய்வு செயற்பாட்டுக்கு, நடைமுறைக்கு வரவேண்டும் என்பதே எங்கள் முக்கிய கொள்கையாகும்" என்று கிறிஸ்பி சொல்கிறார்.

"சிலியில் என்ன நடக்கிறது என்ற சரித்திரத்தை எமது ஆய்வு பதிவு செய்துகொண்டிருக்கிறது. இது எதிர்காலத்தில் மிகவும் முக்கியமானதாக இருக்கும். ஏனெனில் அந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். நாங்கள் கோபமடைய முற்படவில்லை. ஆனால் எது உண்மை என்பதை வெறுமனே சுட்டிக் காட்டுகிறோம்; அவ்வளவுதான்" என்றும் டாக்டர் கிறிஸ்பி தெரிவிக்கிறார்.






நாளொன்றுக்கு 940 தொன்களை உற்பத்தி செய்யக்கூடிய இயலளவைக் கொண்ட யூரியாத் தொழிற்சாலையின் விமானப் படம் மேலே.

(இடது புறத்தில்) மத்திய கட்டுப்பாட்டு அறை.

(கீழே) தொழிற்சாலையின் வான் படம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில்
செய்திப் பத்திரிகையாகப்
பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

வருடாந்த விலை விபரம்

ஸ்ரீலங்கா— ரூ. 32/-
தெற்கு ஆசியா—டொலர் 16/-
தென்கிழக்காசியா—டொலர் 18/-
ஆபிரிக்கா— டொலர் 18/-
ஜப்பான்— டொலர் 20/-
மத்தியகிழக்கு டொலர் 20/-
உலகின் ஏனைய நாடுகள்—
டொலர் 22/-

ஒரு பிரதி விலை—
உள்நாட்டு— ரூபா 2/50.
வெளிநாட்டு— டொலர் 2/

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org